விலை : 20.00
பக்கங்கள் : இருபது
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii


website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com

சங்கு 15 வள்ளுவர் ஆண்டு 2045 ஆவணி 23 திங்கட்கிழமை (08.09.2014) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 263

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
உலகத்தர ISO 14 001, 9001
சான்றிதழ் பெற்றுள்ள
ஒரே சீமெந்து ராம்கோ

# இலங்கைக்குள் வடக்கு-கிழக்கு தனி அரசாக இயங்க வேண்டும்

## தமிழரசு மாநாட்டில் முதலமைச்சர் விக்னேஸ்வரன் வலியுறுத்து



(வவுனியா)

சமஷ்டி என்ற சொல் சிங்களவர் அகராதியில் தனித்துப் போதல் என்றே பொருள்படுகின்றது. நாட்டைப் பிரித்தல் என்றே அர்த்தப்படுகின்றது. சமஷ்டி என்றசொல்லை அரசியல்வாதிகள் சகதி ஆக்கியுள்ளனர்.

வடக்கு கிழக்கு மாகாணங்கள் தம்மைத்தாமே நிர்வகிக்கும் முறையில் அரசியல் யாப்பு அமைய வேண்டும். தனித்துவமாகவுள்ள வடக்கு கிழக்கு மாகாணத்தை, தனி அலகாக்கி தானாக இயங்கவிட வேண்டுமென வடக்கு மாகாண சபையின் முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரன் வலியுறுத்தியுள்ளார்.

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் 15-வது தேசிய மாநாடு வவுனியா நகர கலாசார மண்டபத்தில் கடந்த மூன்று நாட்களாக இடம்பெற்றது.

இந்நிலையில் நேற்றைய மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றிய

19 ஆம் பக்கம் பார்க்க....

## மகிந்தரின் தமிழை கிண்டலடித்த விக்கி!

19 ஆம் பக்கம் பார்க்க....

## மயங்கினார் மாவை எம்.பி

(கொழும்பு)

இலங்கை தமிழரசுக் கட்சியின் பேராளர் மாநாட்டில் உரையாற்றிக் கொண்டிருந்த மாவை சேனாதிராஜா எம்.பி திடீரென மேடையில் மயங்கி வீழ்ந்தார்.

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பேராளர் மாநாடு நேற்று வவுனியாவில் நடைபெற்றது. இதில் கட்சியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான மாவை சேனாதிராஜா தனது நீண்ட உரையை ஆற்றிக் கொண்டிருந்தார்.

அப்போது திடீரென மயக்கமடைந்து வீழ்ந்தார். இதன் பின்னர் அவரின் உரை வாசித்து நிறைவு செய்யப்பட்டது.

மாவை சேனாதிராஜா இதற்கு முன்னரும் இருமுறை உரையாற்றிக்கொண்டிருந்தவேளை மயக்கமடைந்து வீழ்ந்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (செ-6)

## ஜப்பான் பிரதமர்-மகிந்த பேச்சு.

### அபிவிருத்தி, சர்வதேச ஒத்துழைப்பு குறித்து ஆராய்வு



(கொழும்பு)

இலங்கை வந்துள்ள ஜப்பானிய பிரதமர் ஷிண்ஸோ அபேவுக்கும் இலங்கை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கும் இடையில் நடந்த

19 ஆம் பக்கம் பார்க்க....

## ஐ.நா ஆணையாளருக்கு இலங்கை அழைப்பு

(கொழும்பு)

ஐ.நாவின் புதிய மனித உரிமை ஆணையாளராக வந்துள்ள இளவரசர் சயிட் அல் ஹுசைனுடன் இலங்கை விவகாரத்தை விவாதிக்க அரசாங்கம் தயாராக இருப்பதாக இலங்கை ஊடகத்துறை அமைச்சர் ஹெகலிய ரம்புக்வெல தெரிவித்துள்ளார்.

ஐ.நா மனித உரிமை ஆணையக விசாரணைக்கு இலங்கை ஒத்துழைக்க வேண்டும் என புதிய ஆணையாளர் தெரிவித்திருப்பதாக வெளியான ஊடகச் செய்தி பற்றி கருத்து கேட்கையில் அமைச்சர் ரம்புக்வெல இதனைத் தெரிவித்தார்.

ஐ.நாவின்மனித உரிமை ஆணையாளராக இருந்து நவநீதம்பிள்ளை ஒருதலைப்பட்சமாக செயல்பட்டார் என்பதை இலங்கை அரசு ஒளிவு மறைவின்றி வெளிப்படுத்தியிருந்தது என்றும் புதிய மனித உரிமை ஆணையாளர் அப்படி இருக்க மாட்

20 ஆம் பக்கம் பார்க்க....

### மூன்றாவது தடவையாக மகிந்த போட்டி

## சட்டச் சிக்கலை ஆராய நிபுணர்குழு நியமிப்பு



(கொழும்பு)

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ மூன்றாவது தடவையாக ஜனாதிபதியாக வரவேண்டுமெனில், நாடாளுமன்றில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை பெற்று இன்னுமொரு அரசியலமைப்பு மாற்றத்தையோ அல்லது சர்வஜன வாக்கெடுப்பையோ நடத்த வேண்டியிருக்கலாம் என இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தின் தலைவர் உபுல் ஜெயசூர்ய தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று முன்தினம் சனிக்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கருத்துத் தெரிவிக்கும் போதே, அவர் இந்தத்

19 ஆம் பக்கம் பார்க்க....

## சர்வதேச ஒத்துழைப்புடன் அகிம்சை வழிப் போராட்டம்

### முன்னெடுப்போம் என மாவை முழக்கம்

(வவுனியா)

சர்வதேச ஒத்துழைப்பு கிடைத்துள்ள சந்தர்ப்பத்தில் அகிம்சை வழியில் போராடவுள்ளோம் என தமிழரசுக் கட்சியின் புதிய தலைவராக பதவியேற்றுள்ள யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் தமிழரசுக்கட்சியின் தலைவரு [illegible] தெரிவித்தார்.

இலங்கை தமிழரசுக்கட்சியின் 15ஆவது தேசிய மாநாட்டில் சிறப்புரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் உரையாற்றுகையில்,

தமிழர் வீரத்தின் விளைநிலமாய் கற்சிலைமடுவும் பனங்காமமும் பின் முள்ளிவாய்க்காலும் தியாகத்தின் சுவடுகளும் அதன் பின்னணியில் வற்றாப்பளை அம்மன திருவருளும் கூடிய முல்லை நிலத்தின் பலதுறை வளமும் இணைந்திருக்கும் வன்னி நிலப்பரப்பிலே மீண்டும் போராடுவோம் என்று எழுச்சி மிகு தீர்மானத்தை எடுப்பது

19 ஆம் பக்கம் பார்க்க....

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கண்ணீர் அஞ்சலி



06.09.2014 அன்று இறைபதம் எய்திய
எமது கூட்டுறவு ஊழியர் தொழிற்சங்கத்தின்
உறுப்பினர் ம.தர்சன்
அவர்களின் அன்புத் தாயார்

**அமரர் மனோகரன் சொர்ணாம்பிகை**

அவர்களின் இழப்பால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

கூட்டுறவு ஊழியர் தொழிற்சங்கம்,
கிளை- நல்லூர் ப.நோ.கூ.சங்கம்

(7720)


## காணி விற்பனை

புங்கங்குளம் வீதி, யோகர் சுவாமி ஆச்சிரமத்திற்கு அருகாமையில் உள்ள 2 பரப்புக் காணி கிணறு, சுற்றுமதிலுடன் விற்பனைக்கு உண்டு. தரகர் தேவையில்லை.

தொடர்பு:
0775386241,
0777113480



## தென்னிந்திய யாத்திரை

**நாட்கள் 12 யாத்திரீகர் 10 ஆரம்பம் 10.09.2014**

மலைக்கோட்டை விநாயகர், பஞ்சபூதத் தலங்கள், ஆறுபடை வீடுகள், இராமேஸ்வரம், திருப்பதி, நவக்கிரக ஆலயங்கள், மேல் மருவத்தூர், அழகர்கோவில், பொற் கோவில், மீனாட்சி, சுந்தரேஸ்வரர், நவபாஷணம், ஸ்ரீரங்கம், தஞ்சாவூர், சமயபுரம், பார்த்தசாரதி, மாங்காடு, திருவேற்காடு, வெக்காளி அம்மன், தன் வந்திரி விஷ்ணு, இரத்தின கிரிமுருகன், திருகடையூர், சக்தி அம்மன்,வலம்சுழி விநாயகர், பிரித்திவிலிங்காதேவி, சென்னை சீரடிபாபா, ஐயப்பசுவாமி, உப்பிலியப்பன், அலமேலுமங்கா உட்பட 45 இற்கும் மேலான ஆலயங்களை தரிசிக்கலாம். எமது யாத்திரையில் யாழ்ப்பாணத்தில் இருந்து கொழும்பு வரவும். யாத்திரை முடிய கொழும்பில் இருந்து யாழ்ப்பாணம் திரும்பிச் செல்லவும் எமது செலவில் வாகன வசதி செய்து தரப்படும். அத்துடன் யாத்திரையின் போது ஆலயங்களில் எடுக்கும் 40 இற்கு மேற்பட்ட புகைப்படங்கள் இலவசமாக வழங்கப்படும்.

(புறப்படும் திகதியில் மாற்றம் வரலாம்)

விமான ரிக்கற், மூன்று வேளை உணவு, தரமான தங்கு மிடம், AC வாகன வசதி, குடிநீர், எயார் போட் போக வர வாகன வசதி உட்பட விபரங்கட்கு:

யாழ்ப்பாணம் தொடர்புகளுக்கு:
M.K.வாசகர் -
0772487939, 0755142362

கலாநிதி T.ஸ்ரீரெங்கநாதன் -
0777680102, 0113030806
தொடர்பு கொள்க.

(C-8445)


## மரண அறிவித்தல்

திருமதி
### சிவயோகநாயகி வேலாயுதபிள்ளை



வட்டுக்கோட்டையைப் பிறப்பிடமாகவும், அராலி வடக்கு குலனையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சிவயோகநாயகி வேலாயுதபிள்ளை அவர்கள் நேற்று (07.09.2014) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் வேலாயுதபிள்ளை (ஓய்வுபெற்ற கணக்காளர்) அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற முதுதமிழ்ப்புலவர் மு.நல்லதம்பி - தங்கரத்தினம் தம்பதிகளின் அன்புப் புதல்வியும், சுப்பிரமணியம் - அன்னம்மா தம்பதிகளின் அன்பு மருமகளும், மைதிலி, ராஜினி, ஜெயவாணி ஆகியோரின் அன்புத் தாயாரும், நவநீதநாதனின் (நவாஸ்) அன்பு மாமியாரும், கிரீஷனின் அன்புப் பேர்த்தியும், காலஞ்சென்ற ஞானப்பூங்கோதை, மணிதிருநாவுக்கரசு மற்றும் விவேகானந்தன், சிவச்செல்வன், தவயோகநாயகி, சாந்தநாயகி, சிவநாதன் ஆகியோரின் அன்புச் சகோதரியும், கனகமாணிக்கம், இராஜதுரை, பாப்பம்மா ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (08.09.2014) திங்கட்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அராலி வடக்கு இந்து மயானத்தில் நல்லடக்கம் செய்யப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கிறோம்.


அராலி வடக்கு,
குலனை.

இ

தகவல் :
குடும்பத்தினர்.

கர்த்தருக்குள் நித்திரை அடைந்த
### திருமதி சிசிலியா குணமணி இராசரத்தினம்
அவர்களின்
## 4-ம் ஆண்டு நன்றி செலுத்துதல்

மண்ணில்
18
.
06
.
1929



விண்ணில்
08
.
09
.
2010

குணமணி அம்மாவின் மரணம் எதிர் நோக்கியிருக்கும் நம்பிக்கையின் அடிப்படையில் கிறிஸ்துவுக்குள் வாழ்ந்து மரித்தால் அது வெற்றியை நோக்கிய பயணம். குணமணி அம்மாவின் சான்றுள்ள கிறிஸ்தவ வாழ்வின் மரணம் ஒரு வெற்றியே. அந்த நம்பிக்கையுடன் அவரது வாழ்விற்காக அவரிடம் இருந்து பெற்றுக் கொண்ட ஆசீர்வாதங்களுக்காய் நன்றி கூறுவோம்.

'நானே உயிர்தெழுதலும் ஜீவனுமாயிருக்கிறேன். என்னை விசுவாசிக்கின்றவன் மரித்தாலும் பிழைப்பான்' (யோவான் 11:25)


'பெதனி'
கடற்கரை வீதி, பருத்தித்துறை.

(C-8442)

– குடும்பத்தினர்

## 31ம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

மலர்வு
01
-
07
-
1942



உதிர்வு
11
-
08
-
2014

அமரர்
### திருமதி தவமணி தம்பிராசா

அன்னையே உன் அன்பின் அரவணைப்பில்
ஆழ்ந்திருந்த எம்மை ஆறாத் துயரத்தில் ஆழ்த்தி
எங்கு சென்றீர்! ஆண்டாண்டு காலமானாலும் உம்
அமைதி, பொறுமை, சாந்தம் என்றென்றும் எம்மனதை
விட்டகலாது. நீங்கள் என்றும் இறைபதத்திருக்க
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

11.08.2014 அன்று அமரத்துவம் அடைந்த எமது அன்னை திருமதி தவமணி தம்பிராசாவின் மறைவுச் செய்தி கேட்டு உடன்இருந்து உதவிய உற்றார், உறவினர், நண்பர்கள் மற்றும் நினைவஞ்சலி பிரசுரித்தோர், தொலைபேசி மூலமும், மலர்வளையம் சாத்தியும் அனுதாபம் தெரிவித்தோர், யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சை அளித்த வைத்திய கலாநிதிகள், தாதியர் மற்றும் சிற்றூழியர்களுக்கும், இறுதி யாத்திரையில் கலந்து கொண்டோருக்கும், இன்று நடைபெறும் அந்தியேட்டி கிரியை நடத்தும் அந்தணருக்கும், இன்றைய பிரார்த்தனையிலும், மதிய போசனத்திலும் கலந்து கொள்ளும் அனைத்து அன்பு உள்ளங்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகளை சமர்ப்பிக்கின்றோம்.

மஞ்சத்தடி, இணுவில்.

(7721)

இங்ஙனம்: குடும்பத்தினர்


## வெளிநாடுகளுக்கான துரித தபால்கள் பொதிகள் சேவை

வடமாகாணத்தின் பொதிகள் சேவை துறையின் முன்னோடிகள்
உங்கள் உறவுப்பாலம் நாங்களே!

- இலட்சக்கணக்கான வாடிக்கையாளர்களைக் கொண்டு ஆகாய, கடல் மார்க்கமாக
- அதிவிரைவு, பாதுகாப்பு, நம்பகத்தன்மையுடன் எங்கள் சேவை
- முக்கிய ஆவணங்கள், மிளகாய்த்தூள், கருவாடு, எண்ணெய் வகைகள், அனுமதிக்கப்பட்ட மருந்துப்பொருட்கள் உட்பட அனைத்துப்பொருட்களையும்
- 3-4 நாட்களில் உலகின் எப்பாகத்திற்கும் குறித்த முகவரியில் ஒப்படைக்கின்றோம்.



வெளிநாடுகளிற்கான பொதிகள் சேவையை வழங்கிக்கொண்டிருக்கும் முன்னணி நிறுவனம்



அருள்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட் இல.10 புதிய மாநகரசபை கட்டிடத்தொகுதி கஸ்தூரியார் வீதி யாழ்ப்பாணம். 0212223536


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்தியாவை குறிவைக்கிறதா பாகிஸ்தான் இராணுவத்தரப்பு



பாகிஸ்தான் இராணுவமும், அந்நாட்டின் உளவு அமைப்பான ஐ.எஸ்.ஐ.எஸ் ஐயும் தீவிர வாதம் மூலம் மறைமுகமாக இந்தியாவை அச்சுறுத்தவும் பாகிஸ்தான் நாட்டுப் பிரதமர் நவாஸ் ஷெரீஃபுக்கு நெருக்கடி கொடுக்கவும் முயன்று வருகின்றன என்று அமெரிக்காவின் உளவு அமைப்பின் முன்னாள் அதிகாரி கூறியுள்ளார்.

சி.ஐ.ஏ.வின் முன்னாள் ஆய்வாளர் புரூஸ் ரீடல் இதுகுறித்து, "டெய்லி பீஸ்ட்" என்ற அமெரிக்க செய்தி வலைத்தளத்தில், எழுதியுள்ள கட்டுரையில் கூறியிருப்பதாவது,:

அல்-கொய்தா அமைப்பு இரு தினங்களுக்கு முன்பு வெளியிட்டுள்ள வீடியோவில், இந்திய துணைக்கண்டத்தில் புதிய கிளையைத் தொடங்கப் போவதாக அதன் தலைவர் அய்மான்-அல்-ஜவாஹிரி அறிவித்தார்.

பாகிஸ்தானில் தலைமறைவாக இருந்து கொண்டு அவர் அந்த வீடியோவை வெளியிட்டுள்ளார்.

அவருக்கு பாகிஸ்தானின் ஐ.எஸ்.ஐ.எஸ் அமைப்பு உதவி செய்து வருகிறது. மேலும், அவர் நீண்ட காலமாக லஷ்கர்-இ-தொய்பா அமைப்புடனும், அதன் தலைவர் ஹபீஸ் சையதுடன் தொடர்பில் உள்ளார். மேலும், பாகிஸ்தான் உள்நாட்டு அரசியலில் அவர்கள் குழப்பம் ஏற்படுத்தி வருகின்றனர்.

இந்தியாவில் பொதுத்தேர்தலில் நரேந்திர மோடி வெற்றிபெற்ற பிறகு, பதவியேற்பு விழா நெருங்கிக் கொண்டிருந்த வேளையில், ஆப்கானிஸ்தானின் ஹெராட் நகரில் உள்ள இந்திய தூதரகத்தின் மீது தீவிரவாதிகள் தாக்குதல் நடத்தினர். பாகிஸ்தான் பிரதமர் நவாஸ் ஷெரீஃபை இழிவுபடுத்தும் நோக்கத்திலேயே அந்தத் தாக்குதல் நடத்தப்பட்டது.

லஷ்கர்-இ-தொய்பா இயக்கத்தினர் இந்தத் தாக்குதலில் ஈடுபட்டதாக அமெரிக்க வெளியுறவுத்துறை பகிரங்கமாக குற்றம்சாட் டியது.

பாகிஸ்தானின் ஐ.எஸ்.ஐ.எஸ் அமைப்புடன லஷ்கர்-இ-தொய்பா இயக்கத்தினர் நெருங்கிய தொடர்பில் உள்ளனர்.

எனவே, ஐ.எஸ்.ஐ.எஸ். ஒப்புதலின்றி இந்திய தூதரகத்தின் மீது லஷ்கர்-இ-தொய்பா இயக்கத்தினர் தாக்குதல் நடத்தியிருக்க முடியாது.

பாகிஸ்தானில் சுதந்திரமாக நடமாடும் லஷ்கர்-இ-தொய்பாவின் தலைவர் ஹபீஸ் சையதும், அடிக்கடி தொலைக்காட்சிகளில் தோன்றி, அமெரிக்காவுக்குக் கண்டனம் தெரிவித்து பேட்டியளித்து வருகிறார்.

பாகிஸ்தானில் நவாஸ் ஷெரீஃப், தேர்தலில் மிகப்பெரிய அளவில் வெற்றி பெற்ற போதிலும், முன்னாள் இராணுவதலைமைத் தளபதி பர்வேஸ் முஷாரஃப் மீது தேசத் துரோக வழக்கு தொடர்ந்து, அவரை நாட்டை விட்டு வெளியே செல்ல முடியாதவாறு தடுத்த தால், ஷெரீஃப் மீது இராணுவத்தினர் அதிருப்தியில் உள்ளனர். மும்பைத் தாக்குதலைப் போன்றோ, ஹெராட் தாக்குதலைப் போன்றோ மேலும் ஒரு தாக்குதலை லஷ்கர்-இ-தொய்பா நடத்தினால், அது இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் இடையேயான உறவில் இதுவரை இல்லாத அளவுக்கு மிகப் பெரிய நெருக்கடியை ஏற்படுத்தும்.

இதுபோன்ற அச்சுறுத்தல்களை எதிர் கொள்வதற்கு இந்தியாவும், அமெரிக்காவும் இணைந்து செயறபட வேண்டும் என்று அந்தக் கட்டுரையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ)

## கும்பாபிஷேகம்

யாழ்.அல்லைப்பிட்டி இனிச்ச புளியடி அருள்மிகு ஸ்ரீ முருகன் கோவில் பாலஸ்தாபன கும்பாபி ஷேகமும் அடிக்கல் நாட்டு விழாவும் இன்று காலை 9 மணிமுதல் 12 மணிவரை இடம்பெறவுள்ளது. (இ)

CIMA
Chartered Institute of Management Accountants
@
Wisdom
021 2220727 | 021 7200777

## நாடு கடத்தப்பட்ட இருவர் கட்டுநாயக்கவில் கைது

அபுதாபியிலிருந்து நாடுகடத்தப்பட்ட இருவரை பயங்கரவாத புலனாய்வு பிரிவினர், கட்டுநாயக்க பண்டாரநாயக்க விமான நிலையத்தில் வைத்து நேற்று ஞாயிற்றுக்கிழமை கைது செய்துள்ளனர்.


போலியான கடவுச்சீட்டுக்கள் ஊடாக பயணித்தமை மற்றும் தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பை மீளவும் கட்டியெழுப்புவதற்கு நடவடிக்கை எடுத்தனரா? என்பது தொடர்பில் விசாரணைகளை மேற்கொள்வதற்காக இவ்விருவரும் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

பாலச்சந்திரன் தவபாலன் அனுஷன் (வயது 20), செபஸ்தியன் பிள்ளை றொபட் (வயது 43) ஆகிய இருவருமே கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதில் செபஸ்தியன் பிள்ளை றொபட் என்பவர் 2009 ஆம் ஆண்டு ஏப்ரல் 19 ஆம் திகதி பயங்கரவாத புலனாய்வு பிரிவினரால் கைது செய்யப்பட்டு 2010ஆம் ஆண்டு ஜனவரி 22 ஆம் திகதி பிணை நிபந்தனையுடன் விடுவிக்கப்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது. (இ)

# ஆணையாளரின் குற்றச்சாட்டுக்கு ஆரியசிங்க பதிலளிக்க ஏற்பாடு!





(கொழும்பு)

ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையில் இலங்கைக்கு எதிராக சுமத்தப் பட்டுள்ள குற்றச்சாட்டுக்களுக்கு பதிலளிக்கும் முனைப்புக்களில் இலங்கை அரசாங்கம் தீவிரம் காட்டி வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையின் 27ஆம் அமர்வுகளில் இலங்கை மனித உரிமை மீறல் விவகாரம் தொடர்பிலான குற்றச்சாட்டுக்களுக்கு பதிலளிக்கும் பொறுப்பு, ஜெனீவாவிற்கான இலங்கை வதிவிடப் பிரதிநிதி ரவிநாத் ஆரியசிங்கவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

அமர்வுகளின் ஆரம்ப நாளில் இலங்கைக்கு எதிராக குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்படலாம் எனவும் அதற்கு, ரவிநாத் ஆரியசிங்க தலைமையிலான பிரதிநிதிகள் பதிலளிப்பார்கள் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையின் புதிய ஆணையாளர் இளவரசர் அல் ஹுசெய்னின் உரையில் இலங்கை தொடர்பில் பல முக்கிய விடயங்களை குறிப்பிடவுள்ளார்.

இலங்கை யுத்தக் குற்றச் செயல்கள் தொடர்பில் ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையினால் நடத்தப்பட்டு வரும் விசாரணைகள் தொடர்பில் எதிர்வரும் 24ஆம் திகதி ஆணையாளர் ஹுசெய்ன் வாய்மொழி மூல அறிக்கை சமர்ப்பிக்க உள்ளார். வாய்மொழி மூல அறிக்கையில் சுமத் தப்படும் குற்றச்சாட்டுக்களுக்கு ரவிநாத் ஆரியசிங்க பதிலளிப்பார் என எதிர்பார்க்கப்படுகிறது. (இ)

## இராசி பலன்

08.09.2014
ஆவணி 23, திங்கட்கிழமை
சூரிய உதயம் காலை 6.03 மணிக்கு
சதுர்த்தசி முற்பகல் 10.40 மணிவரை
அவிட்டம் காலை 6.48 மணிவரை
சதயம் பின்னிரவு 5.13 மணிவரை
இராகுகாலம் 7.34-9.04 மணிவரை
சுபநேரம் 12.04-1.34 மணிவரை
பூரணை விரதம்

வளவன்

**மீனம்**: உறவினர் அன்புத் தொல்லைக்கு ஆளாகலாம், ஆதாயமில்லாத அலைச்சல்கள் உருவாகும் கொடுக்கல் வாங்கல்களை ஒழுங்குபடுத்தும் எண்ணம் உருவாகும். சயன சுகக் குறைவான நாள்.

**மேடம்**: ஆனந்தமான நாள், ஆற்றல் மிக்கவர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும், எடுத்த காரியங்களில் முன்னேற்றம் ஏற்படும், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், போசன சுகமுண்டு.

**இடபம்**: சொல்லை செயலாக்கி காட்டுவீர்கள், செய்தொழில் மேன்மையுண்டு, தேகாரோக்கியம் சீரடையும், காரிய அனுகூலமுண்டு, சமுதாயத்தில் உயர்ந்த நிலைக்கு வரத் தோன்றும்.

**மிதுனம்**: பாதியில் நின்ற பணிகளை மீதியும் தொடர்வீர்கள், புதிய திட்டங்கள் கைகூடும், தந்தை வழி உறவினர்களால் நன்மையுண்டு, வழிபாட்டால் சிறப்பினை காண வேண்டிய நாள்.

**கும்பம்**: விருப்பங்கள் நிறைவேற விநாயகரை வழிபட வேண்டிய நாள், ஆழ்ந்த சிந்தையுண்டு, விரயங்கள் கூடும், நேற்றைய பிரச்சினையொன்று இன்று நல்ல முடிவுக்கு வரும்.

**கடகம்**: கவலைகள் தீர கந்தனை வழிபட வேண்டிய நாள், நேசித்த ஒருவருடன் யோசித்து பேசும் சூழ்நிலை உருவாகும், மருத்துவச் செலவுகள் கூடும், வேலைச் சுமை அதிகரிக்கும்.

**மகரம்**: எதிர்கால நலன் கருதி முக்கிய முடிவுகள் எடுப்பீர்கள், பிரியமான சிலரின் சந்திப்புண்டு, வார்த்தைகளில் நிதானம் தேவை, பொது வாழ்வில் புகழ் கூடும், வருமானம் திருப்தி தரும்.

**சிம்மம்**: தொலைபேசி வழித் தகவல் மகிழ்ச்சி தரும், நண்பர்களின் சந்திப்பால் பரவசமடைவீர்கள், பயணங்களால் பலனுண்டு, குடும்பத்தில் அந்நியோன்னியம் அதிகரிக்கும், போசனசுகமுண்டு.

**தனுசு**: நீண்ட நாளைய பிணக்குகளில் திருப்பங்கள் ஏற்படலாம், உடன் பிறப்புக்களின் ஒத்துழைப்பால் உற்சாகமடைவீர்கள், வழிபாடுகளில் நம்பிக்கை கூடும், பயணங்கள் கைகூடும்.

**விருச்சிகம்**: உறவினர் வருகையுண்டு, குடும்பத்தேவைகளை பூர்த்தி செய்ய முற்படுவீர்கள், எடுத்த காரியங்களை முடிப்பதில் கண்ணும் கருத்துமாக இருப்பீர்கள், பயணங்கள் கைகூடும்.

**துலாம்**: கொள்கைப் பிடிப்போடு செயற்படுவீர்கள், கோரிக்கைகள் நிறைவேற கோயிலுக்கு செல்ல வேண்டிய நாள், ஆன்றோர் சந்திப் புகள் இடம்பெறலாம், சேமிப் பை உயர்த்தும் எண்ணம் உருவாகும்.

**கன்னி**: சுவாரஸ்யமான நாள், செய்தொழிலில் சிறப்புகள் வந்து சேரலாம், கொடுக்கல் வாங்கல்கள் ஒழுங்காகும், வருமானம் திருப்தி தரும், மறைமுகப் போட்டிகள் மாறும், ஆரோக்கியம் சீராகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்திரா நிதி நிறுவனத்தை சுவீகரித்தது கொமர்ஷல் வங்கி



இலங்கை மத்திய வங்கி முன்வைத்துள்ள நிதித்துறை ஒருங்கிணைப்பு திட்டத்தின் கீழான முதலாவது பரிமாற்ற நடவடிக்கைகளுள் ஒன்றாக கொமர்ஷல் வங்கி வரையறுக்கப்பட்ட இந்திரா பினான்ஸ் நிறுவனத்தை நூறு வீதம் தனதாக்கியுள்ளது. கொமர்ஷல் வங்கி தலைமையகத்தில் 2014 செப்டம்பர் முதலாம் திகதி செய்து கொள்ளப்பட்ட பங்கு விற்பனை மற்றும் கொள்வனவு உடன்படிக்கை மூலம் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

கொமர்ஷல் வங்கியின் முகாமைத்துவப் பணிப்பாளரும் பிரதம நிறைவேற்று அதிகாரியுமான ஜெகன் துரைரட்ணம், பிரதம செயற்பாட்டு அதிகாரி எஸ். ரெங்கநாதன், கூட்டாண்மை வங்கிப் பிரிவின் பிரதிப்பொது முகாமையாளர் சனத் மானதுங்க, மனித வள முகாமைத்துவ பிரதிப்பொது முகாமையாளர் இசுறு திலகவர்தன, கூட்டாண்மை மற்றும் முதலீட்டு வங்கிப் பிரிவின் உதவிப் பொது முகாமையாளர் நவீன் சூரியாராச்சி, இந்திரா பினான்ஸ் நிறுவனத்துக்கு பிரதம நிறைவேற்று அதிகாரியாக நியமிக்கப்பட்டுள்ள அதுல சமரசிங்க, கம்பனி செயலாளர் திருமதி. ரஞ்சனி கமகே, சட்டப் பிரிவு பிரதம முகாமையாளர்நாமல் கமகே ஆகியோர இந்நிகழ்வின் போது வங்கியின் சார்பாக சமுகமளித்திருந்தனர்.

வரையறுக்கப்பட்ட இந்திரா நிதி நிறுவனத்தின் சார்பாக பிர தான பங்குரிமையாளர் இந்திரா சில்வா, பணிப்பாளர்களான ருஷங்க சில்வா, அதுல சில்வா, முகாமைத்துவ பணிப்பாளர்சாலிய ராஜ கருணா, கம்பனி செயலாளர சந்திம விஜேதுங்க ஆகியோர் சமுகமளித்திருந்தனர்.

கொமர்ஷல் வங்கியின் குத்தகை நடவடிக்கைகளை கணிசமாக ஸ்திரப்படுத்த இந்த சுவீகரிப்பு பெரிதும் உதவும். மோட்டார் வாகன இறக்குமதி மற்றும் குத்தகை வர்த்தகத்தில் உறுதியான பங்கினைக் கொண்டுள்ள இந்திரா டிரேடர்ஸ் குறைந்த விலையில் மீள் நிதி தெரிவுகளை வாடிக்கையாளர்களுக்கு வழங்க இது வழிவகுக்கும் என்று வங்கி தெரிவித்துள்ளது.

1969-ல் ஸ்தாபிக்கப்பட்ட கொமர்ஷல் வங்கியே இலங்கையின் மிகப் பெரிய தனியார் வங்கியாகவும், உலகின் தலைசிறந்த ஆயிரம் வங்கிகளுள் கடந்த 4 வருடங்களாக தொடர்ந்து இடம் பிடித்துள்ள இலங்கையின் ஒரேயொரு வங்கியாகவும் உள்ளது இதுவேயாகும். அத்தோடு 2013ம் ஆண்டில் இலங்கையின் மிகச் சிறந்த 10 கூட்டாண்மை பிரஜைகளில் ஒன்றாகவும் இலங்கை வர்த்தகச் சபையால் தெரிவு செய்யப்பட்டிருந்தது. கடந்த பத்தாண்டுகளாக இலங்கையின் மிகவும் கௌரவத்துக்குரிய வங்கியாக LMD தர வரிசையில் தொடர்ந்து இடம்பிடித்துள்ளது.

இலக்கம் 182, கட்டுக்ஸ்தொட்ட வீதி, கண்டி என்ற முகவரியில் அமைந்துள்ள வரையறுக்கப்பட்ட இந்திரா பினான்ஸ் நிறுவனம் 1987-ல் ஒருங்கிணைக்கப்பட்டது. 2007-ம் ஆண்டில் இந்த கம்பனிக்கு விஷேட குத்தகை நிறுவனத்துக்கான அனுமதிப் பத்திரம் வழங்கப்பட்டது. 2013-ல் அனுமதியளிக்கப்பட்ட நிதிக் கம்பனி என்ற அங்கீகாரத்தையும் இது பெற்றது.

தற்போது நாடு முழுவதும் 11 இடங்களில் இதன் அலுவலகங்கள உள்ளன.




# கடந்த வாரம் பங்குச்சந்தை

கொழும்பு பங்குச்சந்தை கடந்த வாரம் மூன்று வருடங்களில் பதிவாகியிருந்த உயர்வான பெறுமதியை பதிவு செய்திருந்தது. இதன் காரணமாக குறுங்கால அடிப்படையில் கொழும்பு பங்குச் சந்தையில் வருமான மீட்டுவதற்கான சிறந்த வாய்ப்பு சந்தையில் ஏற்பட்டுள்ளதாக பங்கு முகவர்கள் கருத்து தெரிவித்திருந்தனர். குறிப்பாக வங்களின் வட்டி வீதங்கள் குறைந்த நிலையில் காணப்படுவதால், பெருமளவான முதலீட்டாளர்களின கவனத்தை கொழும்பு பங்குச சந்தை ஈர்த்துள்ளது. வெள்ளிக்கிழமை நடவடிக்கைகள் நிறைவடைந்தபோது அனைத்து பங்கு விலைச் சுட்டெண் 7,087.41 ஆகவும் S&P சிறிலங்கா 20 சுட்டி 3932.81 ஆகவும் பதிவாகியிருந்தன.

செப்டெம்பா 01-ம் திகதியுடன் ஆரம்பமான கடந்த வாரத்தின் இறுதியில் மொத்த பங்கு புரள்வு பெறுமதியாக ரூ.6,197,383,895 அமைந்திருந்தது. கடந்த வாரம் மொத்தமாக 54,116 பங்கு கொடுக்கல் வாங்கல்கள் இடம்பெற்றன. இதில் உள்நாட்டு கொடுக்கல் வாங்கல்கள் 52,344 ஆகவும் வெளிநாட்டு கொடுக்கல் வாங்கல் கள் 1,772 ஆகவும் பதிவாகி யிருந்தன.

கடந்த திங்கட்கிழமை சந்தையில் சிலோன் டொபாக்கோ கம்பனி மற்றும் நெஸ்லே லங்கா ஆகிய பங்குகளின் மீது விலைச் சரிவுகள் பதிவாகியிருந்ததன் காரணமாக சுட்டி சரிவான பெறுமதிகளை பதிவு செய்திருந்தது.

நிறுவனசார் மற்றும் உயர் நிகர பெறுமதி வாய்ந்த ஈடுபாடுகள் செலான் வங்கி பங்குகளின் மீது பதிவாகியிருந்தது. இது புரள்வு பெறுமதியில் 38 வீத பங்களிப்பை வழங்கியிருந்தது.

யூனியன் வங்கி, சனச அபிவிருத்தி வங்கி ஆகிய பங்குகளின் மீது சிறியளவிலான முதலீட்டாளர்களின் ஈடுபாடு பதிவாகியிருந்தது. லங்கா ஐஒசி, லாஃவ்ஸ் காஸ் மற்றும் சம்பத் வங்கி பங்குகளும் அதிகளவு கைமாறியிருந்தன.

மறுநாள் செவ்வாய்க்கிழமை சுட்டிகள் மறைபெறுமதியில் நிறைவடைந்திருந்தன. புரள்வு பெறுமதி 1 பில்லியன் ரூபாவை கடந்திருந்தது.

அடுத்த நாள் புதன்கிழமை சிலோன் டொபாக்கோ கம்பனி, ஜோன் கீல்ஸ் ஹோல்டிங்ஸ் மற்றும் கொமர்ஷல் வங்கி ஆகியவற்றின் மீது விலை உயர்வுகள் பதிவாகியிருந்தமையின் காரணமாக சந்தை உயர் பெறுமதிகளை பதிவு செய்திருந்தது.

நிறுவனசார் மற்றும் உயர் நிகர பெறுமதி வாய்ந்த ஈடுபாடு ஜோன் கீல்ஸ் ஹோல்டிங்ஸ், கொமர்ஷல் வங்கி, சம்பத் வங்கி மற்றும் யூனியன் வங்கி பங்குகள் மீது பதிவாகியிருந்தது. கொமர்ஷல் கிரெடிட், டுனாமிஸ் கெப்பிட்டல் மற்றும் என்ட்ரஸ்ட் செக்கியுரிட்டீஸ் போன்ற நிதித்துறை கம்பனிகளின் மீது சிறியளவிலான முதலீட்டாளர்கள் தமது கவனத்தை செலுத்தியிருந்தனர். இதேவேளை, வெளிநாட்டவர்கள் அதிகளவு பங்கு கொள்வனவில் ஈடுபட்டிருந்தனர்.

வியாழக்கிழமை, நெஸ்லே லங்கா மற்றும் புரொப்பர்டி டிவலப்மன்ட் ஆகியவற்றின் பங்களிப்புடன் சந்தை நேர்பெறுமதியில் நிறைவடைந்திருந்தது. நிறுவனசார் மற்றும் உயர் நிகர பெறுமதி வாய்ந்த ஈடுபாடு ஜோன் கீல்ஸ் ஹோல்டிங்ஸ், லங்கா ஐஒசி மற்றும் டயலொக் ஆக்சியாடா ஆகிய பங்குகளின் மீது பதிவாகியிருந்தது. கொமர்ஷல் வங்கி, எயிட்கன் ஸ்பென்ஸ் மற்றும் சிலோன் டொபாக்கோ போன்ற பங்குகளின் மீது மொத்த பங்கு கைமாறல்கள் பதிவாகியிருந்தன. இவை புரள்வு பெறுமதியில் 43வீத பங்களிப்பை வழங்கியிருந்தன. ஒடெல் மற்றும் மாரவில ரிசோர்ட்ஸ் ஆகியவற்றின் மீது கலப்பு ஈடுபாடு பதிவாகியிருந்தது.

வெள்ளிக்கிழமை சந்தையில் கொமர்ஷல் வங்கி, ஹற்றன் நஷனல் வங்கி மற்றும் சிலோன் கோல்ட் ஸ்ரோர்ஸ் ஆகியவற்றின் பங்களிப்புடன் சுட்டிகள் நேர் பெறுமதிகளுடன் நிறைவடைந் திருந்தன. புரள்வு பெறுமதி 1.2 பில்லியன் ரூபாவை கடந்திருந் தது.

இதேவேளை, கடந்த வார கொடுக்கல் வாங்கல் நடவடிக்கைகளில் சுவதேஷி, டுனாமிஸ் கெப்பிட்டல், சிட்ரஸ் வாஸ கடுவ, என்ட்ரஸ்ட் செக், மற்றும் ஹரிஸ்சந்திரா போன்றன முதல் 5 சிறந்த இலாப மீட்டிய பட்டியலிடப்பட்ட கம்பனிகளாக பதிவாகியிருந்தன.


செலின்சிங், லங்கா சீமெந்து, இன்டஸ்ரியல் ஏஎஸ்பிஎச், லேக் ஹவுஸ் பிரின் மற்றும் மேர்க் சிப்பிங் போன்ற நிறுவனங்களின் பங்குகள் அதிகளவு நஷ்டமீட்டியதாக பதிவாகியிருந்தன.

## மக்கள் தொகையை தாண்டும்

நடப்பாண்டின் இறுதியில் உலகளவில் மொபைல்போன்கள் எண்ணிக்கை மக்கள் தொகை யை தாண்டும் என சிலிகான் இந்தியா தெரிவித்துள்ளது. சர்வதேச தொலைத்தொடர்பு ஒன்றிய மதிப்பீட்டின்படி தற்போது சர்வதேச அளவில் 600 கோடியாக உள்ள மொபைல்போன் பயன்பாடு நடப் பாண் டின் இறுதியில் 730 கோடியாக அதிகரிக்கும் என மதிப்பிடப் பட்டுள் ளது. இது உலக மக்கள் தொகை அளவான 700 கோடியை காட்டிலும் அதிகம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

## கொழும்பு தங்க நிலையம்

# 'மீன் கடை' நகைக்கடையானது



நகர அபிவிருத்தி அதிகாரச்சபையினால் நிர்மாணிக்கப்பட்டுள்ள புறக்கோட்டை இரத்தினக் கல் மற்றும் தங்க ஆபரண கடைத் தொகுதி கடந்த வெள்ளிக்கிழமை மாலை உத்தியோகபூர்வமாக திறந்து வைக்கப்பட்டது.

பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ பிரதம அதிதியாகக் கலந்துகொண்ட இந்த நிகழ்வில் பாதுகாப்பு மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ உட்பட முக்கியஸ்தர்கள் பலர் பங்குபற்றினர்.

1894-ம் ஆண்டு ஆங்கிலேயர் காலம் முதல் சென். ஜோன்ஸ் மீன் சந்தையாகவும் 1983-ம் ஆண்டு முதல் மீன் சந்தையுடன் மத்திய கொழும்பு சந்தை கட்டடத் தொகுதியாகவும் மிக நீண்ட காலமாக இயங்கி வந்த மேற்படி கட்டடத் தொகுதி நகர அபிவிருத்தி அதிகார சபையினால் நவீன முறையில் புனரமைக்கப்பட்டுள்ளது.

மேற்படி அபிவிருத்தி திட்டத்தின் முதல் கட்டமாக கீழ் மற்றும் முதலாம் மாடிகளில் 83 கடைகள் அமைக்கப்பட்டுள்ளன. இவற்றில் 80 கடைகள் இரத்தினக் கல் மற்றும் தங்க ஆபரண காட்சி அறைகளாக பயன்படுத்தப்படவுள்ளன. அத்துடன் இரத்தினக் கல் மற்றும் தங்க ஆபரண அதிகார சபையின் கிளை ஒன்றும் வாடிக்கையாளர்களின் நலனை கருத்திற்கொண்டு இரண்டு வங்கிகளும் திறந்து வைக்கப்பட்டன.

இராணுவத்தின் ஒத்துழைப்புடன் இந்த புனரமைப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.

# இல. மத்திய வங்கிக்கு 4 புதிய ஆளுநர் நியமனம்

இலங்கை மத்திய வங்கிக்கு புதிதாக 4 உதவி ஆளுநர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

டி.வசந்த, சி.பி.ஏ.கருணாதிலக்க, எச்.ஏ.கருணாரத்ன மற்றும் திறைசேரியின் தற்போதைய பிரதி செயலாளர் எஸ்.ஆர்.ஆட்டிகல ஆகியோரே உதவி ஆளுநர்களாக நியமிக்கப்பட்டுள்ளதாக இலங்கை மத்திய வங்கி அறிவித்துள்ளது.

கடந்த மாதம் 28-ம் திகதி முதல் அமுலுக்குவரும் வகையில் நிதிச் சபையினால் இந்த நியமனம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

எதிர்கால சவால்களை வெற்றிக்கொள்வதற்காக இலங்கை மத்திய வங்கி முன்னெடுத்துள்ள திட்டத்தின்கீழ் இந்த பதவி உயர்வுகள் வழங்கப்பட்டுள்ளதாக மத்திய வங்கியின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# 'ஈ. கஸ்டம்ஸ் ஆரம்பம்'

ஏற்றுமதி நடவடிக்கைகளை கடந்த முதலாம் திகதி முதல் இலத்தரனியல் முறைமைக்கு அமைய மேற்கொள்வதற்கு இலங்கை சுங்கம் தீர்மானித்துள்ளது.

இந்த புதிய செயற்றிட்டம் 'ஈ கஸ்டம்ஸ்' என்ற பெயரில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

ஏற்றுமதி செயற்பாட்டினை செயற்றிறன்மிக்கதாக முன்னெடுப்பதே 'ஈ கஸ்டம்ஸ்' முறைமையின் முக்கிய இலக்கு என சுங்கப் பேச்சாளரும் சட்டப் பிரிவு பணிப்பாளருமான லெஸ்லி காமினி குறிப்பிட்டுள்ளார்.

# வெளிநாட்டு நாணயமாற்று வீதம்

(வார இறுதியில்)

| நாணயம் | கொ/வு விலை ரூபா. | வி/னை விலை ரூபா. |
|---|---|---|
| ஐக்கிய அமெரிக்க டொலர் | 128.75 | 131.63 |
| பவுண்ட்(ஐக்கிய இராச்சியம்) | 209.35 | 215.34 |
| யூரோ (ஐரோ.ஒன்றியம்) | 165.60 | 171.05 |
| சுவிஸ் பிராங் | 137.19 | 142.20 |
| கனேடிய டொலர் | 117.68 | 121.69 |
| அவுஸ்திரேலிய டொலர் | 119.37 | 123.88 |
| சிங்கப்பூர் டொலர் | 102.08 | 105.44 |
| ஜப்பான் யென் | 1.21 | 1.25 |
| இந்திய ரூபாய் | சுட்டி விலை 2.15 | |
| ஐக்.அரபு இராச்சிய டிராம் | சுட்டி விலை 35.44 | |

மூலம்: இலங்கை மத்திய வங்கி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருமதி மங்கயர்க்கரசி இராஜாராம் அமரத்துவ நினைவுக் குறிப்பு

இரசாயனவியல் துறையில் புகழ் பூத்த ஆசிரியரும் ஆசிரிய ஆலோசகரும் முன்னாள் பிரதிக் கல்விப் பணிப்பாளருமாகிய அமரரின் மறைவு யாழ்ப்பாணக் கல்விச் சமூகத்திற்கு ஓர் பேரிழப்பாகும். அன்னாரின் இறுதிக் கிரியைகளை கல்விச் சமூகம் முன்னின்று நடத்தியமை இதற்குச் சான்று பகரும்.

கல்விப் பொதுத்தராதர உயர்தரப்பரீட்சை இரசாயனவியல் பாடக் கற்பித்தல், பரீட்சைத் தயார்படுதத்தல் மற்றும் இந்தப் பாடத்தில் உயர் பெறுபேறுகளை பெறல் என்னும் விடயங்களில் அன்னார் முழு மூச்சுடன் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்துடனும் கல்வித் திணைக்களத்துடனும் இணைந்து ஆற்றிய பணிகள் மிகவும் காத்திரமானவை.

இவர் தனது ஓய்வுநேரம் பற்றியோ, தனது உடல் நிலை பற்றியோ கவனம் செலுத்தாது மாலை நேரத்தில் ஆர்வமுள்ள மாணவர்களுக்கு இலவச வகுப்புக்களை நடத்தியமை இவரது அர்ப்பணிப்புள்ள செயற்பாடுகளுக்கு முன்னுதாரணமாகும். இவரிடம் கற்ற மாணவர்களில் பலர் அன்னாரது இறுதிக் கிரியைகளில் கலந்து அஞ்சலி செலுத்தியமை அவரது சேவைக்கான வெளிப்பாடாகும்.

இவர் தனது துறைக்கு அப்பால் ஆசிரிய வாண்மை விருத்திக்கென தேசிய கல்வி நிறுவகத்துடன் இணைந்து யாழ்.மாவட்ட ஆசிரிய வாண்மை விருத்திக்காக மிகவும் பாடுபட்டார்.

மிகவும் நெருக்கடியான காலகட்டத்திலும் இவரது செயற்பாட்டால் இப்பணிகள் தடங்கல்கள் இன்றி நிறைவேற்றப்பட்டன. கல்விப் புலத்திற்கு அப்பால் யாழ்ப்பாண விஞ்ஞான சங்கம், யாழ்.பல்கலைக்கழக மூதவை என அவரது விரிந்து பரந்த பணிகள் பல.

தொண்டைமானாறு வெளிக்கள நிலையத்தின் மீள் புனரமைப்புக்காக அயராது பாடுபட்டு அண்மைக் கால தொண்டைமானாறு கடல்நீரேரி அறிவியல்சார் கல்வி கற்றல் கற்பித்தலில் பல பணிகளை ஆற்றிச் சென்றமை அவரது விஞ்ஞான கல்விக்கான காத்திரமான பங்களிப்பாகும்.

அண்மைக்காலமாக யாழ்.மாவட்டச் சுற்றுச்சூழல் பாதுகாப்பு, விவசாய பாதுகாப்பு நடவடிக்கைகள் ஆகியவற்றுக்கு தான் ஏதாவது பங்களிப்புச் செய்யும் முனைப்புடன் பெண்கள் அபிவிருத்தி நிறுவன ஆலோசகராகச் செயற்பட்டு அரச சார்பற்ற நிறுவனத்தின் இணையத்துடன் இணைந்து சிலகாத்திரமான அடித்தளங்களை இட்டுச் சென்றுள்ளமை எதிர்கால விஞ்ஞானம் சார்ந்த செயற்பாட்டாளர்களுக்கு அன்னார் விட்டுச் சென்றுள்ள பெரும் பணியாகும். அவரது பணிகளுக்கு உறுதுணையாகச் செயற்பட்ட துணைவர் கூட்டுறவாளர் திரு.க.இராஜாராம் அவரின் பணிகளை முன்னெடுத்து வருகின்றமை மன நிறைவைத் தருகின்றது. இவரது பெயரால் யாழ்ப்பாண மத்திய கல்லூரியில் சிறப்பு நிதியம் உருவாக்கப்பட்டு விஞ்ஞான கல்விசார் செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுவதுடன் மாணவர்களுக்கான இரசாயனவியல் உதவிகளும் வழங்கப்படல் காலத்தின் தேவையாகும்.



இவரது திடீர் மறைவு யாழ்.மாவட்ட இர்சாயனவியல் மற்றும் விஞ்ஞான கற்றல் கற்பித்தலில் ஒரு பெரும் இடைவெளியை ஏற்படுத்தியுள்ளமை அனைவருக்கும் முன்னுள்ள சவாலாகும்.

யாழ்ப்பாணக் கல்வியியலாளர்கள் மற்றும் சமூக ஆர்வலர்கள் இவரது பணிகளைத் தொடர்வதே அவருக்கு நாம் செய்யும் உண்மையான அஞ்சலியாகும்.

**இரா.சர்வானந்தா**
**நி.தி.உ/ந.வா.உ.தி,**
**மாவட்ட செயலகம்.**

## தமிழரின் கொலையுடன் தொடர்புடையவர்கள் கைது

இலங்கைத் தமிழர் கொலை செய்யப்பட்டது தொடர்பாக 4 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

திருச்சி கருமண்டபம் செல்வ நகரை சேர்ந்தவர் செல்வேந்திரன் (வயது-56) ஒரு இலங்கை தமிழர்.

இவர், டிராவல்ஸ் நிறுவனம் நடத்தி வந்தார்.

இவர் கடந்த 31 ஆம் திகதி இரவு மர்மநபர்களால் கத்தியால் குத்தி படுகொலை செய்யப்பட்டார்.

இது குறித்து கன்டோன்மென்ட் பொலிசார் வழக்கு பதிந்து விசாரணைகளை நடத்திவந்தனர்.

கொலை செய்யப்பட்ட செல்வேந்திரன் பொலிசாருக்கு தகவல் வழங்குவராக இருந்தார் என கூறப்படுகிறது.

இதில் பாதிக்கப்பட்ட ஏடிஎம் கொள்ளை சம்பவங்களில் ஈடுபட்ட திருச்சி கருமண்டபம் ஆர்.எம்.எஸ் காலனி குமரன்(வயது 21), மற்றும் ராகவன், கல்லுக்குழிராஜா (வயது30), அதே பகுதியை சேர்ந்த இமாம்அலி ஆகிய 4 பேரை பொலிசார் நேற்று முன்தினம் கைது செய்தனர். (இ)

## கோடிகளைக் குவிக்கும் கோபப் பார்வை பூனை!



சில பிரபலங்களின் புன்னகை, பணத்தை வாரிக் குவித்ததுண்டு. ஆனால், முதல் முறையாக, ஒரு பூனையின் கோப பார்வை, கோடிகளை குவித்து வருகிறது. அமெரிக்காவின் அரிசோனா மாகாணத்தைச் சேர்ந்த 2 வயதான தர்தார்சாஸ் என்ற பெண் பூனை தான் இந்த சாதனையை படைத்து வருகிறது.

அப்பூனையின் முகம், எப்போதும் கோபத்துடன் பார்ப்பது போன்றே இருக்கும். அதை புகைப்படம் எடுத்து, சமூக வலைத்தளத்தில் வெளியிட்டு விட்டனர். படத்தை பார்த்து, பலர் அந்த பூனைக்கு ரசிகர்கள் ஆகி விட்டனர். சமூக வலைத்தளத்தில், அதற்கு 60 இலட்சத்துக்கு மேற்பட்ட ஆதரவாளர்கள் உள்ளனர்.

அதன்மூலம், 6 கோடி பவுண்டு சம்பாதித்து விட்டது. வால்ஸ்ட்ரீட் ஜர்னல், நியூயோர்க் மேகசின் போன்ற பிரபல பத்திரிகைகளின் அட்டைப்படத்தில், இந்த பூனையின் புகைப்படம் வெளியாகி விட்டது. இதேவேளை பூனையைப் பற்றி இரண்டு புத்தகங்களும் வெளியாகி உள்ளன.

## பேசும் திறனுடைய பிரேசில் ஆமைகள்!

தென் அமெரிக்க நாடான பிரேசில் நாட்டில் உள்ள ஆறுகளில் பிரமாண்ட ஆமைகள் வசித்து வருகின்றன. இந்த ஆமைகள், 'பேசும்' சக்தி படைத்தவை என்று விஞ்ஞானிகள் கண்டுபிடித்துள்ளனர். அவை தங்கள் உணர்வுகளை வெளிப்படுத்த விதவிதமான குரல் சமிக்ஞைகளை பயன்படுத்தி வருகின்றன.

உதாரணமாக, பெண் ஆமைகள், தாங்கள் முட்டையிட்டு பொறித்த குஞ்சுகளிடம் பேசும் விதமே தனி தான். குஞ்சுகளை அழைப்பதற்கு வித்தியாசமான ஓசைகளை அந்த ஆமைகள் பயன்படுத்துகின்றன. இந்த ஓசைக்கு என்ன 'அர்த்தம் என்று புரியாவிட்டாலும், ஆமைகளின் குணாதிசயத்தை அறிந்து கொள்ள இது உதவும்' என்று விஞ்ஞானிகள் கூறியுள்ளனர். (இ)

## ஹெலி கடலில் வீழ்ந்து விபத்து

### மூவர் பலி; ஒருவர் மாயமானார்

டென்மார்க்கின் மத்திய பகுதியில் நேற்று சிறிய ரக தனியார் ஹெலிகொப்டர் ஒன்று கடலில் விழுந்து விபத்துக்குள்ளானது. இதில் 3 பேர் பலியானார்கள். ஒருவர் காணாமற்போயுள்ளார்.

அமெரிக்காவின் ராபின்சன் 44 ரகத்தை சேர்ந்த அந்த ஹெலிகொப்டர் டென்மார்க்கின் கிழக்கு கடலோரப் பகுதியிலுள்ள சம்சோயி தீவுக்கு சென்று கொண்டிருந்த போது இந்த விபத்து நிகழ்ந்துள்ளது. ஆனால் விபத்து எப்படி நடந்தது என்று இன்னும் தெரியவில்லை. (இ)

## 342 பேரின் உயிரை காத்த விமானி

சிகாகோ-டில்லி இடையே பறக்கும் ஏர் இந்தியா விமானம் அங்கிருந்து டில்லிக்கு புறப்பட்ட பின் இரண்டு மணி நேரம் வானில் பறந்தது. இந்நிலையில் திடீரென இவ்விமானம் ரொரன்ரோவில் அவசரமாக தரையிறங்கியது.

சிகாகோவிலிருந்து 342 பயணிகளுடன் புறப்பட்ட விமானம் இரண்டரை மணி நேரம் பயணம் செய்த நிலையில் விமானத்தின் இயந்திரம் ஒன்றில் இருந்து ஒயில் லீக் ஆவதை விமானி கண்டுபிடித்தார். இரண்டு இயந்திரங்களை கொண்ட அந்த விமானத்தில் ஒரு இயந்திரத்தில் கோளாறு ஏற்பட்டதை தொடர்ந்து விமானி உடனடியாக விமான கட்டுப்பாட்டு அறைக்கு தகவல் கொடுத்தார்.

இதனை தொடர்ந்து விமானத்தை ரொரன்ரோவில் தரையிறக்குமாறு அதிகாரிகள் தெரிவித்தனர்.

அதன்படி விமானம் ரொரன்ரோ விமான நிலையத்தில் காலை ஏழு மணியளவில் பாதுகாப்பாக தறையிறங்கியது.

இயந்திர கோளாறு குறித்து பொறியியலாளர்கள் ஆய்வு செய்து வருவதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

ஆய்வு முடிவுக்கு பின் பயணிகளை எப்படி டில்லிக்கு அழைத்து வருவது என்று முடிவெடுக்கப்படும் என்றும் அதிகாரிகள் தெரிவித்தனர். (இ)

## வாக்குகளை விற்றுவிடாதீர்கள்

### பதுளை ஆயர் கோரிக்கை

பெறுமதி வாய்ந்த வாக்குகளையும் வாக்கு சுதந்திரத்தையும் வெறுமனே பணத்தையும் மதுபானத்தையும் மற்றும் பொருட்களையும் கொடுத்து வாங்க முயற்சிப்பவர்களுக்கு விற்றுவிடாதீர்கள் என ஊவா மாகாண சபைத்தேர்தல் தொடர்பாக பதுளை ஆயர் வெளியிட்டுள்ள செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

பதுளை ஆயர் ஜே.வின்சன் எஸ். பெர்னாந்து வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது.


சுதந்திரமாக சுமுகமான தேர்தல் நடைபெறுவதற்கான அடையாளங்கள் வேகமாக மறைந்து போய்க் கொண்டிருக்கின்றன.

தேர்தல் சட்டங்களும் மக்களுடைய சுதந்திரமும் பாதிக்கப்படுவதும் வன்முறைகளுக்குள்ளாக்கப்படுவதும் பதிவாகிக் கொண்டிருக்கின்றன.

இவ்வாறான சூழ்நிலைகளுக்கு மத்தியிலே கிறிஸ்தவர்களாகிய எமது பணியும் பங்கும் என்ன?

நாங்கள் வெறுமனே பார்வையாளராக நடப்பதை பற்றியும் காண்பவை, கேட்பவை பற்றியும் விமர்சித்துக் கொண்டும் அவற்றை ஏற்றுக் கொள்ளாதவர்களாகவும் மட்டும் இருப்பதிலே நிறைவடைய முடியாது.

வாக்காளர்களுக்கும் வேட்பாளர்களுக்கும் அவர்களின் ஆதரவாளர்களுக்கும் நடைமுறைக்குச் சாத்தியமான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக நாங்கள் வழங்கும் செய்தி, உயிர்களையும் உடைமைகளையும் பாதுகாப்போம். பிரஜைகளின் சுதந்திரத்தை மதிப்போம். வன்முறைகளைக் கண்டிப்போம் என்பதாகும் என அவர் விடுத்துள்ள செய்திக்குறிப்பில் மேலும் தெரிவித்துள்ளார். (இ)



Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org





ஐக்கிய தேசியக் கட்சியின் 68 ஆவது நிறைவு விழா பசறையில் நேற்று முன்தினம் சனிக்கிழமை ஐக்கிய தேசியக்கட்சியின் தலைவர் ரணில் விக்ரமசிங்க தலைமையில் நடைபெற்றது. இதன்போது கட்சியின் பிரதித்தலைவராக அம்பாந்தோட்டை நாடாளுமன்ற உறுப்பினர் சஜித் பிரேமதாஸா நியமிக்கப்பட்டார்.

# சந்தேகத்திற்கிடமாக நடமாடிய மட்டு.வாசிகள் நால்வர் கைது

(யாழ்ப்பாணம்)

யாழ்.தெல்லிப்பழை துர்க்கையம்மன் ஆலயத்தில் சந்தேகத்திற்கிடமான முறையில் நடமாடிய மட்டக்களப்பைச் சேர்ந்த இரண்டு பெண்கள் உட்பட நால்வர், நேற்று முன்தினம் சனிக்கிழமை கைது செய்யப்பட்டதாக தெல்லிப்பழை பொலிஸார் தெரிவித்தனர்.

ஆலயத்தின் தேர்த்திருவிழா, நேற்று முன்தினம் சனிக்கிழமை இடம்பெற்றவேளை, மேற்படி நால்வரும் சந்தேகத்திற்கிடமான முறையில் நடமாடியுள்ளனர்.

இதனையடுத்து, அவர்களின் பின்னால் பொலிஸார் சென்றிருந்த வேளை, மேற்படி 4 பேரும் சன நெருக்கம் கொண்ட இடங்களை நோக்கி சென்றுள்ளனர்.

நால்வரையும் பிடித்து விசாரணை செய்த போது, நால்வரும் முன்னுக்கு பின்னான கருத்துக்களை வழங்கியுள்ளனர். இதனால் சந்தேகத்தின் பெயரில் கைது செய்யப்பட்டு பொலிஸ் நிலையம் கொண்டு செல்லப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இதேவேளை, கோணாப்புலம் நலன்புரி முகாம் பகுதியில் சூதாட்டத்தில் ஈடுபட்ட ஏழு பேரையும் 14 நாட்களுக்கு விளக்கமறியலில் வைக்குமாறு மல்லாகம் நீதவான் நீதிமன்ற நீதவான் சி.சதீஸ்கரன் நேற்று ஞாயிற்றுக்கிழமை உத்தரவிட்டார்.

அத்துடன், அவர்களிடமிருந்து 5 ஆயிரம் ரூபாய் பணமும் மீட்கப்பட்டிருந்தது.

இதேவேளை, சட்டவிரோதமான முறையில் மின்சாரம் பெற்ற கரவெட்டியைச் சேர்ந்த நால்வரையும் 50 ஆயிரம் ரூபாய் சரீர பிணையில் செல்ல பருத்தித்துறை நீதவான் நீதிமன்ற பதில் நீதவான் அ.க.நடராஜா நேற்று ஞாயிற்றுக்கிழமை உத்தரவிட்டார்.

அத்துடன், இந்த வழக்கை எதிர்வரும் 19 ஆம் திகதிக்கு நீதவான் ஒத்திவைத்தார். சுன்னாகம் மின்சார சபையினரும் நெல்லியடி பொலிஸாரும் இணைந்து நேற்று முன்தினம் சனிக்கிழமை இரவு மேற்கொண்ட சோதனை நடவடிக்கையில் இந்த நான்கு பேரும் கைது செய்யப்பட்டனர்.

மின்மானிக்குள் ஊசி நுழைத்து மின்மானியின் வேகத்தை குறைத்த குற்றச்சாட்டில் ஒருவரும், சட்டவிரோதமாக மின்சாரம் பெற்ற மூவருமே இவ்வாறு கைது செய்யப்பட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது. (இ)

## சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 60 | 70 | 60 | 80 |
| உருளைக்கிழங்கு | 90 | 80 | 70 | 90 |
| பச்சைமிளகாய் | 140 | 130 | 120 | 140 |
| தக்காளி | 30 | 50 | 30 | 60 |
| மரவள்ளிக்கிழங்கு | 30 | 40 | 40 | 60 |
| கோவா | 60 | 70 | 70 | 80 |
| கரட் | 60 | 100 | 90 | 120 |
| பூசணி | 20 | 30 | 30 | 40 |
| புடோல் | 40 | 40 | 50 | 60 |
| வாழைக்காய் | 80 | 70 | 60 | 80 |
| சின்ன வெங்காயம் | 80 | 80 | 80 | 100 |
| பெரிய வெங்காயம் | 80 | 100 | 100 | 100 |
| பாகற்காய் | 80 | 80 | 80 | 100 |
| வெண்டிக்காய் | 80 | 60 | 60 | 80 |
| கருணைக் கிழங்கு | 90 | 60 | 60 | 100 |
| பயற்றங்காய் | 60 | 90 | 80 | 80 |
| லீக்ஸ் | 60 | 80 | 60 | 80 |
| பீற்றூட் | 30 | 40 | 40 | 60 |
| கறிமிளகாய் | 60 | 120 | 90 | 100 |
| முருங்கைக்காய் | 20 | 60 | 60 | 80 |
| போஞ்சி | 100 | 120 | 120 | 120 |
| கத்தரிதம்புள்ள | 30 | 50 | 40 | 80 |
| கீரை - 1 பிடி | 10 | 20 | 20 | 25 |
| தேசிக்காய் | 60 | 80 | 70 | 80 |
| தேங்காய் (ஒன்று) | 20 | 30 | 30 | 25-30 |
| இராசவள்ளி | 120 | 100 | 110 | 100 |


## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 129

Search for people, places and things Nagendram Home

கிருஷ்ணசாமி சங்கீர்த்தனன்




ஜனுஷன் ஜெயபாலசிங்கம்




சுபாகிதன் சத்தியமூர்த்தி



ஒரு மாம்பழத்திற்கு ஆசைப்பட்டு தன் தம்பியை ஏமாற்றிய குற்றத்திற்காக பல காலமாக தேடப்பட்டு வந்த பலே பிள்ளையார் தமிழக பொலிஸாரால் கைது செய்யப்பட்டு வானில் ஏற்றப்படும் காட்சி

அவரை பிணையில் எடுக்க சிவபெருமான் தீவிரம்

தில்லை அம்பலவாணர் விமலன்



டொறின் மன்மதநாயகம்




நிதர்ஷ் சன்

செய் அல்லது செத்து மடி
-நேதாஜி
படி அல்லது பண்ணி மேய்
-என் பிதாஜி(அப்பா)

நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valam.puri.16 எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 11 ஆயிரம் ஹெக்டேயர் நிலப்பரப்பில் யாழில் இந்த வருடம் நெற்செய்கை

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் எதிர்வரும் காலபோகத்தில் 11 ஆயிரம் ஹெக்டேயர் நிலப்பரப்பில் நெற் செய்கை மேற்கொள்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளதாக வடமாகாண பிரதி விவசாய பணிப்பாளர் கிருஸ்ணன் ஸ்ரீபாலசுந்தரம் தெரிவித்தார்.

யாழ்.மாவட்டத்தில் 12 ஆயிரத்து 301 ஹெக்டேயர் நெற்செய்கை நிலம் இருக்கின்றபோதிலும் அவற்றில் 2 ஆயிரம் ஹெக்டேயர் வ்ரையான நிலப்பரப்பு நெற்செய்கை மேற்கொள்ள முடியாமல் உவர்நிலமாக இருக்கின்றது.

யாழ்ப்பாணத்தில் மழை வீழ்ச்சியை நம்பியே நெற்செய்கை மேற்கொள்ளப்படுகிறது. இம்மாவட்டத்திலுள்ள விவசாயிகளில் 40 வீதமானவர்கள் உள்ளூர் நெல் இனங்களையே பயிரிட்டு வருகின்றனர்.

புதிய நெல் இனங்களை பயிரிடுவதன் மூலம் அதிக விளைச்சலை பெறமுடியும். இருந்தும், யாழ்ப்பாணத்தில் பழைய நெல்லினங்களுக்கேற்ற காலநிலை நிலவுவதால். புதிய நெல்லினங்களின் விளைச்சலில் பாதிப்பு ஏற்படுகின்றது.

காலநிலைக்கேற்ற பாரம்பரிய நெல்லின் உற்பத்தி திறனை மேம்படுத்தி, அதிக விளைச்சலை பெற்றுக்கொள்ளும் நோக்கில் விவசாய திணைக்களத்தால் தற்பொழுது விதைநெல் தூய்மையாக்கல் செயற்பாடு மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

இந்த செயற்றிட்டத்தின் மூலம் சிறந்த விதைநெல்லை விவசாயிகளுக்கு வழங்கி, அதிக உற்பத்தியை பெறுவதே தமது நோக்கம் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

விவசாயத்திற்கு உதவாத நிலையில் 2500 ஹெக்டேயர் நிலப்பரப்பு யாழில இதேவேளை யாழ். மாவட்டத்தில் விவசாய நடவடிக்கைகளுக்கு உதவாத நிலையில் 2500 ஹெக்டேயர் நிலப்பரப்பு காணப்படுவதாக வடமாகாண பிரதி விவசாய பணிப்பாளர் தெரிவித்தார்.

இந்த நிலங்களில் நீர்தேங்கி நிற்காது என்பதால் நிலத்தை பண்படுத்த முடியாது எனவும் அதன் காரணமாக எக்காலப் பகுதியிலும் இந்த நிலங்களில் விவசாயம் செய்ய முடியாது என அவர் தெரிவித்தார்.

ஆகவே, இந்த நிலங்களை மேட்டு நிலமாக்கி வேறு தேவைகளுக்கு பயன் படுத்தலாம். அல்லது குடியிருப்பு காணிகளாக மாற்றலாம் என அவர் மேலும் தெரிவித்தார். (இ)

# 10 கைவிரல் அடையாளம் கடவுச் சீட்டில் பதியப்படும்

## புதிய சட்டம் விரைவில்

(யாழ்ப்பாணம்)

இலங்கையில் விநியோகிக்க ப்படும் கடவுச்சீட்டுக்களில் 10 கைவிரல் அடையாளங்களும் பொறிக்கப்பட வேண்டும் என்ற தீர்மானத்தை அமைச்சரவை எடுத்துள்ளது.

இதன் அடிப்படையில் குடிவரவு குடியகல்வு சட்டம் திருத்தப்பட வுள்ளது.

இது தொடர்பான யோச னையை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அமைச்சரவையில் சமர்ப்பித்திருந்தார்.

இந்தநிலையில் அமைச்சரவையின் தீர்மானம், அமைச்சரவை உபகுழுவின் சட்ட ஆலோசனைக்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

இலங்கையின் பாதுகாப்பு செயலாளரின் ஆலோசனைக்கு இணங்கவே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தநிலையில் அடுத்த மாதத்தில் இருந்து கடவுச்சீட்டுக்களுக்கு 10 கைவிரல் அடையாளங்களை பெறும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படும் என்று குடிவரவு கட்டுப்பாட்டாளர் அறிவித்துள்ளார். (இ)

# முன்னாள் போராளிகளின் குடும்பத்திற்கு உதவ விசேட நிதி ஒதுக்கீடு காலத்தின் தேவையாகும்

## வடக்கு முதலமைச்சருக்கு மகஜர்

விசேட நிதியொதுக்கீட்டின் மூலம் முன்னாள் போராளிக்ள் மற்றும் மாவீரர் குடும்பங்களுக்கு உதவிகளை வழங்குமாறு வடக்கு மாகாண முதலமைச்சரிடம் மகஜர் மூலம் கோரியுள்ளது முற்போக்கு தமிழ்த்தேசியக்கட்சி.

இது தொடர்பாக அக்கட்சியின் செயலாளர் விஜயகாந் மாகாண முதலமைச்சருக்கு அனுப்பிவைத்துள்ள மகஜரில் மேலும் தெரிவித்துள்ளதாவது,

முன்னாள் போராளிகளில் எண்ணிலடங்காதவர்கள் தமது உடல் உறுப்புக்களை இழந்த நிலையில் அங்கவீனமானவர்களாகவும், ஆயிரத்துக்கு மேற்பட்ட போராளிகள் உளவியல் ரீதியாகவும் பாதிப்படைந்து இன்று சமுதாயத்துடன் இணைந்து வாழ்ந்து வருகின்றார்கள். இவர்கள் இவ்வாறு வாழ்ந்து வந்தாலும் அவர்களுடைய குடும்ப நிலைமையும், உற்றார், உறவினர்களின் நிலைமையும் மிகவும் மோசமான நிலைமையாகவே காணப்படுகின்றது.

தமிழ் மக்களின் அடிமைத்தனத்தை உடைத்தெறிந்து உயிர், உடல் தியாகங்களைச் செய்த போராளிகள் மற்றும் மாவீரர் குடும்பத்திற்கு தாங்கள் பொறுப்பேற்ற வடமாகாண சபையின் ஊடாக வாழ்வாதார உதவிகளையும், அல்லது அவர்கள் பசியாறுவதற்கான உலர் உணவு நிவாரணத்தையாவது பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

எனவே வடமாகாணசபையில் 2015ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத்திட்டத்தில் மாவீரர்களின் குடும்பத்திற்கும், முன்னாள் போராளிகளின் குடும்பத்திற்கும் நிவாரணம் வழங்குவதற்கு நிதி ஒதுக்கீடு செய்யுங்கள். இதுவே எமது கட்சி சார்பாக உங்களிடம் வைக்கும் முக்கிய கோரிக்கையாகும். இது குறித்து வடமாகாண சபையில் விசேட தீர்மானம் ஒன்றினைக் கொண்டு வந்து அதனை ஏகமனதாக நிறைவேற்ற வேண்டும் என வடமாகாண சபையின் முதலமைச்சர் என்ற ரீதியில் தங்களைத் தாழ்மையுடன் வேண்டி நிற்கின்றோம்.

இவ்வாறு, தாங்கள் பொறுப்பேற்றுள்ள வடமாகாண சபை இவ் உதவியைச் செய்யுமாக இருந்தால் தமிழ் மக்களின் விடிவுக்காக போராடி உயிர்த்தியாகம் செய்த மாவீரர்களின் ஆத்மா சாந்தியடையும் என நாம் நம்புகின்றோம். தற்போது ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடியில் உயிர்வாழ்வதற்கு போராடி வருகின்ற ஒவ்வொரு முன்னாள் போராளி குடும்பத்தினரும் இவ்வுதவி மூலம் அதிக பயனடைவார்கள் என்பதுடன் அவர்களுடைய தியாகங்களுக்கு நாங்கள் செய்கின்ற ஒரு கௌரவமாகவும் இருக்கும் என நம்புகின்றோம் எனவே வடமாகாண சபையில் 2015 ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்டத்தில் விசேட நிதி ஒதுக்க வேண்டும் என்று மீண்டும் வலியுறுத்தி நிற்கின்றோம் என்று அந்த மகஜரில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த மகஜரின் பிரதிகள் மாகாணசபையின் அவைத்தலைவர், மாகாண அமைச்சர்கள் மற்றும் உறுப்பினர்களுக்கும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன. (இ)

# குளவி கொட்டுக்குள்ளான 15 பேர் வைத்தியசாலையில்

பொகவந்தலாவ பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பொகவந்தலாவ கொட்டியாகல பகுதியில் நேற்று முற்பகல் 10 மணியளவில் குளவி கொட்டியதால் 15 பேர் பொகவந்தலாவ மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

கொட்டியாகல பகுதியில் விறகு சேகரிக்கச் சென்ற சிறுவர்கள் 7 பேர் உட்பட தொழிலாளிகள் 8 பேர் மீது மரத்தில் இருந்த குளவி கூடு கலைந்து சென்று இவ்வாறு தாக்கியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

பாதிக்கப்பட்டவர்கள் பொகவந்தலாவ வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர். (இ



29 ஆண்டுகால தனித்துவமிக்க பயிற்சி நிலையம்
1985ம் ஆண்டிலிருந்து இன்று வரை....
யாழ். கலாலயா பயிற்சியகம்
விக்ரோறியா வீதி, யாழ்ப்பாணம்.
(யாழ். போதனா வைத்தியசாலை பின் புற வீதி)

மகளிருக்கான 3 மாத பயன்மிகு பயிற்சிகள் ஆரம்பமாகின்றன!

- கேக் ஐசிங், உணவு தயாரித்தல்,
- Hair Dressing & Styling (கூந்தல் வடிவமைப்புகளும் முடி சீராக்குதலும்)
- Nail art
- முக அழகுக் கலை (Facials)
- Pedicure, Manicure (கைகள், கால்கள், விரல்கள், நகங்கள் அழகு படுத்துதல்)
- மெஹந்தி போடுதல்
- இந்து, கிறிஸ்தவ, இஸ்லாம் முறைகளில் மணப்பெண் அலங்காரம், வித்தியாசமான 7 முறைகளில் சேலை அணிதல்,

**மேற்படி அனைத்துப் பயிற்சிகளின் முடிவில் சான்றிதழ் வழங்கப்படும்.**

- (B) பிளவ்ஸ், சாறி (B)பிளவ்ஸ், சுரிதார், தைக்கும் சான்றிதழ் அற்ற பயிற்சி (கிழமை நாள் மட்டும்)

**சனி, ஞாயிறு புதிய பிரிவுகள் ஆரம்பம் 14-09-2014**
**ஞாயிறு காலை 9.30 மணி**
**கிழமை நாள் புதிய பிரிவுகள் ஆரம்பம் 15-09-2014**
**திங்கள் காலை 9.30 மணி**
மேலும் விபரங்களை நேரில் அறிந்து கொள்ளலாம்.
-இயக்குநர்-
GURU



கல்யாண மாலை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1980 இந்து<br>நட்சத்திரம்: பூராடம்<br>கி.பா: 72.5 செவ் 8 இல்<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்: O/L / சொந்த வியாபாரம்<br>தொ.இ: B/3540 | பிறப்பு: 1975 இந்து<br>நட்சத்திரம்: விசாகம் 3<br>கி.பா: 43.25<br>தகைமை/தொழில்: கல்வியியற் கல்லூரி ஆசிரியா<br>எதிர்பார்ப்பு: தாரம் இழந்தவர்களும் பார்க்கலாம்<br>தொ.இ: G/3568 |
| பிறப்பு: 1972 இந்து<br>நட்சத்திரம்: அச்சுவினி 4<br>கி.பா: 24.25 செவ் 12 இல்<br>உயரம்: 5'7"<br>தகைமை/தொழில்: A/L, Dip.in journalism/ மேற்பார்வையாளர் (அவுஸ்திரேலியா)<br>தொ.இ: B/3543 | பிறப்பு: 1986 இந்து<br>நட்சத்திரம்: உத்தராடம் 3<br>கி.பா: 26<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்: A/L/ வங்கியாளர்<br>தொ.இ: G/3574 |
| பிறப்பு: 1981 இந்து<br>நட்சத்திரம்: திருவாதிரை 3<br>கி.பா: 15.25 சூரி செவ் 11 இல்<br>உயரம்: 5'9"<br>தகைமை/தொழில்: MBA, Dip.in Business Management கிளை முகாமையாளர் (UK)<br>தொ.இ: B/3544 | பிறப்பு: 1987 இந்து<br>நட்சத்திரம்: ஆயிலியம் 4<br>கி.பா: 36 சூரி செவ் 8 இல்<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்: BSc / இலங்கை நிர்வாக சேவை (SLEAS)<br>தொ.இ: G/3575 |
| பிறப்பு: 1977 இந்து<br>நட்சத்திரம்: அவிட்டம் 3<br>கி.பா: 23.5 செவ் 2 இல்<br>உயரம்: 5'5"<br>தகைமை/தொழில்: A/L /இலிகிதர்<br>தொ.இ:B/3545 | பிறப்பு: 1978 இந்து<br>நட்சத்திரம்: பூராடம் 2<br>கி.பா: 45.5<br>உயரம்: 5'5"<br>தகைமை/தொழில் B.A, நிகழ்ச்சித்திட்ட உதவியாளர்.<br>தொ.இ: G/3578 |

கல்யாண மாலை
(சர்வதேச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே
தொடர்பு:- 021 720 1005
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# சிறுவர் அரங்கம்

915

# சுட்டி மனசு


நான் படிப்புல எப்பவும் முதல் ட்ராங் தான். கட்டுரை ஓவியப் போட்டிகளிலும் எனக்குத்தான் முதல் பரிசு. நான் பரிசு வாங்கும்போதெல்லாம் அப்பா இங்கே இல்லைன்னு எனக்கு வருத்தமா இருக்கும். அவர் வெளிநாட்டுல இருக்கார். எப்ப தான் என்னோட ஆசை நிறைவேறுமோ?

எஸ். அனுஶ்ரீ





படிப்பு படிப்புன்னு சொல்லி எங்க அம்மாச்சி ஊருக்கு என்னை அனுப்ப மாட்டாங்க. முழு ஆண்டு விடுமுறையிலும் ஸ்பெஷல் கோச்சிங் போகச் சொல்லிடுறாங்க. அம்மாச்சிக்கு ஊருல யாரும் இல்லை. நானும் போய் பாக்கலைனா, யார்தான் அவங்களைக் கவனிக்கிறது? ரொம்ப கவலையா இருக்கு.


எம். தீப அருணா



என் ப்ரென்டுகூட உட்கார்ந்துக்க ரொம்ப ஆசை. ஆனா அவளைவிட நான் கொஞ்சம் உயரம் குறைவா இருக்குறதால என்னை முதல் பெஞ்ச்லயும் அவளை மூனாவது பெஞ்ச்லயும் உட்கார வைச்சுட்டாங்க. ஸ்கூல் விட்டாலும் அவளோட அதிகம் பேச முடியலை. இதுதான் என்னோட பெரிய பிரச்சினை.

சி.சாங்கீதா.







என் அப்பாக்கிட்ட ஒரு பைனாகுலர் வாங்கித் தாங்கன்னு கேட்டேன், நீ சின்னப் பையன் உடைச்சுடுவேனு வாங்கியே தரலை. பெரிய சயின்டிஸ்ட்டா ஆகணும்னு ஆசை. அதுக்கு இப்பவே சின்னச் சின்னதா முயற்சி பண்ணாம்னா, விடமாட்றாங்களே!

பா.முகிலன்.






# இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

- 70 - டைட்டஸ் தலைமையிலான உரோமப் பேரரசின் படையினர் ஜெருசலேம் நகரைக் கைப்பற்றினர்.
- 1514 - லித்துவேனியா, மற்றும் போலந்துப் படைகள் ஓர்ஷா என்னுமிடத்தில் ரஷ்யாவைத் தோற்கடித்தன.
- 1655 - சுவீடனின் காரெல் பத்தாம் குஸ்டாவ் மன்னன் போலந்தின் வார்சா நகரைப் பிடித்தான்.
- 1727 - இங்கிலாந்து, கேம்பிறிட்ஜ்ஷயர் என்னுமிடத்தில் குழந்தைகள் பொம்மைக் களியாட்ட விழா ஒன்றில் இடம்பெற்ற பெருந்தீ விபத்தில் 78 பேர் கொல்லப்பட்டனர். கொல்லப்பட்ட பெரும்பாலானோர் குழந்தைகளாவர்.
- 1796 - பிரெஞ்சுப் படையினர் ஆஸ்திரியப் படைகளைத் தோற்கடித்தனர்.
- 1831 - 4 ஆம் வில்லியம் பிரித்தானியாவின் மன்னனாக முடிசூடினான்.
- 1888 - லண்டனில் கிழிப்பர் ஜேக்கினால் கொல்லப்பட்ட இரண்டாவது நபரான அன்னி சப்மனின் உடல் கண்டெடுக்கப்பட்டது.
- 1926 - நாடுகளின் கூட்டமைப்பில் ஜேர்மன் சேர்ந்தது.
- 1930 - ஸ்கொட்ச் நாடா முதன் முதலாக விற்பனைக்கு விடப்பட்டது.
- 1941 - இரண்டாம் உலகப் போர்: லெனின்கிராட் நகரை ஜேர்மனி முற்றுகையிட்டது.
- 1943 - இரண்டாம் உலகப் போர்: இத்தாலி போரில் சரணடைந்ததை அமெரிக்கத் தளபதி டுவைட் டி. ஐசனாவர் அறிவித்தார்.
- 1944 - இரண்டாம் உலகப் போர்: வி 2 ராக்கெட் மூலம் முதல் தடவையாக லண்டன் நகரம் ஜேர்மனியினால் தாக்கப்பட்டது.
- 1945 - சோவியத் படைகள் வடகொரியாவை ஒரு மாதத்திற்கு முன்னர் கைப்பற்றியமைக்குப் பதிலடியாக அமெரிக்கப் படைகள் தென்கொரியாவில் தரையிறங்கின.
- 1951 - பசுபிக் போரை முடிவுக்குக் கொண்டுவரும் பொருட்டு 48 நாடுகள் சான் பிரான்சிஸ்கோவில் ஜப்பானுடன அமைதி உடன்படிக்கையை ஏற்படுத்தின.
- 1959 - ஆசியத் தொழில்நுட்பக் கழகம் பாங்கொக் நகரில் நிறுவப்பட்டது.
- 1991 - யூகொஸ்லாவியாவிடமிருந்து மசடோனியக் குடியரசு விடுதலை அடைந்தது.

பிறப்புக்கள்

- கி.மு.20/19 - கன்னி மரியா, இயேசு கிறிஸ்துவின் தாய்
- 1913 - ஆர். மகாதேவன், தமிழக நகைச்சுவை எழுத்தாளர் (இ. 1957)
- 1933 - ஆஷா போஸ்லே, இந்தித் திரைப்படப் பின்னணிப் பாடகி

இறப்புகள்

- 1980 - வில்லார்ட் ஃபிராங்க் லிப்பி, நோபல் பரிசு பெற்ற அமெரிக்கர் (பி. 1908)
- 1995 - நா. முத்தையா, ஆத்மஜோதி இதழாசிரியர் (பி. 1918)
- 2008 - குன்னக்குடி வைத்தியநாதன், வயலின் இசைக் கலைஞர் (பி. 1935)

## அன்புச் சுட்டிகளே!

உங்கள் மனதில் தாக்கத்தை ஏற்படுத்திய சம்பவங்களை, நீங்களும் சிறுவர் பக்கத்தில் - சுட்டி மனசு- பகுதியில் பதிவு செய்துகொள்ளலாம்.

## நீங்கள் செய்ய வேண்டியது....

உங்களால் மறக்க முடியாத சம்பவத்தைத் தெளிவாக எழுதி, முழுப்பெயர், கல்வி கற்கும் பாடசாலை, தரம், உங்கள் புகைப்படம், உங்கள் வீட்டு முகவரி, உங்கள் வீட்டு தொலைபேசி இலக்கம் என்பவற்றை,



ஆசிரியர், சிறுவர் பக்கம்
வலம்புரி,
இல 03, 2 ஆம் ஒழுங்கை,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்,

என்ற முகவரிக்கு அனுப்பி வையுங்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சச்சின்

## சாதனை நாயகனின் சரித்திரம்


.58

...வெளிநாடுகளுக்கு பயணிக்கும்போது விளையாட்டு முடிந்தவுடன் சச்சின் ஓய்வறைக்குத் திரும்பி அடுத்தநாள் ஆட்டத்திற்குத் தன்னைத் தயார்ப்படுத்திக் கொள்வான். இரவு நீண்டநேரம் கண் விழித்தால் அடுத்தநாள் விளையாடுவது சிரமம் என்பதால் சீக்கிரமே தூங்கப்போய்விடுவான். ஆனால், காம்ப்ளியோ கேளிக்கை விடுதிகள், ஹோட்டல்கள் ஆகிய இடங்களுக்குச் சென்று உல்லாசமாக இருப்பான். இது நான் சம்பாதித்த காசு. நான் ஜாலியாக அனுபவிக்கிறேன் என்பது அவன் கொள்கை. கைநிறைய பணம். புதிய மற்றும் வசதியான சூழல் என்றவுடன் ஒரு திடீர் பணக்காரனுக்கு ஏற்படும் அத்தனை சகவாசங்கள், குணங்கள் காம்ப்ளிக்கும் ஏற்பட்டதில் வியப்



பில்லைதான். ஆனால், இவற்றை எல்லாம் திரை மறைவில் செய்திருந்தால் பிரச்சினை இல்லை. என்னை யார் கேள்வி கேட்பதற்கு என்ற தொனியில் அவரது நடவடிக்கைகள் இருந்ததால், விளையாட்டின்மீது அவருக்கு ஆர்வம் இல்லை. வேறு விடயங்களில்தான் ஆர்வம் என்று அனைவரும் நினைக்கத் தொடங்கினர். சினிமாவில் நடிக்கவேண்டும் என்ற ஆசையும் அவருக்கு உண்டு. சச்சினுக்கு சினிமா வாய்ப்புக்கள் வந்தன. ஆனால், அவன் கிரிக்கெட் தவிர வேறு எதற்கும் வளைந்து கொடுக்கவில்லை. காம்ப்ளியோ சினிமா, கிரிக்கெட் இரண்டிற்கும் ஆசைப்பட்டார். ஒரு திரைப் படத்தில் வில்லனாகக்கூட நடித்தார். விளைவு காம்ப்ளி நன்றாக விளையாடியும் அவற்றை அவரது திறமைக்குக் கிடைத்த ரன்களாகக் கருதாமல் ஏதோ அதிர்ஷ்டத்தில் கிடைத்த ரன்களாகவே எண்ணினர்.

இத்தனைக்கும் ஆரம்ப காலங்களில் சச்சினைவிட காம்ப்ளிதான் நன்றாக விளையாடினார். அவர் விளையாடிய முதல் 7 டெஸ்ட்களில் 4 செஞ்சுரிகள். போதாக்குறைக்கு டபுள் செஞ்சுரி வேறு. மொத்த ரன்களோ, 793. சராசரி 113 சதவீதம், 12 டெஸ்ட் போட்டிகளில் 1,000 ரன்களை மிக வேகமாக எடுத்த முதல் இந்திய ஆட்டக்காரரும் காம்ப்ளிதான். ஆனால், சச்சின் முதல் செஞ்சுரியை அடிக்க நீண்டகாலம் ஆயிற்று. 1,000 ரன்களைக் கடக்க சச்சின் 19 டெஸ்ட்கள் ஆட வேண்டியிருந்தது. காம்ப்ளியின் அசுர வேகம் எங்கே சச்சினைக் கவிழ்த்துவிடுமோ என்று

### காம்ப்ளி-உனக்கு நான் இவ்வளவு பெரிய இடைவெளி?

கூட பலர் அஞ்சினர். ஆனால் எல்லாமே காலப்போக்கில் தலைகீழாக மாறத் துவங்கிவிட்டது. வேகப்பந்து வீச்சை சச்சின் சமாளிக்கும் வகையில் காம்ப்ளியால் சமாளிக்க முடியவில்லை என்பது மேற்கு இந்திய தீவுகளுடனான ஆட்டத்திற்கு நிரூபணம் ஆயிற்று.

காம்ப்ளி எடுத்த அதிக ரன்கள் எல்லாமே ஜிம்பாவ்வே, இலங்கை, இங்கிலாந்து என வேகப்பந்து வீச்சாளர்கள் இல்லாத அணிகளுடன் விளையாடிய காரணத்தினால்தான் சாத்தியமாயிற்று என்பதை புள்ளி விவரங்கள் காட்டின. இதைக் காம்ப்ளியே ஒத்துக் கொண்டார்.

மேலும் சச்சினுக்கு இருக்கும் பொறுமை, இடம், பொருள், ஏவம் பார்த்து பேசுதல், அடக்கம் எதுவுமே காம்ப்ளியிடம் இல்லை. தனது முன்கோபம் மற்றும் பொது இடங்களில் அடாவடி நடத்தை காரணமாகப் பொன்னான பல வாய்ப்புகளை இழந்தார்.

கல்யாணமான புதிதில் புது மனைவியுடன் ஹோட்டலில் அவர் பொது மக்கள் முன்னிலையில் கத்தி கூச்சல் போட்ட விதம் பத்திரிகையாளர், கிரிக்கெட் வாரியம் ஆகியோர் அவர் மீது வைத்திருந்த கொஞ்ச நஞ்ச நம்பிக்கையையும் சிதைத்தது.

**கே. ரமேஷ்** (தொடரும்)

> சச்சின்கிரிக்கெட்டிற்காகவாழ்ந்தான் என்றால்காம்ப்ளிஉயிர்வாழ்வதற்காக கிரிக்கெட் விளையாடினான். சச்சினுக்கு கிரிக்கெட் ஸ்வாசம். ஆனால், காம்ப்ளிக்கோ வருவாய் ஈட்டித்தரும் தொழில். இன்னும் சொல்லப்போனால், கிரிக்கெட் தவிர உலகில் அனுபவிக்கவும் சந்தோஷப்படவும் எவ்வளவோ இருக்கின்றன என்பது காம்ப்ளியின் எண்ணம். வெளிநாடுகளுக்கு பயணிக்கும்போது விளையாட்டு முடிந்தவுடன் சச்சின் ஓய்வறைக்குத் திரும்பி அடுத்த நாள் ஆட்டத்திற்குத் தன்னை தயார்ப்படுத்திக் கொள்வான். ஆனால், காம்ப்ளியோ கேளிக்கை விடுதிகள், ஹோட்டல்கள் ஆகிய இடங்களுக்குச் சென்று உல்லாசமாக இருப்பான்.

# ஆத்ம ஞானத்தைத் தேடி


### ஆன்மீகம் 11

**பரமஹம்ஸ சுவாமி**

...உளவியலில் இந்த நினைவுப் பதிவுகளைக் குறிக்க என்கிராம்கள் என்ற வார்த்தையை உபயோகிக்கின்றனர். இந்தப் பகுதியில் இதுபோன்ற எக்கச்சக்கமான தொகுதிகள் சேமித்து வைக்கப்பட்டிருக்கின்றன. இந்த நினைவுகளும் நிகழ்ச்சிகளும் அவற்றிற்கிடையே எந்த விதமான தர்க்கரீதியான தொடர்பும் இல்லாமல் இங்கு சேமித்து வைக்கப்பட்டிருக்கின்றன.

என்ன நிகழ்கிறது என்றால் ஒரு தொகுதி இந்தப்பகுதிக்கு ஒரு பெரிய தாவலில் வரும்பொழுது ஏராளமான எண்ணப் பதிவுகளால் ஏற்கனவே அமைதியற்றிருப்பதால் ஒரு சரியான தீர்மானத்தை எடுப்பதற்கு ஏதுவாக இந்தத் தொகுதியானது அஹங்காரத்தைச் சரியாகச் சென்றடைவதுகூட இல்லை. ஏற்கனவே இருக்கும் எண்ணப் பதிவுகள் உள்ளே வரும் தகவலின் மீது கைவரிசையைக் காட்ட ஆரம்பித்து விடுகிறது. அவை உள்ளே வரும் செய்திகளின் மீது படர்ந்து தீர்மானிக்கும் முறையில் ஒரு பெரிய சேதத்தை விளைவித்து விடுகிறது. அதனால் அஹங்காரமானது உள்ளுணர்வு நிலையிலிருந்தே மிக வேகமாக ஒரு தீர்மானத்தை எடுத்து அந்தக் தொகுதியை திருப்பியனுப்புகிறது. இந்தச் செயன்முறை விழிப்பற்ற நிலையில் மின்னல் வேகத்தில் நிகழ்ந்து விடுகிறது.

உதாரணத்திற்கு நீங்கள் சேமித்து வைத்திருக்கும் தகவல்களின் படி புகைப்பிடிப்பது உடல் நலத்திற்குத் தீங்கானது. அது உடலுக்கும் மனதிற்கும் நல்லதல்ல என்று உங்களுக்குத் தெரியும். நீங்கள் tp நிலையிலிருக்கும் வரை இந்தத் தீர்மானத்தில் உறுதியாக இருப்பீர்கள். ஆனால் மனதிலிருந்து அஹங்காரத்திற்குத் தாவும் பொழுது ஏற்கனவே பதிந்திருக்கும் எண்ணப் பதிவுகள் உங்களைப் புகைப் பிடிக்கத் துண்டுகின்றன. நீங்களும் புகைப்பிடிக்கத் தீர்மானிக்கிறீர்கள். விழிப்பில் நடக்கும் செயன்முறையானது வேண்டாம், அது உடல் நலத்திற்கு நல்லதல்ல என்று சொல்லுகிறது. ஆனால் விழிப்பற்ற நிலையில் நடைபெறும் செயன்முறையானது, வாஸ்தவத்தில்..... சொல்வதுகூட இல்லை. தீர்மானமே எடுத்துவிடுகிறது, நீங்கள் அதனை செயறப்டுத்துகிறீர்கள்! இது உள்ளுணர்வு நிலையிலேயே எடுக்கப்படும் தீர்மானம் ஆகும். இந்த விழிப்பற்ற பகுதியானது மிகவும் சக்தி வாய்ந்தது. அதை மூன்று வழிக ளில் பயன்படுத்தலாம். உள்ளுணர்வு நிலையில் புத்தி பூர்வமான நிலையில் மற்றும் நுண்ணறிவு நிலையில் விழிப்பற்ற மனம் எதிர்மறை நினைவுகளாலும் அமைதியின்மையாலும் அதிக சுமையால் தத்தளித்து கொண்டிருக்கும் வரையில் நாம் இப்பொழுது கண்ட உள்ளுணர்வு நிலையிலேயே வேலை செய்கிறது.



நீங்கள் வெறுமனே விழிப்பற்ற நிலையில் உள்ளுணர்விலிருந்து தீர்மானிக்கிறீர்கள். நீங்கள் உள்ளுணர்வு நிலையில் எடுத்த முடிபுகளுக்காக பெரும்பாலும் பின்னர் வருத்தப்பட நேரிடுகிறது. நான் ஏன் அவ்வாறு நடந்து கொண்டேன்? அது நான் இல்லை! அதை எவ்வாறு நான் அனுமதித்தேன்? எப்படி நான் போன்ற ஒரு தீர்மானத்தை எடுத்தேன்? என்று உங்கள் செயல் குறித்து ஆச்சரியப்படுகிறீர்கள். விழிப்பற்ற மனம் உள்ளுணர்வு நிலையில் செயற்படுவதால் இவ்வாறு நிகழ்கிறது. இந்த நிலையில் நீங்கள் எந்த விதமான தர்க்க ரீதியாகவும் இல்லாமல் வெறுமனே விடயங்களை இணைத்து விழிப்பற்ற நிலையில் ஒரு தீர்மானத்திற்குத் தாவி விடுகிறீர்கள். உதாரணத்திற்கு உங்களுக்கு வெள்ளை உடை அணிந்த யாரேனும் ஏதேனும் இடையூறு ஏற்படுத்தியிருந்தால் பிறகு வெள்ளை உடையணிந்த யாரைப் பார்த்தாலும் உங்கள் அளவிற்கு எட்டாமலேயே பழைய நினைவுகள் மேலெழும்பி உங்களை கோபமடையச் செய்கிறது. உள்ளுணர்வுநிலை உங்கள் விழிப்பான மனம் இன்றியே உங்கள் புரிந்து கொள்ளுதல்கூட இன்றியே வெறுமனே இது நிகழ்ந்து விடுகிறது.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வலிகாமம் மேற்கு பிரதேச செயலகத்திற்கு 2.75 மில்லியன் செலவில் புதிய கட்டடம்

(மானிப்பாய்)

யாழ்.வலிகாமம் மேற்கு பிரதேச செயலகத்தின் 3 மாடிக் கட்டடத் தொகுதிக்கான அடிக்கல் நாட்டும் விழா கடந்த 4 ஆம் திகதி இடம்பெற்றுள்ளது.

பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சின் நிதி ஒதுக்கீட்டின் கீழ் குறித்த பிரதேச செயலக கட்டடம் சுமார் 2.75 மில்லியன் ரூபா





செலவில் அமைக்கப்படவுள்ளது.

இதற்கான அடிக்கல்லினை பாராளுமன்ற உறுப்பினரும் பாராளுமன்ற குழுக்களின் பிரதித் தலைவருமான முருகேசு சந்திரகுமார் நாட்டி வைத்தார்.

இந்நிகழ்வில் யாழ்.மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் திருமதி ரூபினி வரதலிங்கம் வலி.மேற்கு பிரதேச சபை உறுப்பினர் பால கிருஷ்ணன் மற்றும் வலி.மேற்கு பிரதேச சபை உறுப்பினரான செல்வகுமார், வலிகாமம் மேற்கு பிரதேச செயலர் சோதிநாதன் மற்றும் பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், வர்த்தகர்கள், பொதுமக்கள் எனப்பலர் கலந்து கொண்டனர். பிரதேச செயலகத்தில் நிலவும் இடப்பற்றாக்குறைகளை நிவர்த்தி செய்யும் நோக்கில் இக் கட்டடம் அமைத்து கொடுக்கப்படவுள்ளது. (இ-23)

நன்றி:-ஐலண்ட்




# தீவகப்பகுதி வைத்தியசாலைகளுக்கு மருத்துவ உபகரணங்கள் கையளிப்பு

தீவக வைத்தியசாலைக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் வைத்திய உபகரணங்களை வழங்கியுள்ளனர்.

வடக்கு மாகாணசபை உறுப்பினர்களான கே.என்.விந்தன் கனகரத்தினம், அ.பரஞ்சோதி, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முக்கியஸ்தரான ஹென்றி மகேந்திரன் ஆகியோர் கடந்த 2 ஆம் திகதி யாழ் தீவுப்பகுதியில் மக்கள் சந்திப்பில் ஈடுபட்டனர். அங்கு நிலவும் குடிநீர் பிரச்சினை, பிரதேச வைத்தியசாலைகளில் உள்ள குறைபாடுகள் தொடர்பாகவும் ஆராய்ந்தனர்.

இதேவேளை பெறுமதியான மருத்துவ உபகரணங்களை புங்குடுதீவு பிரதேச வைத்தியசாலையில் வைத்து நெடுந்தீவு, நயினாதீவு, அனலைதீவு, புங்குடுதீவு போன்ற பிரதேச வைத்தியசாலைகளுக்கு அந்தந்த பிரதேச வைத்திய அதிகாரிகளிடம் அன்பளிப்பாக வழங்கினர்.

குறித்த உபகரணங்கள் யாவும் அந்தந்த பிரதேச வைத்திய அதிகாரிகளின் விருப்பத்திற்கு அமைவாகவே கொள்வனவு செய்யப்பட்டு வழங்கப்பட்டுள்ளது. பொருட்கள் கொள்வனவிற்கான நிதியினை



வடக்கு மாகாணசபை உறுப்பினர் விந்தன் கனகரத்தினத்தின் பாடசாலை நண்பரும் உறவினருமான லண்டனில் வசிக்கும் நலன்விரும்பி ஒருவர் மூலம் நன்கொடையாக கிடைக்கப்பெற்றது.

இந்த உதவி வழங்கும் நிகழ்வில், வடக்கு மாகாண சுகாதார சுதேச வைத்தியத்துறை அமைச்சின் செயலாளர் இ.ரவீந்திரன், வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆ.கேதீஸ்வரன் ஆகியோரும் கலந்து கொண்டு மருத்துவ உபகரணங்களை வழங்கி வைத்தனர்.

இந்நிகழ்வில் கலந்து கொண்ட வைத்திய அதிகாரிகளும் உத்தியோகத்தர்களும் தாங்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாக கூறும்போது,

புங்குடுதீவு, நயினாதீவு, வேலணை, மண்டைதீவு போன்ற வைத்தியசாலைகளில் தற்பொழுது குடிநீருக்கு பெரும் தட்டுப்பாடு நிலவுவதாக குறிப்பிட்டதோடு இவற்றை உடன் நிவர்த்தி செய்து தரும்படி கோரினார்.

அனலைதீவு வைத்தியசாலைக்கு அவசரமாக அம்புலன்ஸ் படகு ஒன்று தேவை என கோரிக்கை விடுத்ததோடு அனலைதீவு வைத்தியசாலையிலிருந்து அனலைதீவு துறைமுகத்திற்கு நோயாளிகளை கொண்டு வருவதற்கு ஒரு முச்சக்கரவண்டி கூட இல்லை என கூறியதோடு நயினாதீவு வைத்தியசாலையில் இருந்த ஒரு முச்சக்கர வண்டியும் பழுதடைந்ததால் வைத்திய சாலையிலிருந்து நோயாளிகளை துறை முகத்திற்கு கொண்டு வரமுடியாமல் அவஸ்தைப்படுவதாகவும் தெரிவித்தனர்.

இவற்றுக்கு பதிலளித்த வடக்கு மாகாணசபை உறுப்பினரும் வடக்கு மாகாண சுகாதார குழு உறுப்பினருமான விந்தன் கனகரத் தினம் குறிப்பிடுகையில், உங்கள் வைத்தியசாலையின் குறைபாடுகள், அவசர தேவைகள் தொடர்பாக வட க்கு மாகாண சுகாதார சுதேச வைத்தியத்துறை அமைச்சர் சத்திய லிங்கத்தின் கவனத்திற்கு கொண்டு வரப்படும் என தெரிவித்ததோடு எதிர்வரும் காலங்களில் மாகாண சபை உறுப்பினர்களின் நிதி ஒதுக்கீட்டின் மூலமும் இக்குறைகளை தீர்க்க முடியுமென மேலும் தெரிவித்தார். (இ-4)

## கற்கை நெறிகளுக்கு விண்ணப்பிக்க முடியும்

(யாழ்ப்பாணம்)

இலங்கை தொழிற்பயிற்சி அதிகார சபையானது யாழ்ப்பாண மாவட்டத்தில் முழு நேர தொழிற்பயிற்சி கற்கை நெறிகளை நடத்தி வருகின்றது.

அத்துடன் பகுதிநேர தொழிற்பயிற்சி நெறிகளாக CISCO இன் IT Essential A+, Microsoft இன் IC 3, டீசல், பெற்றோல் வாகன இயந்திர திருத்துநர், வீட்டு மின்னிணைப்பாளர், தொழிற்சாலை மின்னிணைப்பாளர், மோட்டார் சைக்கிள் இயந்திர திருத்துநர், முகம் மற்றும் சிகை அலங்கரிப்பாளர், பெண்கள் மற்றும் சிறுவர்களுக்கான ஆடை வடிவமைப்பாளர் கற்கை நெறிகளும் ஆரம்பமாகின்றன.

இக்கற்கை நெறிகளை கற்க விரும்புவர்கள் யாழ்.வீரசிங்கம் மண்டபம் 1 ஆம் மாடி, மாவட்ட அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் அல்லது தொழிற்பயிற்சி அதிகார சபையின் தொழிற்பயிற்சி நிலையங்களில் எதிர்வரும் 17 ஆம் திகதிக்கு முன்னர் தமது பதிவுகளை மேற்கொள்ள முடியும் என இலங்கை தொழிற்பயிற்சி அதிகார சபையின் யாழ்.உதவிப் பணிப்பாளர் கு.நிரஞ்சன் அறிவித்துள்ளார்.

இது தொடர்பான மேலதிக விபரங்களுக்கு 021 222 7949 எனும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுமாறு மேலும் தெரிவித்தார். (இ

# கணனி படவடிமைப்பாளர் கற்கை நெறிக்கு பதியலாம்

இலங்கை தொழிற்பயிற்சி அதிகாரசபையானது கணனி படவடிமைப்பாளர் கற்கை நெறியை யாழ்ப்பாண தொழிற்பயிற்சி நிலையத்தில்ஆரம்பிக்கவுள்ளது. இக்கற்கைநெறி தேசிய தொழில் தகைமை (NVQ4) சான்றிதழுக்கான பயிற்சியாகும்.

இக் கற்கை நெறியை கற்க விரும்புவோர் யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபம் 1 ஆம் மாடி, மாவட்ட அலுவலகத்தில் எதிர்வரும் 12 ஆம் திகதிக்கு முன்னர் அலுவலக நேரத்தில் தமது பதிவுகளை மேற்கொள்ள முடியும் என இலங்கை தொழிற் பயிற்சி அதிகார சபையின் யாழ்.மாவட்ட உதவிப் பணிப்பாளர் கு.நிரஞ்சன் அறிவித்துள்ளார்.

இது தொடர்பான மேலதிக விபரங்களுக்கு 021 222 7949 எனும் தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொள்ள முடியும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ

# குடிநீர் நெருக்கடிக்கு சாத்தியமான தீர்வுகள்

யாழ். முகாமையாளர் சம்மேளத்தினால் வடமாகாணத்தின் குடிநீர் மற்றும் சுகாதார திட்டம் சார்ந்த நெருக்க டிகளும் அவற்றிற்கான சாத்திய மான தீர்வுகளும் எனும் தலைப் பிலான கலந்துரையாடல் ஒன்று ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

இக் கலந்துரையாடல் எதிர்வரும் 10 ஆம் திகதி பிற்பகல் 2.30 மணிக்கு யாழ்.பொது நூலாக கேட்போர் கூடத்தில் இடம்பெறவுள்ளது.

இக் கலந்துரையாடலில் யாழ். பல்கலைக்கழக பொறியியல் பீடத்தின் சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி எஸ்.சிவகுமார், யாழ்.பல்கலைக்கழக மருத்துவ பீடத்தின் வைத்திய கலாநிதி ஆ.சுரேந்திரகுமார் ஆகியோர் உரையாற்றவுள்ளனர் என சம்மேளனத்தின் ஒருங்கிணைப்பாளர் வி.நிரஞ்சன் அறிவித்துள்ளார். (இ

# கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டன



மாதகல் நுணசை மகாவித்தியாலய பாடசாலை மாணவர்களுக்கு புத்தகப் பைகள் மற்றும் கற்றல் உபகரணங்கள் யாழ்ப்பாணத்திலுள்ள இந்திய பிரதித் துணைத்தூதர் எஸ்.தட்சிணாமூர்த்தியால் கடந்த வெள்ளிக்கிழமை வழங்கப்பட்டது.

பாடசாலை வளாகத்தில் ஒழுங்கு செய்யப்பட்ட இந்த நிகழ்வில் தூதரக அதிகாரிகள் மார்வா, ஸ்ரீகாந்த் பாடசாலை அதிபர் சிவநேசன் மற்றும் பாடசாலை ஆசிரியர்கள், மாணவர் கலந்து கொண்டனர்.

இந்தப் பாடசாலை மிகவும் பின்தங்கிய நிலையில் உள்ள வறிய மாணவர்கள் கற்கும் பாடசாலையாகும்.

பாடசாலை அதிபர் கேட்டுக் கொண்டதற்கிணங்க பாடசாலைக்கு மேலும் உதவிகள் வழங்கப்படும் எனவும் துணைத்தூதர் தெரிவித்தார்.

இந்த பாடசாலையில் தரம் 4 இல் பயிலும் மாணவி ஒருவர் இந்திய வீட்டு திட்டத்தின் பயனாளியும் ஆவார்.

தன் பெற்றோர் மற்றும் சகோதரனை இழந்த நிலையில் குறித்த சிறுமி வாழ்ந்து வருகிறார்.


இதேவேளை தூதர் மற்றும் அதிகாரிகள் அந்த மாணவிக்காக கட்டப்படும் இந்திய வீட்டையும் பார்வையிட்டனர். (இ-23)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# கிளி/முருகானந்தா கல்லூரியின் 75 ஆவது ஆண்டு பவளவிழா



## முதலமைச்சரின் ஆசிச்செய்தி



பவளவிழாக் கொண்டாடும் கிளிநொச்சி முருகானந்தா கல்லூரி போரின் போது சொத்துடைமைகள், ஆவணங்கள் அனைத்தையும் இழந்து நிர்க்கதியாய் இருந்த காலம் போய், தற்பொழுது மீண்டும் எழுந்து நிற்கத் தொடங்கியுள்ளது.

அதன் வளர்ச்சியுடன் அதன் பழைய மாணவராகிய தற்போதைய கல்வி அமைச்சர் திரு.த.குருகுலராஜா அவர்கள் தொடர்பாய் இருந்து வருவது கல்லூரி அதிபருக்கும் கல்லூரி மீது கரிசனை கொண்ட அனைவருக்கும் மட்டில்லாத மகிழ்ச்சியை அளிக்கும் என்பதில் சந்தேகம் இருக்க முடியாது. கல்வி அமைச்சரின் ஏற்றம் கல்லூரி மாணவருக்கு நல்ல முன்மாதிரியாகவும் அமையும்.

மேலும் 01.01.2011 தொடக்கம் இக்கல்லூரியின் ஆரம்பப்பிரிவு தனியாக இயங்கத் தொடங்கியது. வித்தியாலயமாக இருந்த இந்தக் கல்விக்கூடம், 25.10.2011 இல் கல்லூரியாகத் தரம் உயர்த்தப்பட்டது.

போரின் பின்னரான இக் கல்லூரியின் எழுச்சி தற்போதைய அதிபரின் ஆற்றுப்படுத்தலின் கீழ் மாணவ சமுதாயத்திற்கு நற்பயனை ஏற்படுத்திக் கொண்டிருக்கின்றது என்று அறிகிறேன்.

என்று வாழ்த்துகிறேன்.

நீதியரசா க.வி.விக்னேஸ்வரன், முதலமைச்சர், வடமாகாணசபை, யாழ்ப்பாணம்.

## அருளாசிச் செய்தி



முரசுமோட்டை முருகானந்தா கல்லூரி பல ஆண்டு காலமாக முரசுமோட்டை மற்றும் அயலூர்வாழ் மாணவ சமூகத்திற்கு மேலோங்கிய கல்விச் செல்வத்தினை சிறப்பாக வழங்கி வருகின்றமை நாம் அனைவரும் அறிந்ததே.


ஆரம்பத்தில் ஒரு சிறிய பாடசாலையாக முருகானந்தா வித்தியாசாலை என்னும் பெயருடன் தனது கல்விச் சேவையை தொடங்கி படிப்படியாக வளர்ச்சி கண்டு இன்று முருகானந்தா கல்லூரியாக தனது சேவையை விரிவுபடுத்தி வளர்ந்துள்ளது. இக் கல்லூரி மாணவ, மாணவிகள் எண்ணற்ற துறைகளில் தமது கல்வியை தொடர்ந்து மாறாது மறையாது தனித்தன்மையுடன் இலங்கையிலும் வெளிநாடுகளிலும் விண்முட்ட வளர்ந்து கல்லூரிக்கு பெருமை சேர்த்துள்ளார்கள்.

இக்கல்லூரியின் 75 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு மாணவ, மாணவிகள், ஆசிரியர்கள் ஒன்றிணைந்து *பவளவிழா மலா* என்ற நூலினை வெளியிடுகின்றமை அறிந்து மிகவும் மகிழ்வுறுகின்றேன்.

மேலும் இக்கல்லூரியின் மாணவ, மாணவிகளின் கல்வித்தரம் மென்மேலும் உயரவும் இம்மலர் நறுமணம் மிக்கதாக உருப்பெற்று சீரிய புகழ் பெறவும் எல்லாம் வல்ல முரசுமோட்டை சிவசுப்பிரமணியர் பாதார விந்தங்களை தொழுது வேண்டி என் இதயபூர்வமான நல்லாசிகளை வழங்குகின்றேன்.

**பிரம்மஸ்ரீ க.கிருஷ்ணநாத சர்மா**
**90/1 TD கோவில் வீதி,**
**முகத்துவாரம்,**
**கொழும்பு-15.**

## செல்வங்களில் எல்லாம் சிறந்த செல்வம் கல்விச் செல்வம் என்பார்கள்



ஒரு சமூகத்தின் சிறப்பிற்கும் உயர்ச்சிக்கும் இரண்டு ஆலயங்கள் முதன்மையானவை. ஒன்று இறை ஆலயம். மற்றையது வித்தியாலயம். ஒருமனிதனின் முழு மனித வளர்ச்சிக்கு இவ்விரண்டு ஆலயங்களும் முக்கிய பங்கு வகிக்கின்றன. ஆன்மீக வாழ்வின் சிறப்பிற்கு இறை ஆலயம் தனது பங்களிப்பை வழங்குகின்றது. அதுபோலவே வித்தியாலயம் ஒருவனின் முழுமையான உருவாக்கத்திற்கும் வளர்ச்சிக்கும் உயர்ச்சிக்கும் காரணமாகின்றது.

இந்த வகையிலே வன்னிப் பெருநிலப்பரப்பிலே கிளிநொச்சி மாவட்டத்திலே இயங்கும் கிளி/முருகானந்தா கல்லூரி தனது பவள விழாவை கொண்டாடுவதையிட்டு பெரும் மகிழ்ச்சி அடைந்து எமது நல்வாழ்த்துக்களையும் இறைவனின் ஆசீரையும் இக்கல்விச் சமூகத்திற்கு வழங்குவதிலே பெருமை அடைகிறேன்.

75 நீண்ட ஆண்டுகள் இக்காலம் எமது தமிழ் இனத்தின் வரலாற்றிலும் மிகப்பெரும் எழுச்சி உருவான காலமாகும். அந்த எழுச்சியின் பின்னணியிலே எமது மக்கள் பெரும் இடப்பெயர்வுகள், இழப்புக்கள், இறப்புக்கள், பிரிவுகள், அழிவுகளைச் சந்தித்த காலமுமாக இருக்கின்றது. இந்த நெருக்கடி மிக்க காலத்தில் இவ்வித்தியாலயம் படிப்படியாக தனது பணியிலே அடைந்த வளர்ச்சி மிக முக்கியமானதாகும். பெரும் இடப்பெயர்வுகள் மத்தியிலே தனது பணியை செவ்வனே ஆற்றியிருக்கின்றது. வசதி வாய்ப்புக்களைப் பொருட்படுத்தாது பாடசாலை இருப்பையும் சிறப்பையும் நோக்காகக் கொண்டு செயற்பட்டதை நான் அறிவேன். பல்வேறு வசதியற்ற காலத்தில் சிறப்பான சேவையாற்றி மாணவர்களின் உயர்ச்சிக்கு வழிகாட்டியது போல யுத்தத்தின் பின்னரான இக்காலத்தில் ஏற்பட்டுள்ள பல வசதி வாய்ப்புக்களை நன்றாகப் பயன்படுத்தி எமது மாவட்டத்திற்கு பெருமை சேர்க்கும் அடைவுகளை எட்டிப்பிடிக்க வேண்டுமென்று வாழ்த்துகின்றேன். பாடசாலையின் அதிபர், ஆசிரியர்கள் அர்ப்பணிப்புடனும் விவேகத்துடன் முதிர்ச்சியுடனும் செயற்பட இறைவனின் ஆசீரைப் பிரார்த்திக்கின்றேன். மாணவச் செல்வங்கள் பொறுப்புணர்ச்சியுடன் கல்விப் பருவத்திலே கிடைக்கும் வாய்ப்புக்களை நன்றாக பயன்படுத்தி வளர்ச்சி பெற ஆசீரை வேண்டுகின்றேன்.

75 ஆண்டின் நிறைவிலே கல்விச் சமூகத்தோடு சேர்ந்து நாமும் மகிழ்கின்றோம். முரசுமோட்டைக் கிராமத்தின் உயர்ச்சிக்கு வழிகாட்டியாய் இருந்து பல சாதனைகளைப் படைத்து நற்சமூகத்தை உருவாக்க தொடர்ந்து இன்னும் பல நூறு ஆண்டுகள் இவ்வித்தியாலயம் பணியாற்ற விரும்பி வாழ்த்துகின்றேன். இறைவன் உங்கள் ஒவ்வொருவரையும் ஆசீர்வதிப்பாராக.

**அருட்பணி அருளானந்தம் யாவிஸ், மறைக்கோட்ட முதல்வர், கிளிநொச்சி, முல்லைத்தீவு மறைக்கோட்டம், கிளிநொச்சி.**

## அதிபரின் ஆசிச்செய்தி



கிளி/முருகானந்தா கல்லூரி 75 ஆவது ஆண்டு பவள விழாவினை கொண்டாடும் பொழுது கல்லூரியின் அதிபராக இருந்து ஆசிசசெய்தி வழங்குவதையிட்டு மகிழ்வடைகின்றேன். இன்றைய கல்லூரி 1939 தைத்திங்கள் 16 ஆம் திகதி அமரர் கணபதிப்பிள்ளை பொன்னையா அவர்களின் முயற்சியினால் அமரர் மயில்வாகனம் முருகேசு அவர்களை முதல் அதிபராகக் கொண்டு ஆரம்பிக்கப்பட்டது.

75ஆவது ஆண்டுவரை 19 அதிபர்களின் வழிநடத்தல்களின் கீழ் 20 ஆவது அதிபராக 22.4.2010 இல் இக்கல்லூரியினை பொறுப்பெடுத்து கிளிநொச்சி மாவட்டத்தில் முன்னணி பாடசாலைகளில் ஒன்றாக தலை நிமிர்ந்து நிற்கின்றது. இன்று எமது கல்லூரி 1000 இடைநிலை பாடசாலை அபிவிருத்தி திட்டத்தின் கீழ் தெரிவுசெய்யப்பட்ட ஒரு பாடசாலையாகவும் முறைசாரா கல்விப்பிரிவினை 3 ஆம் நிலைதொழிற் கல்வி ஆணைக் குழுவின் கீழ் பதிவு செய்யப்பட்ட கணனி பயிற்சி நிலையத்தினையும் கணனி மற்றும் நவீன தொழில் நுட்பங்களுடன் கூடிய வகுப்பறை வசதிகளையும் கொண்டு சிறப்பாக இயங்கி வருகின்றது. எமக்கு கிடைத்த கட்டட வளங்களில் வகுப்பறைக்கான கட்டடத்தொகுதி இன்னமும் பற்றாக்குறையாக உள்ளது. எமது கல்லூரி தேசியமட்டத்தில் பல்வேறு விருதுகளை பெற்று 2013 இல் சாதனைகளை நிலைநிறுத்தியுள்ளது. 75 ஆவது ஆண்டில் இவ்வாறான வளர்ச்சி கண்டுள்ள கல்லூரி மேலும பல சாதனைகள் படைக்க வேண்டும் என முருகப் பெருமானின் இறையருள் வேண்டி வாழ்த்துகின்றேன்.

அத்துடன் இக்கல்லூரியின் வளர்ச்சிக்கு வித்திட்ட பெருந்தகைகளான அமரர். ஆ.முருகேசு, அமரர்.S.வேலுப்பிள்ளை, அமரர்.S.சரவணமுத்து, அமரர்.S.கந்தையா, அமரர்.S.சுபபிரமணியம், அமரர்.S.அந்தோனிப்பிள்ளை, அமரர்.S.வல்லிபுரம், அமரர்.S.வேலாயுதம், திரு.S.காராளபிள்ளை, திரு.K.சந்திரபாலன், அமரர்.V.சோமலிங்கம், திரு.S.துரைராஜா, அமரர்.A.K.ராஜேந்திரம், திரு. அந்தோனிப்பிள்ளை, திரு.K.M.பத்மநாதன், திரு.V.இராஜகுலசிங்கம், திரு.C.மதுரநாயகம், திரு.M.C.L.மனுவல், திருமதி.M.இதயசிவதாஸ் ஆகிய அதிபர்களுக்கும் இவர்களோடு ஒத்துழைத்த ஆசிரியர்களுக்கும் பெற்றோர்கள், பழைய மாணவர்கள், நலன்விரும்பிகள் ஆகியோருக்கும் பவள விழாகாணும் இவ் ஆண்டில் தற்போதைய அதிபர் என்ற வகையில் நன்றியையும் பாராட்டுகளையும் தெரிவிப்பதுடன் பவளவிழா காணும் இன்றைய நன் நாளில் எல்லா நிகழ்வுகளும் சிறக்க இறவனை பிரார்த்தித்து நன்றி கூறுகின்றேன்.

**தி.வரதன்**
**அதிபர்.**

**பெற்றோர்கள்,**
**ஆசிரியர்கள், பழைய**
**மாணவர்கள்,**
**நலன்விரும்பிகள்**
**அனைவரையும்**
**கலந்து சிறப்பிக்குமாறு**
**கேட்டுக்கொள்கின்றோம்.**

(சி-8443)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நம்பிக்கையைக் காப்பாற்றுவாரா? ஷெயிட் அல் ஹுசேன்

ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் ஆணையாளர் ஷெயிட் அல் ஹுசேன் பதவியேற்றமை தொடர்பில் இலங்கை அரசாங்கத்திடமிருந்து திருப்தியான கருத்து வெளி வந்துள்ளது. ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் ஆணையாளர் ஷெயிட் அல் ஹுசேன், பக்கச்சார்பின்றி நடந்துகொள்வார் என்றும் இலங்கை அரசாங்கத்துக்கு சாதகமாகச் செயற்படுவார் என்றும் கடந்தவாரம் நம்பிக்கை வெளியிட்டிருந்தார் ஊடகத்துறை அமைச்சர் கெஹலிய றம்புக்வெல.

அவர் இத்தகைய கருத்து வெளியிட்டதற்கு, கடந்த மாதம் 31 ஆம் திகதியுடன் ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் ஆணையாளர் பதவியிலிருந்து ஓய்வுபெற்ற நவநீதம்பிள்ளை மீதிருந்த வெறுப்புத்தான் காரணம். இலங்கையில் போர் நடந்துகொண்டிருந்த காலப் பகுதியான 2008 ஆம் ஆண்டு, ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் பதவியை பொறுப்பேற்ற நவநீதம்பிள்ளை, போர் முடிந்து 5 ஆண்டுகள் நிறைவடையும்வரை அப்பதவியை வகித்து வந்தார். இலங்கையைப் பொறுத்தவரையில் இது மிகவும் முக்கியமானதொரு காலகட்டம். அதுபோலவே, சர்வதேச மனித உரிமைகள் ஆர்வலர்களுக்கும் இது சவாலான, முக்கியமானதொரு காலகட்டம்.

நவநீதம்பிள்ளையின் பதவிக்காலம் இலங்கையில் உச்சக்கட்டப்போர் இடம்பெற்ற - போருக்குப் பின்னர் உரிமைகள் மறுக்கப்பட்ட கால கட்டங்களை உள்ளடக்கியிருந்தது. எனவே, இவை பற்றிய கரிசனைகள், கவலைகளையெல்லாம அவர் அவ்வப்போது எழுப்பத் தவறவில்லை. இலங்கையில் இடம்பெற்றதாகக் கூறப்படும் மனித உரிமை மீறல்கள் குறித்து ஒவ்வொரு தடவை சுட்டிக்காட்டியபோதும் கண்டித்த போதும் அரசாங்கத்திடமிருந்து நவநீதம்பிள்ளை கடுமையான விமர்சனங்களை எதிர்கொள்ள வேண்டியிருந்தது.

நவநீதம்பிள்ளை, தென்னாபிரிக்கத் தமிழராக வேறு இருந்துவிட்டதால், அவரையும் மிக இலகுவாக புலி என்றும் புலிகளுக்கு சார்பானவர் என்றும் அரசாங்கம் வர்ணித்தது. இலங்கை போரில் இடம்பெற்றதாகக் கூறப்படும் மனித உரிமை மீறல்களுக்கு பொறுப்புக் கூறப்பட வேண்டும் என்றும் அதற்கு சர்வதேச விசாரணையே ஒரே வழி என்றும் ஆரம்பத்திலிருந்து வலியுறுத்தி வந்தவர் நவநீதம்பிள்ளை. அதனாலேயே, நவநீதம்பிள்ளை மீது இலங்கை அரசாங்கத்துக்கு அத்தனை கோபம்.

நவநீதம்பிள்ளை, ஆரம்பத்திலிருந்து வலியுறுத்தியபடியே தனது பதவிக்காலத்துக்குள் இலங்கையில் இடம்பெற்றதாகக் கூறப்படும் போர்க்குற்றங்கள் குறித்து சர்வதேச விசாரணைப் பொறிமுறையொன்றை உருவாக்க வழிவகை செய்துவிட்டார். அவர் தனது பதவியை விட்டு விலகும்போது, ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் பணியகத்தின் விசாரணைகள் ஆரம்பமாகிவிட்டன.

இந்த விசாரணையின் முன்னேற்றங்கள் குறித்த அறிக்கைகூட, எதிர்வரும் 8 ஆம் திகதி ஜெனீவாவில் ஆரம்பமாகும் ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் 27 ஆவது கூட்டத்தொடரில் சமர்ப்பிக்கப்படவுள்ளது. தனது பதவிக் காலத்தில் இலங்கை அரசாங்கத்தை ஆட்டிப்படைத்த ஒருவராகவே நவநீதம்பிள்ளை விளங்கினார். அதனால்தான், அவரை கடைசிவரையில் இலங்கை அரசாங்கம் கடுமையாக விமர்சித்து வந்தது. இப்போது அவர், ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் பதவியிலிருந்து விலகியுள்ளதைக் கொண்டாடும் ஒரே நாடு என்றால், அது இலங்கையாக மட்டுமே இருக்க முடியும். அந்தளவுக்கு இவருக்கும் இலங்கைக்கும் இடையில் ஒரு பெரும் விரிசல் இருந்துவந்தது. இப்போது நவநீதம்பிள்ளை, ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் பதவியில் இல்லை. புதிய ஆணையாளராக, செப்டெம்பர் 3 ஆம் திகதி நியூயோர்க்கில் ஐ.நா. பொதுச்செயலர் முன்பாக முறைப்படி பதவியேற்றுள்ளார் ஜோர்தான் இளவரசர் ஷெயிட் அல் ஹுசேன.

இவர் மீது இலங்கை அரசாங்கம் அதிக நம்பிக்கை வைத்திருப்பதற்கும் பக்கச்சார்பின்றிச் செயற்படுவார் என்று குறிப்பிட்டதற்கும் நவநீதம்பிள்ளை அளவுக்கு இலங்கைக்கு எதிராகச் செயற்படமாட்டார் என்ற நம்பிக்கையே முக்கிய காரணம். ஆனால், இலங்கை அரசாங்கம் எதிர்பார்க்கின்ற அளவுக்கு இளவரசர் ஷெயிட் அல் ஹுசேன் கடும்போக்குடன் நடந்துகொள்ள மாட்டார் என்று எதிர்பார்ப்பதற்கு எந்த அடிப்படையும் இல்லை என்றே கூறவேண்டும்.

இலங்கை அரசாங்கம், குற்றஞ்சாட்டுகின்ற அளவுக்கு நவநீதம்பிள்ளையின் மீது வேறெந்த நாடும் அவரை பக்கச்சார்புடையவர் என்று குறை கூறவில்லை. இலங்கை அரசாங்கம் இந்தக் குற்றச்சாட்டை முன்வைப்பதற்கு, இலங்கை விவகாரத்தில் அவர் முன்வைக்கும் கடுமையான குற்றச்சாட்டுகள் மட்டும் காரணமல்ல.

இலங்கை அரசாங்கம் தன்மீது சுமத்தப்படும் குற்றச்சாட்டுகளை முற்றாகவே நிராகரிக்க வழியில்லாத நிலையில், அந்தக் குறைபாட்டை மறைப்பதற்கும் நவநீதம்பிள்ளை மீதான விமர்சனத்தை பயன்படுத்திக் கொண்டது. ஒரு குற்றச்சாட்டு முன்வைக்கப்படும்போது அதைத் துணிவுடன் எதிர்கொண்டு, பொய்யென்று நிரூபித்து, தன்னை நிரபராதியாக வெளிப்படுத்துவது ஒரு விதம்.

அந்தக் குற்றச்சாட்டை முன்வைத்தவரை கேவலப்படுத்தியோ, பொய்யர் என்றோ வெளிப்படுத்தி, அவர் கூறியதால் அந்தக் குற்றச்சாட்டும் பொய்யானதே என்று சாதிப்பது இன்னொரு விதம். இலங்கை அரசாங்கம், மனித உரிமைகள் தொடர்பான தன்மீதுள்ள குற்றச்சாட்டுகளை துணிவுடன் எதிர்கொண்டு, அவையெல்லாம் வெறும் பொய்யென்று நிரூபிக்க முனையவில்லை.

மாறாக, நவநீதம்பிள்ளையை பொய்யராக்கி, அந்தக் குற்றச்சாட்டுகளை பலவீனப்படுத்த எத்தனித்தது. இதனால்தான், இலங்கை அரசாங்கத்தால் ஜெனீவா சமர்க்களத்தில் வெற்றிபெற முடியாது போனது. போர் முடிவுக்கு வந்த ஓரிரண்டு ஆண்டுகளுக்குள்ளாகவே இலங்கை அரசாங்கம், நியாயமானதொரு விசாரணையை நடத்தி சுதந்திரமான, நம்பகமான அறிக்கையொன்றை வெளிப்படுத்தியிருந்தால், நவநீதம்பிள்ளையின் கருத்துக்களை உலகம் செவி மடுத்திருக்காது.

அரசாங்கம் அதனைச் செய்யத் தவறியதால், அதன் நேர்மை குறித்து உலக நாடுகளுக்கு சந்தேகம் வந்துவிட்டது. அதனால்தான், இலங்கை அரசாங்கம் சொல்வதையெல்லாம் ஏற்க மறுத்து, ஐ.நா. மனித உரிமைகள் பேரவைத் தீர்மானங்களுக்கு பெரும்பாலான நாடுகள் ஆதரவளித்தன. இந்தக் கட்டத்தில் நவநீதம்பிள்ளை பக்கச்சார்பாக நடந்துகொள்வதாகக் கூறப்பட்ட குற்றச்சாட்டுகளும் வெளியுலகில் எடுபடவில்லை.

அதாவது நவநீதம்பிள்ளையின் நேர்மையை கேள்விக்குட்படுத்தி, மனித உரிமை மீறல் குற்றச்சாட்டுகளை வலுவிழக்கச் செய்யும் இலங்கை அரசாங்கத்தின் உத்தி பெரிதும் தோல்வி கண்டுவிட்டது. ஆனாலும், அரசாங்கம் அதனை உள்நாட்டில் மிகத் தாராளமாகவே பயன்படுத்திக்கொள்கிறது. அதன்மூலம் சிங்கள மக்களை திருப்திப்படுத்தியும் வருகிறது. அதாவது, நவநீதம்பிள்ளைதான், இலங்கைக்கு எதிராகச் செயற்படுகிறார். அவர் இந்தப் பதவியை விட்டுப் போய்விட்டதால், இனிப் பிரச்சினையில்லை என்பது போன்ற தோற்றப்பாட்டை உருவாக்க முனைகிறது அரசாங்கம்.

அரசாங்கத்தின் இந்த நம்பிக்கையை புதிதாக பதவியேற்றுள்ள ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் இளவரசர் ஷெயிட் அல் ஹுசேன காப்பாற்றிக் கொள்வாரா என்ற கேள்வி எப்போதோ எழத் தொடங்கிவிட்டது. ஏனென்றால், இலங்கையை பொறுத்தவரையில் ஒரு மோசமான அரசியல் கலாசாரம் உள்ளதை எவரும் மறுக்கமுடியாது. அதாவது விமர்சனங்களை எதிர்கொள்ளும் பக்குவமோ, அத்தகைய விமர்சனங்களை தர்க்க ரீதியாக எதிர்கொள்ளும் திறனோ இலங்கை அரசாங்கத்திடம் இல்லை.

இந்தக் குறைபாடு, ஐ.நா.வுடனான இலங்கையின் உறவுகளிலும் நவநீதம்பிள்ளையுடனான உறவிலும் மிகப்பெரிய இடைவெளியை உருவாக்கிவிட்டது. இப்போது, ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் இளவரசர் ஷெயிட் அல் ஹுசேன் பதவியேற்றுள்ள நிலையில், எல்லாமே ஒரே இரவில் மாறிவிடுமென்று இலங்கை அரசாங்கம் எதிர்பார்த்தால், அது முட்டாள்தனத்தின் உச்சம் என்றே கூற வேண்டும்.

நவநீதம்பிள்ளை அளவுக்கு இலங்கை விவகாரத்தில் அதிக ஈடுபாட்டையும் கடும்போக்கையும் இளவரசர் ஷெயிட் அல் ஹுசேன் வெளிப்படுத்துவார் என்று மிகையான எதிர்பார்ப்பை கொண்டிருக்க முடியாது. அதற்காக, நவநீதம்பிள்ளையின் நிலைப்பாடு குறித்த அரசாங்கத்தின் கருத்துடன் அவர் உடன்படுவார் என்றும் எதிர்பார்க்க முடியாது. நவநீதம்பிள்ளை, இலங்கை விவகாரத்தில் அதிக ஈடுபாடும் கடும்போக்கும் காட்டியதற்கு முக்கியமான காரணம், அவரது பதவிக்காலத்தில்தான், இலங்கையில் கடுமையான போரும் அதன் போதான கொடுமையான நிகழ்வுகளும் அரங்கேறியிருந்ததாகக் கூறப்படுகிறது. அந்தப போரில் பொதுமக்களை பாதுகாக்க ஐ.நா.வும் தவறிவிட்டதான குற்றச்சாட்டுகள் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளன.

நவநீதம்பிள்ளை ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளராக பதவியிலிருந்த நிலையில், அதனைத் தட்டிக்கேட்க வேண்டிய பொறுப்பு அவருக்கு அதிகமிருந்தது. அதைவிட, மிகப் பெரும் அழிவுகளுக்கு ஐ.நாவும் காரணமாகிவிட்டது என்ற குற்றச்சாட்டொன்று இருக்கும் நிலையில், அதற்கு பரிகாரம் தேடிக்கொள்ளும், பாவத்தை கழுவிக்கொள்ளும் மனோநிலை கூட அவரிடம் இருந்திருக்கலாம். இவை, இலங்கை விவகாரத்தில் அதிக ஈடுபாட்டை அவர் வெளிப்படுத்த முக்கியமான காரணங்கள் என்று கருதலாமே தவிர, அவர் தனியானதொரு மறைமுக நிகழ்ச்சிநிரலின் கீழ் செயற்பட்டதாக ஒருபோதும் கருதமுடியவில்லை.

இப்படியான நிலையில், புதிய ஆணையாளர் இளவரசர் ஷெயிட் அல் ஹுசேன் இலங்கை அரசாங்கத்துடன் எத்தகைய உறவை வைத்துக்கொள்ளப் போகிறார் - கடும்போக்குடன் நடந்துகொள்வாரா என்றெல்லாம் கேள்விகள் எழுகின்றன.

அவர் பக்கச்சார்பின்றி செயற்படுவார் என்றும் இலங்கை அரசுக்கு சாதகமாக நடந்துகொள்வார் என்றும் வெளிப்படுத்தப்படும் நம்பிக்கைகள், எந்தளவு காலத்துக்கு நிலைக்கும் என்பதுதான் முக்கியமான கேள்வி. ஏனென்றால், நவநீதம்பிள்ளை மாறியவுடன் ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் பணியகத்தின் அணுகுமுறைகளும் அடியோடு மாறிப் போகுமென்று கருதமுடியாது. அது ஒருபோதும் சாத்தியமில்லாத விடயம். அவ்வாறு நடந்தால்தான் அது பக்கச்சார்புத் தன்மையைத்தான் வெளிப்படுத்தும்.

ஏற்கெனவே நவநீதம்பிள்ளை விட்ட இடத்திலிருந்து தொடர்வதுதான் புதிய ஆணையாளரின் பணியே தவிர, அவரால் தனக்கென புதிய வழியை தேடிக்கொள்ள முடியாது. அந்த வகையில் பார்க்கப்போனால், புதிய ஆணையாளர் இளவரசர் ஷெயிட் அல் ஹுசேன். நவநீதம்பிள்ளையின் அணுகுமுறைகளை அடிப்படையாக வைத்தே செயற்பட வேண்டும்.

அதிலும் முக்கியமாக, இலங்கையில் இடம்பெற்றதாகக் கூறப்படும் மீறல்கள் குறித்த விசாரணைகள் நடந்து வருகின்றன. அதனை தடுத்து நிறுத்தவோ, தவறாக வழிநடத்தவோ புதிய ஆணையாளரால் முடியாது. இந்த விசாரணைகளின் முன்னேற்றம் குறித்த வாய்மொழி அறிக்கையை, புதிய ஆணையாளர் ஷெயிட் அல் ஹுசேன், இன்று 8 ஆம் திகதி தொடங்கும் ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் 27 ஆவது அமர்வில் சமர்ப்பிக்க வேண்டும்.

அந்த அறிக்கை வெளியானதன் பின்னரும், புதிய ஆணையாளர்மீது அரசாங்கம் நம்பிக்கையை வெளிப்படுத்துமா என்று பார்க்க வேண்டும். ஏனென்றால், அந்த அறிக்கையில் இலங்கை அரசாங்கத்தை குற்றஞ்சாட்டும் கருத்துக்கள் இடம்பெற்றிருந்தால், வேதாளம் மீண்டும் முருங்கை மரத்தில் ஏறிய கதையாகிவிடும். அதாவது, புதிய ஆணையாளரும் பக்கச்சார்புடையவர், நவநீதம்பிள்ளையின் வழியில் செல்கிறார் என்று புராணம் படிக்கத் தொடங்கிவிடும்.

அதேவேளை, மீறல்கள் குறித்த அதிகளவு குற்றச்சாட்டுகள் இருக்கின்ற நிலையில், இலங்கை அரசாங்கத்துக்கு சாதகமானதொரு அறிக்கையை ஐ.நர். விசாரணைக்குழு சமர்ப்பிக்குமென்று ஒருபோதும் எதிர்பார்க்க முடியாது. எனவே, அந்த அறிக்கையும் அதன் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்படும் நகர்வுகளும் புதிய ஆணையாளருக்கு மிகவும் சோதனையாக அமையும். அவர், இலங்கை அரசாங்கத்தின்மீது எத்தகைய குற்றச்சாட்டுகளை சுமத்த முனைந்தாலும், அடுத்த கணமே அவரையும் அரசாங்கம், புலியாகவோ அல்லது பக்கசார்புடையவர் என்றோ விமர்சிப்பதற்கு நேரம் எடுக்காது.

எனவே, இளவரசர் ஷெயிட் அல் ஹுசேனுக்கு இலங்கை அரசாங்கத்தின் நம்பிக்கையை தக்கவைத்துக்கொள்வதற்கு ஓரிரு வாரங்கள்தான் கிடைக்கப் போகின்றன. அதற்குப் பின்னரும், இலங்கை அரசின் நம்பிக்கையை அவர பேணிக்கொண்டால் அது ஆச்சரியமானது.

*-கே.சஞ்சயன்-*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுதந்திரத்தை முழுமையாக்க சுதந்திரக்கட்சி உருவானதாம்

## ஜனாதிபதி விளக்கம்



நாட்டின் சுதந்திரத்தை முழுமையடையச் செய்யவே சுதந்திரக்கட்சி உருவானது எனவும் நாட்டின் தனிநபர் வருமானத்தை 7 ஆயிரம் ரூபாவாக உயர்த்தும் நிலைமைக்கு நாட்டை அபிவிருத்தி செய்ய போவதாகவும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

பதுளையில் நடைபெற்ற ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் 63 ஆவது தேசிய மாநாட்டில் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இதனை தெரிவித்தார்.

வரலாற்று சிறப்புக்கள் இருப்பதன் காரணமாகவே ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மாநாட்டை நடத்த ஊவா மாகாணத்தை தெரிவு செய்தோம்.

நாட்டின் சுதந்திரத்திற்கான வரலாற்று சிறப்புமிக்க மாபெரும் போராட்டத்தை நடத்திய ஊவா மாகாணத்தில் மாநாட்டை நடத்துவது மிகவும் பொருத்தமானது என நம்பினோம்.

1818 ஆம் ஆண்டு வீரகெப்பட்டிபொல ஊவா வெல்லஸ்ஸவில் ஆரம்பித்த போராட்டம் அன்று தோல்வியடைந்தாலும் ஏகாதி பத்திய எதிர்ப்பு போராட்டத்தின் வெற்றியை நோக்கி சுதந்திரக் கட்சியும் அதன் கூட்டணிக் கட்சிகளும் கொண்டு சென்றன. ஐக்கிய தேசியக் கட்சியும் ஜே.வி.பியும் பெண்களை மறந்து போயின.

எனினும் ஸ்ரீலங்கா சுதந் திரக் கட்சி என்றும் பெண்களை மறந்ததில்லை.

நாட்டின் சுதந்திரத்தை முழுமையடைய செய்யவே 1951 ஆம் ஆண்டு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி நாட்டில் உருவாகியது.

சுதந்திரக் கட்சி பொதுமக்களின் உரிமைகளை பெற்றுக்கொடுத்தது. இதன் காரணமாகவே சிங்களம் மற்றும் தமிழ் பேசும் பொதுமககளின் பிள்ளைகள் எம்முடன் கைகோர்த்தனர் எனவும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ மேலும் தெரிவித்தார். (இ)

# வன்முறைகள் அதிகரித்தால் தேர்தல் ஒத்திவைக்கப்படும்!

## பிரதித் தேர்தல் ஆணையாளர்



தேர்தல் வன்முறைகள் தொடர்ந்தும் இடம்பெற்றால் ஊவா மாகாண சபை தேர்தல் ஒத்திவைக்கப்படலாம் என பிரதி தேர்தல் ஆணையாளர் எம்.எம்.முகமட் தெரிவித்துள்ளார்.

தேர்தல் வன்முறைகளை கட்டுப்படுத்துவதற்கு பொலிஸார் ஒத்துழைப்பு வழங்குகின்ற போதிலும் வன்முறைச் சம்பவங்கள் அதிகரித்து செல்கின்றன.

ஊவாவில் தேர்தல் வன்முறைகள் மிகவேகமாக அதிகரித்துள்ளன, இதனால் அங்கு சுதந்திரமான, நீதியான தேர்தலுக்கான வாய்ப்பில்லை,

தேர்தலை நடத்தமுடியாது என்ற ஒரு நிலைமை வருமானால் தான் தேர்தலை ஒத்திவைப்பதற்கான நடவடிக்கைகையை எடுப்பேன் என தேர்தல் ஆணையாளர் மகிந்த தேசப்பிரிய எமக்கு தெரிவித்தார்.

தேர்தலை குறிப்பிட்ட திகதியில் நடத்த நாங்கள் முயல்கிறோம். ஆனால் அங்கு காணப்படும் நிலை சுதந்திரமான தேர்தலை நடத்துவதற்கு ஏதுவானதாக காணப்படவில்லை என பிரதித்தேர்தல் ஆணையாளர் மேலும் தெரிவித்தார். (இ)

# ஐ.தே.கவினது உறுப்பினரே எதிர்க்கட்சிகளின் வேட்பாளர்

## லக்ஸ்மன் கிரியெல்ல திட்டவட்டம்



ஜனாதிபதித் தேர்தலில் எதிர்க்கட்சிகளினால் நிறுத்தப்படும் வேட்பாளர் ஐக்கிய தேசியக் கட்சியில் அங்கம் வகிப்பவராக இருக்க வேண்டும் என அந்த கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் லக்ஸ்மன் கிரியெல்ல தெரிவித்துள்ளார்.

அரசாங்கம் ஜனாதிபதித் தேர்தலை அறிவித்ததும் ஐக்கிய தேசியக் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளரின் பெயர் அறிவிக்கப்படும்.

நாட்டின் பிரதான எதிர்க்கட்சி ஐக்கிய தேசியக் கட்சி என்பதால், நிறுத்தப்பட போகும் ஜனாதிபதி வேட்பாளர் அனைவரும் ஏற்றுக் கொண்ட ஐக்கிய தேசியக் கட்சியின் வேட்பாளராக இருக்கவேண்டும் எனவும் லக்ஸமன் கிரியெல்ல தெரிவித்தார்.

இதனிடையே, ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்ரமசிங்க, அண்மையில் கண்டிக்கு விஜயம் செய்து மல்வத்து, அஸ்கிரிய மாநாயக்க தேரர்களையும் ராஜோபவனாராமாதிபதி கெப்பிட்டியாகொட சிறிவிமல நாயக்க தேரர் ஆகியோரைச் சந்தித்து ஜனாதிபதித் தேர்தலில் நிறுத்தப்படும் பொது வேட்பாளர் குறித்து கலந்துரையாடியுள்ளார்.

அத்துடன் தேர்தலில் தான் போட்டியிடுவது தொடர்பில் மாநாயக்கர்களின கருத்துக்களையும் கேட்டறிந்துள்ளார்.

ஜனாதிபதித் தேர்தலில் தான் போட்டியிட முடியாது போனால், பொது வேட்பாளரை நிறுத்துவது குறித்து ஆராயப்படும் என ரணில் விக்ரமசிங்க இதன் போது கூறியுள்ளார். (இ)

# கியூபா வெளிவிவகார அமைச்சர் 32 ஆண்டுகளின் பின் இலங்கையில்

கியூபாவின் வெளிவிவகார அமைச்சர் புரூனோ ருத்ரிகோஸ் பரில்லா உத்தியோகபூர்வ விஜயமொன்றை மேற்கொண்டு நேற்று முன்தினம் அதிகாலை 4.45 மணிக்கு இலங்கை வருகை தந்துள்ளார்.

இவரை வெளிவிவகார அமைச்சின் அதிகாரிகள் பலர் கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து வரவேற்றுள்ளனர்..இலங்கைக்கு கியூபா வெளி விவகார அமைச்சர் ஒருவர் 32 வருடாங்களின் பின்னர் விஜயம் செய்துள்ளார்.

இலங்கைக்கும் கியூபாவுக்கும் இடையிலான இராஜதந்திர உறவின் 55 ஆவது ஆண்டு நிறைவு கொண்டாடப்படுவதன் நிமித்தமே கியூபாவின் வெளியுறவு அமைச்சரின் விஜயம் அமைந்துள்ளது. கடந்த பெப்ரவரி மாதத்தில் அமைச்சர் சுசில் பிரேமஜயந்த, ஜனாதிபதியின் விசேட பிரதிநிதியாக கியூபாவுக்கு விஜயம் செய்திருந்த போது, இலங்கைக்கு வருமாறு கியூபாவின வெளியுறவு அமைச்சருக்கு அழைப்பு விடுத்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (இ)

# இன்று ஒரு தகவல்

## இளவரசனின் பணிவு

ஒரு பெரிய காட்டின் மத்தியில் ஒரு ஆச்சிரமம் இருந்தது. அங்கே ஒரு முனிவர் இருந்தார். அவர் பல்வேறு இடங்களிலிருந்து வரும் குழந்தைகளுக்கும் பாடம் கற்பித்து வந்தார்.

ஏழை–பணக்காரர் என்ற வேறுபாடின்றி எல்லோரும் அவரிடம் தங்கள் பிள்ளைகளை கல்வி கற்க அனுப்பி வைத்தார்கள். அரசனின் பிள்ளைகள் கூட அவரிடம்தான் படிக்க வருவார்கள்.

ஆனால், அந்த முனிவரைப் பெறுத்தவரையில் எல்லாப் பிள்ளைகளும் ஒன்றுதான். அவர் சொல்லும் வரைக்கும் மாணவர்கள் அங்கேயே இருந்து படிக்க வேண்டும்.

ஒரு சமயம் ஒரு ராஜகுமாரனும் அவரிடம் படித்துக் கொண்டிருந்தான். அவனுக்குப் பதினைந்து வயதிருக்கும்.

சில வருடங்களுக்குப்பின் அந்த முனிவர் தன்னிடமிருந்த மாணவர்களுக்கெல்லாம் பரீட்சை வைத்தார். அவர்களின் அறிவு முதிர்ச்சியைக் கணிப்பதற்குப் பல சோதனைகள் நடத்தினார்.

அவர் வைத்த பரீட்சைகளில் சித்தியடைந்த மாணவர்களை ஒவ்வொருவராக அழைத்து வீட்டுக்கு அனுப்பி வைத்தார்.

கடைசியில் ஒரே ஒரு மாணவன் மட்டும் இருந்தான். அவனை மட்டும் முனிவர் வீட்டுக்கு அனுப்பவில்லை.

யார் அவன் தெரியுமா? அவன்தான் ராஜகுமாரன். அந்த ராஜகுமாரனின் தந்தைக்கு வயது ஏறிக்கொண்டே போயிற்று.

இளவரசன் வந்தால் விரைவில் அவனுக்குப் பட்டம் கட்டிவிட்டு தான் விலகிக் கொள்ளலாம் என்று அவர் நினைத்தார். இளவரசனுக்குத் திருமணம் செய்து வைக்க வேண்டும். ஆனால் இளவரசன் வரும் வழியைக் காணோம்.

ராஜா பார்த்தார். சரி, நேரில் விபரம் தெரிந்து கொண்டு வரலாம் என்று காட்டுக்குப் புறப்பட்டார். அங்கே சென்று முனிவரைப் பார்த்தார்.

ராஜா மெதுவாக முனிவரிடம், "எல்லோரையும் வீட்டுக்கு அனுப்பு விட்டீர்களாமே... என் பிள்ளையை மட்டும்..." என்று சொல்லி இழுத்தார். அதற்கு முனிவர் உடனே பதில் சொல்லவில்லை.

ராஜாவை அழைத்துச் சென்று விருந்தினர் குடிசையில் தங்க வைத்தார். பின்னர் சொன்னார்.

"உங்கள் மகன் எல்லாப் பாடங்களிலும் முதல் இடம்பெற்று விட்டான். அப்படி முதலாவதாக வரும் மாணவனுக்கு நான் இன்னொரு பரீட்சை வைப்பது வழக்கம். அதிலும் அவன் முதலாவதாக வந்து விட்டால் அவன் ஒரு பெரிய வித்துவான் என்ற கௌரவத்தை அடைவான்" என்றார் முனிவர்.

அவ்விதம் சொல்லிவிட்டு அவர் அங்கிருந்து சென்றார். ராஜா அன்றிரவு அங்கேயே தங்கினார்.

காலையில் எழுந்து வெளியில் வரும்போது, தூரத்தில் ஒருவன் ஒரு கையில் கோடரியை வைத்துக் கொண்டு தலையில் ஒரு பெரிய விறகுக் கட்டையை சுமந்து கொண்டு வருவது தெரிந்தது. யாராவது விறகு வெட்டியாக இருக்கும் என்று அரசர் நினைத்தார்.

அருகில் வந்ததும் உற்றுப் பார்த்தார். பார்த்தால்... அது தன்னுடைய மகன்! திகைத்துப்போய் விட்டார்.

"என்ன இது? ஒரு ராஜகுமாரனைக்கூட இதுபோன்ற வேலைகளையெல்லாம் செய்யச் சொல்கிறார்களே!" என்று நினைத்தார். ராஜகுமாரன் விறகுக் கட்டையைக் கொண்டுபோய் கொல்லைப் பக்கம் வைத்தான்.

அதேசமயம் முனிவர் அங்கே வந்து, விருந்தினர் குடிசையின் வாசல் பக்கத்தை கூட்டிப் பெருக்கி சுத்தம் செய்யச் சொன்னார். இளவரசனும் நன்றாகச் சுத்தம் செய்தான்.

இதைப் பார்த்த ராஜா, "மகனே! என்ன வேலை செய்கிறாய்? துடைப்பத்தைக் கீழே போடு!" என்றார்.

அதற்கு அந்த ராஜகுமாரன், "தந்தையே! இது என்னுடைய குருதேவரின் உத்தரவு! இங்கே நான் ஒரு மாணவன். இங்கே அரசனும் ஒன்றுதான்! ஆண்டியும் ஒன்றுதான்! குருதேவர் சொல்வதை மறுக்காமல் செய்வதுதான் எங்கள் கடமை!" என்றான்.

அந்தச் சமயத்தில் முனிவர் அங்கே வந்து இளவரசனை தட்டிக் கொடுத்து, "அரசே! உங்கள் பிள்ளை என்னுடைய கடைசிப் பரீட்சையிலும் சித்திபெற்று விட்டான். பணிவுதான் மாணவர்களின் உயர்ந்த குணம். குருநாதர் சொல்வது மனதுக்குப் பிடிக்காவிட்டாலும் கூட மறுக்காமல் செய்ய வேண்டும். அப்படிச் செய்தால் எதைச் செய்யலாம், எதைச்.செய்யக்கூடாது என்ற விவேகம் அவர்களுக்கு வந்துவிடும்! இந்தக் குணம் வந்து விட்டால்... அவர்கள் எத்தனை கடினமான வேலையாக இருந் தாலும் கூட சுலபமாக செய்து முடிப்பார்கள்.

துன்பத்திலும் துவண்டுபோக மாட்டார்கள். இந்தப் பணிவும் விவேகமும் அவர்களிடத்தில் மன உறுதியை ஏற்படுத்தும். அந்த உறுதி உங்கள் மகனுக்கு வந்துவிட்டது. இனி நீங்கள் அவனை அழைத்துச் செல்லலாம். அவன் நிச்சயமாக பேரும் புகழும் அடைவான்" என்றார்.

ராஜா முனிவரிடம், "குருதேவா... புரிந்து கொண்டேன். என்னை மன்னிக்க வேண்டும்" என்றார். பின் இளவரசனை அழைத்துக் கொண்டு நாட்டுக்குத் திரும்பினார்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கிளி/முருகானந்தா கல்லூரியின் பவளவிழா



(கிளிநொச்சி)

கிளி/முருகானந்தா கல்லூரியின் பவளவிழா இன்று திங்கட்கிழமை பிற்பகல் 4.30 மணிக்கு திறந்த வெளி அரங்கில் பழைய மாணவரும் பொறியியலாளருமான ந.கிருஸ்ணரூபன் தலைமையில் நடைபெறும்.

இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக வடமாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன் கலந்துகொண்டு சிறப்பிக்கவுள்ளார்.

அத்துடன் பவளவிழா ஞாபகார்த்த மண்டப பெயர்ப்பலகை திரைநீக்கம், நினைவுக்கல் திரைநீக்கம், நூல் வெளியீடு, கலைநிகழ்வுகள் என்பன இடம்பெறும். (2)




## மாணவர்களுக்கான பயிற்சிப் பட்டறை

(பூநகரி)

சின்மயாமிஷன் நிறுவனத்தின் ஏற்பாட்டில் கண்டாவளைக் கல்விக் கோட்டத்தைச் சேர்ந்த பாடசாலை மாணவர்கள் 100 பேருக்கு வாழ்க்கை என்னும் விளையாட்டு விடயம் பற்றிய ஒருநாள் பயிற்சிப்பட்டறை நடைபெறவுள்ளது.

இப்பயிற்சிப்பட்டறை கிளிநொச்சி இல I தர்மபுரம் அ.த.க பாடசாலை மண்டபத்தில் இன்று திங்கட்கிழமை காலை 9 மணிக்கு ஆரம்பமாக வுள்ளது.

சின்மயாமிஷன் வதிவிட ஆச்சாரியார் சுவாமி சியெந்திர ஜீ இப்பயிற்சிப்பட்டறையை நடத்தவுள்ளதாக பிரதேச சின்மய நிறுவன இணைப்பாளர் தெரிவித்துள்ளார். (2-84)

# முல்லை. கடற்பரப்பினுள் சட்டவிரோத கடற்றொழிலுக்கு எதிராக இவ்வருடம் 56 வழக்குகள் நீதிமன்றில் தாக்கல்

### மாவட்ட கடற்றொழில் நீரியல் வளத்துறை உதவி பணிப்பாளர் தெரிவிப்பு



(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்ட கடற்பரப்புக்கள் மற்றும் கடல் நீரேரிகளில் சட்டவிரோதமான முறையில் கடற்றொழில் செய்வோர்களின் உபகரணங்கள் அரசுடைமையாக்கப்படுமென முல்லைத்தீவு மாவட்ட கடற்றொழில்நீரியல் வளத்துறை உதவிப்பணிப்பாளர் ஜெ.சுதாகரன் தெரிவித்துள்ளார்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் 21 கடற்கிராமங்கள் உள்ளன. அப்பகுதிகளில் 6 ஆயிரத்திற்கு மேற்பட்ட குடும்பங்கள் கடற் றொழிலை நம்பி வாழ்ந்துவருகின்றன.

யுத்தத்திற்கு முன்னர் முல்லைத்தீவு மாவட்ட கடற்பரப்புகள் மற்றும் கடல் நீரேரிகளில் சட்டவிரோதமான முறையில் கடற்றொழில் நடவடிக்கை எதுவும் இடம்பெறவில்லை.

மீள்குடியேறிய பின்னர் முல்லைத்தீவு மாவட்டத்தின் பல்வேறு இடங்களிலும் வெளிமாவட்ட மீனவர்களால் தடை செய்யப்பட்ட கடற்றொழில் உபகரணங்களை பயன்படுத்தி தொழில் செய்து வந்தோரினால் முல்லைத்தீவு மாவட்டத்தில் மீன்பிடி தொழில் செய்வோர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

வெளிமாவட்ட மீனவர்களில் 99 வீதமானோர் முல்லைத்தீவு கடற்பரப்பில் சட்டவிரோத மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபட்டு வந்தனர்.

முல்லைக் கடற்பரப்பில் சட்டவிரோத மீன்பிடி தொழிலை மேற்கொள்ள வேண்டாமென பல தடவைகள் கடற்றொழில் திணைக்களம் அறிவுறுத்தியும் அதனை அவர்கள் அலட்சியப்படுத்தியதையடுத்து அத் தொழிலை செய்து வந்த மீனவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுப்பதன் மூலமே இதனை இல்லாமல் செய்யமுடியுமென தீர்மானித்து நடவடிக்கையில் இறங்கினர்.

இதன் விளைவாக சட்டவிரோத கடற்றொழில் புரிவோரை பிடித்து நீதிமன்றத்தின் முன்னிறுத்தி அவர்களுடைய இயந்திரங்கள், படகுகள், உபகரணங்கள் என்பன பறிமுதல் செய்யப்பட்டதன் விளைவால் முல்லைத்தீவு கடற்பரப்பில் சட்டவிரோத கடற் றொழிலை ஓரளவிற்கு குறைத்துக்கொள்ள முடிந்தது.

2013 ஆம் ஆண்டில் இது தொடர்பாக 73 வழக்குகள் நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்டு அதில் 108 பேர் கைது செய்யப்பட்டு அவர்களிடமிருந்து குற்றப்பணமாக 4 இலட்சத்து 27 ஆயிரத்து 500 ரூபாவும் அவர்களிடமிருந்த 10 படகுகள், 10 எஞ்சின்கள் மற்றும் சட்டவிரோத வலைகள் என்பன நீதிமன்றினால் அரசுடைமையாக்கப்பட்டன.

இவ் வருடம் இது தொடர்பாக 56 வழக்குகள் நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்டு 86 பேர் கைது செய்யப்பட்டு அவர்களிடமிருந்து குற்றப்பணமாக 2 இலட்சத்து 67 ஆயிரத்து 500 ரூபாவும் 13 படகுகள், 13 எஞ்சின்கள், சட்டவிரோத வலைத் தொகுதிகள் என்பன இன்றைவரை அரசுடைமையாக்கப்பட்டுள்ளன.

முல்லைத்தீவு மாவட்ட மீனவ குடும்பங்களின் நலன் கருதி இச் செயற்பாடு தொடர்ந்து நடைமுறைக்கு கொண்டுவருவதன் மூலமே சிறந்த தீர்வு ஒன்றை காணமுடியுமென தெரிவிக்கப்படுகின்றது. (2-267)

# முல்லை. மாவட்ட அரச செயலகங்களின் பெயர் பலகைகளில் சிங்கள மொழிக்கு முன்னுரிமை

### நடவடிக்கை எடுக்குமாறு முல்லை. அரச அதிபரை மக்கள் கோருகின்றனர்






(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள அரச செயலகங்களில் பொருத்தப்பட்டுள்ள பெயர் பலகைகளில் சிங்கள மொழி முதன்மைப்படுத்தப்பட்டும் தமிழ்மொழி இரண்டாவதாகவும் பொறிக்கப்பட்டுள்ளதாக முல்லைத்தீவு மாவட்ட சமூக ஆர்வலர்கள் மற்றும் பொதுமக்கள் ஆதங்கம் தெரிவித்துள்ளனர்.

அழிந்துவரும் தமிழ் மொழியைப் பாதுகாப்பது ஒவ்வொரு தமிழ் மகனின் கடமையாகும்.

இந் நிலையில் குறிப்பாக முல்லைத்தீவு மாவட்ட செயலகம் கரைதுறைப்பற்று, புதுக்குடியிருப்பு துணுக்காய், மாந்தை கிழக்கு, ஒட்டுசுட்டான் ஆகிய பிரதேச செயலகங்கள் மற்றும் பல அரச திணைக்களங்களில் சிங்கள மொழியை முதன்மைப்படுத்தி பெயர் பலகைகள் பொருத்தப்பட்டுள்ளன.

இலங்கை அரசியல் யாப்பில் வடக்கு கிழக்கில் உள்ள தமிழ் பிரதேசங்களில் சட்டபூர்வமான முதன்மை நிர்வாக மொழி தமிழ் மொழி என்றும் இரண்டாவது மொழி சிங்கள மொழி என்றும் மூன்றாவது மொழியான இணைமொழி ஆங்கில மொழி என்றும் கூறப்பட்டுள்ளது.

இதன் பிரகாரம் வடக்குகிழக்கு தவிர்ந்த ஏனைய பிரதேசங்களில் சிங்கள மொழி முதல் மொழியாகவும் இரண்டாவது மொழி தமிழ் மொழியாகவும் மூன்றாவது மொழி ஆங்கில மொழி என்றும் கூறப்பட்டுள்ளது.

வடக்குகிழக்கு தவிர்ந்த ஏனைய பிரதேசங்களில் மொழியுரிமை சிறந்தமுறையில் பேணப்படுகிறது.

வடக்கு கிழக்கில் மட்டும் மொழியுரிமை ஏன் பேணப்படவில்லையென சமூக ஆர்வலர்களும் பொதுமக்களும் கேள்வி எழுப்புகின்றனர். (2-267)

# மாற்று பயிர்ச்செய்கையினை மக்கள் எதிர்காலத்தில் மேற்கொள்ள வேண்டும்

### வடமாகாணசபை உறுப்பினர் தவநாதன் தெரிவிப்பு



பாரம்பரிய விவசாய நாடுகள் பல இன்று நவீன பயிர்ச்செய்கை முறைகளுக்கு மாறிவிட்டன. ஆனால் கல்வி அறிவால் மேம்பட்டுவரும் எமது மக்கள் இன்றும் விவசாயத்தில் பாரம்பரிய முறைகளையே கையாள முனைகின்றனர் என வடக்கு மாகாண சபை உறுப்பினர் வை.தவநாதன் தெரிவித்துள்ளார்.

சின்னப்பல்லவராயன் கட்டில் விவசாயிகளுக்கு விவசாய உபகரணங்களை அண்மையில் வழங்கிவைத்து உரையாற்றும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அங்கு அவர் மேலும் உரையாற்றுகையில்,

எமது மக்கள் இன்று பாரம்பரிய விவசாய முறைகளையேகையாண்டு வருகின்றனர். அதற்காக அவர்கள் மிக அதிகளவான நீரைப் பயன்படுத்த வேண்டிய நிலையிலும் உள்ளனர்.

ஆனால் எமது நாட்டைவிட கல்வி அறிவில் பின்தங்கிய நாடுகள் மற்றும் பாரம்பரிய விவசாய நாடுகள் எல்லாம் இன்று நவீன விவசாய முறைகளைப்பின்பற்ற ஆரம்பித்து விட்டன.

அதனால் அவர்கள் மிக அதிகளவான உற்பத்திகளை இலகுவாக மேற் கொண்டு வருகின்றனர். ஆனால் கல்வி அறிவும் மற்றும் ஏனைய விடயங்கள் சார்ந்த அனுபவ அறிவும் அதிகமாகக் கொண்டுள்ள எமது மக்கள் இன்றும் பாரம்பரிய விவசாய முறைகளிலேயே அதிக நாட்டம் கொண்டுள்ளமை வருந்தத்தக்கது.

இதனால் வறட்சி ஏற்படும் காலத்தில் அவர்களின் விவசாய நடவடிக்கைகள் முற்றாக முடங்கிப் போகின்றன. எனவே எமது மக்களும் நவீன விவசாய முறைகளை பின்பற்ற வேண்டும்.

ஆனால் அந்த விழிப்புணர்வை எமது கல்வியியலாளர்களும் அரசியல்வாதிகளும் ஏனைய சமூகத்தலைவர்களும் மக்களிடையே ஏற்படுத்த தவறிவிட்டனர்.

எனவே எதிர்காலத்தில் மாற்று பயிர்ச்செய்கை முறைகளை மக்கள் கையாள வேண்டும் என அவர் குறிப்பிட்டார்.

ஏற்கனவே இவ்விவசாயிகளுக்கு விவசாய உள்ளீடுகள் வழங்கப்பட்டுள்ள நிலையில் கடந்த வெள்ளிக்கிழமை விவசாய உபகரணத் தொகுதிகள் வழங்கப்பட்டன.

இதில் தெரிவு செய்யப்பட்ட 48 விவசாயிகளுக்கு முட்கம்பி. மண்வெட்டிகள் மற்றும் பசளைகள் என்பன வழங்கப்பட்டன.

இந்நிகழ்வில் சின்னப்பல்லவராயன் கட்டு கமக்கார அமைப்பின் தலைவர் கார்த்திகேசு. உலக உணவு விவசாய ஸ்தாபனத்தின் விவசாய செயற்றிட்டத்தின் கிளிநொச்சி மாவட்ட இணைப்பாளர் ஜெயக்குமார் மற்றும் விவசாயிகள் எனப் பலர் கலந்து கொண்டனர். (2)

# வலம்புரி செய்தியை அடுத்து மாமூலை மக்களுக்கு மின்சாரம்

(முல்லைத்தீவு)

வலம்புரி செய்தியை அடுத்து முல்லைத்தீவு மாவட்டத்தின் கரைதுறைப்பற்று செயலர் பிரிவின் மாமூலை கிராமசேவையாளர் பிரிவில் உள்ள 360 இற்கும் மேற்பட்ட குடும்பங்களுக்கு மின்சாரம் வழங்கப்பட்டுள்ளது.

குறித்த கிராம சேவையாளர் பிரிவில் 2010 ஆம் ஆண்டு மீள்குடியேற்றம் செய்யப்பட்ட 360 இற்கு மேற்பட்ட குடும்பங்கள் வாழ்ந்து வந்த நிலையில் கடந்த 3 1/2 வருடங்களுக்கு மேலாக மின்சாரம் இன்றி பல்வேறுபட்ட அசௌகரியங்களை சந்தித்து வந்த இம்மக்கள் தமது இக்கிராமத்திற்கு மின்சாரத்தை வழங்குமாறு கோரி வலம்புரி பத்திரிகையில் 14.09.2013 அன்றும் 01.01.2014 அன்றுமாக இரு தடவைகள் வலியுறுத்தி இருந்தனர்.

இக் கிராமத்திற்குரிய அனைத்து மின்சார வேலைகளும் பூர்த்திசெய்யப்பட்டு அமைச்சரின் வருகைக்காக காத்திருந்ததன் பயனாக மீளவும் 03.09.2014 அன்று அம்மக்கள் அமைச்சருக்கு விடுத்த கோரிக்கையை அடுத்து கைத்தொழில் வணிக அமைச்சர் ரிசாத் பதியூதீன் நேரடியாக கிராமத்திற்கு சென்று மின்சார இணைப்பை ஆரம்பித்து வைத்தார்.

இம் மின்சார இணைப்பின் மூலம் கிராம மக்கள், பாடசாலை மாணவர்கள், தொழில் செய்வோர், விவசாயிகள் என பலர் நன்மை அடைந்துள்ளனர். (2-267)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழரசுக்கட்சியின் பேராளர் மாநாடு



(குருமன்காடு)

இலங்கை தமிழரசுக் கட்சியின் பேராளர் மாநாட்டின் மூன்றாம் நாள் அமர்வுகள் நேற்று ஞாயிற்றுக்கிழமை வவுனியா நகரசபை கலாசார மண்டபத்தில் நடைபெற்றது.

வவுனியா நகர மத்தியில் அமைந்துள்ள தந்தை செல்வாவின் உருவச் சிலைக்கு மாலை அணிவிக்கப்பட்டு தமிழரசுக் கட்சியின் புதிய தலைவர் மாவை சேனாதிராஜா உள்ளிட்ட பேராளர்கள் வவுனியா நகர சபை மண்டபத்திற்கு ஊர்வலமாக அழைத்துச் செல்லப்பட்டனர்.

பின்னர் கட்சி கொடியேற்றப்பட்டு கட்சி கீதம் பாடப்பட்டு மங்கல விளக்கேற்றி வைக்கப்பட்டது.

தொடர்ந்து வரவேற்புரையையடுத்து புதிய நிர்வாக உறுப்பினர்கள் அறிமுகமும் புதிய தலைவர் மாவை சேனாதிராஜாவின் சிறப்புரையும் இடம்பெற்றன. (இ-250)

## கமக்கார அமைப்பின் முதலாவது தெரிவு

(தனங்கிளப்பு)

யாழ்.மறவன்புலோ கமக்கார அமைப்பின் 2014 ஆம் ஆண்டிற்கான முதலாவது தெரிவு அண்மையில் மறவன்புலோ சகலகலா வித்தியாலயத்தில் கைதடி கமநல சேவை திணைக்களத்தின் பெரும்போக உத்தியோகத்தர் ரி.முரளிதரன் தலைமையில் இடம்பெற்றுள்ளது.

இதன் தலைவராக தி.திருஞானசம்பந்தரும் செயலாளராக ரி.கந்தையாவும் பொருளாளராக ந.சிவகுமாரும் தெரிவு செய்யப்பட்டனர். (இ

## கருத்துரை

(யாழ்ப்பாணம்)

சமூக விஞ்ஞான படிப்பு வட்டத்தின் ஏற்பாட்டில் பாலஸ்தீன விடுதலையும் காஸாவும் எனும் தலைப்பில் கருத்துரை இன்று திங்கட்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு கொக்குவில் சந்தி இல.62 இல் அமைந்துள்ள தேசிய கலை இலக்கிய பேரவையில் இடம்பெறவுள்ளது. (இ

## தீர்த்தோற்சவம்

யாழ்.கொக்குவில் அருள்மிகு மஞ்சவனப்பதி முருகன் ஆலய மஹோற்சவம் கடந்த மாதம் 22 ஆம் திகதி வெள்ளிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி இடம்பெற்று வருகின்றது. இன்று காலை 7.30 மணிக்கு வசந்த மண்டபப் பூசையை தொடர்ந்து காலை 9 மணிக்கு தீர்த்தோற்சவம் இடம்பெறவுள்ளது. (இ

## பொறியியல் பட்டக்கற்கை நெறிக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன

(யாழ்ப்பாணம்)

இலங்கை திறந்த பல்கலைக் கழகத்தினால் பொறியியல் பட்டக் கற்கை நெறிக்கான (Bachelor of Technology) விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

க.பொ.த. உயர்தரத்தில் கணிதப் பிரிவில் 3 பாடங்களில் சித்தி (க.பொ.த.உயர்தர பரீட்சை பெறுபேறுகள் கிடைக்கப்பெறாத மாணவர்களும் விண்ணப்பிக்க முடியும்) அல்லது இலங்கை திறந்த பல்கலைக்கழக தொழில் நுட்பவியலின் அத்திவாரமட்ட பாடங்களில் சித்தி அல்லது வேறு ஏதாவது சமனான அல்லது NDT, NDES,HNDE போன்ற உயர் தகைமைகளைக் கொண்டிருப்பவர்கள் இக் கற்கை நெறிக்கு விண்ணப்பிக்க முடியும்.

இதேவேளை மென்பொருள் எந்திரவியல் இளமாணிப் பட்டக் கற்கை நெறிக்கான (Bachelor of Software Engineering) விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. க.பொ.த. உயர்தரத்தில் 3 பாடங்களில் சித்தி, நுழைவுத் தேர்விலிலும் தேர்ச்சி அடைதல் வேண்டும்.

அத்துடன் ஏதாவது மூன்றாம் தர நிலை உயர் தகைமைகளைக் கொண்டிருப்பவர்கள் இக் கற்கை நெறிக்கு விண்ணப்பிக்க முடியும்.

இவ் விண்ணப்ப படிவங்களை எதிர்வரும் 20 ஆம் திகதி வரை பிறவுண் வீதி, கொக்குவிலில் அமைந்துள்ள யாழ்.பிராந்திய நிலையத்தில் பெற்றுக் கொள்ளலாமென யாழ். பிராந்திய நிலைய உதவிப்பணிப்பாளர் தெரிவித்துள்ளார். (இ

## விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன

இலங்கை திறந்த பல்கலைக் கழகத்தினால் மனிதவள முகாமைத்துவம் (Human Resources Management) மற்றும் பேச்சு மொழி ஆங்கிலத்திற்கான (Spoken English) குறுகிய கால கற்கை நெறிக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

க.பொ.த.சாதாரண தரத்தில் சித்தி பெற்ற அனைவரும் இக்கற்கை நெறிக்கு விண்ணப்பிக்க முடியும்.

இக் கற்கை நெறியானது மூன்று மாத காலங்களைக் கொண்டுள்ள நிலையில் இக் கற்கைநெறிக்குரிய அனைத்து வகுப்புக்களும் பிறவுண் வீதி, கொக்குவிலில் அமைந்துள்ள யாழ்.பிராந்திய நிலையத்திலும் 155 ஆம் மைல்கல், கண்டி வீதி, கிளிநொச்சியில் அமைந்துள்ள கிளிநொச்சி கற்கை நிலையத்திலும் ஆதிபராசக்தி அறிவியல் கல்லூரி 4 ஆம் வட்டாரம் இரணைப்பாலை வீதி, புதுக்குடியிருப்பில் அமைந்துள்ள முல்லைத்தீவு கற்கை நிலையத்திலும் இடம்பெறும். விண்ணப்ப படிவங்களை எதிர்வரும் 15 ஆம் திகதி வரை யாழ்.பிராந்திய நிலையத்திலும் கிளிநொச்சி கற்கை நிலையத்திலும் பெற்றுக் கொள்ளலாமென யாழ்.பிராந்திய நிலைய உதவிப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார். (இ

# ஸ்பெயின் கோரிக்கையை சாதகமாக பரிசீலிப்போம்

## இலங்கை அரசு

ஐ.நா.பாதுகாப்புச் சபையின் தற்காலிக உறுப்புரிமைக்குப் போட்டியிடும் ஸ்பெயினை ஆதரிக்க வேண்டும் என்ற கோரிக்கையை பரிசீலிப்பதாக ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கும் ஸ்பெயின் வெளிவிவகார அமைச்சர் ஜோஸ் மானுவல் கார்சியா மார்க்லோ மார்ப்பிலிக்கும் இடையில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற சந்திப்பின் போது ஜனாதிபதி இவ்வாறு தெரிவித்துள்ளார்.

ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபையின் 5 நிரந்தர உறுப்பு நாடுகள் இருப்பதுடன் நிரந்தரமற்ற 10 உறுப்பு நாடுகள் இரண்டு வருடங்களுக்கு ஒரு முறை தெரிவு செய்யப்படுகின்றன.

பாதுகாப்புச் சபையில் உறுப்பு நாடாக தெரிவான இலங்கை தம்மை ஆதரிக்க வேண்டும் என ஸ்பெயின் கோரிக்கை விடுத்திருந்தது.

இந்த நிலையில் நேற்று முன்தினம் இலங்கைக்கு வந்த ஸ்பெயின் வெளிவிவகார அமைச்சர் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை அலரி மாளிகையில் சந்தித்து பேச்சுவார்த்தைகளை நடத்தினார்.

இரண்டு நாடுகளுக்கும் இடையிலான பொருளாதாரம் மற்றும் இராஜதந்திர உறவுகளை வலுப்படுத்துவது குறித்து விவாதிக்கப்பட்டது.

இதன்போது கருத்து வெளியிட்ட ஸ்பெயின் அமைச்சர், ஸ்பெயின் பல ஆண்டுகள் பயங்கரவாத பிரச்சினைகளால் பாதிக்கப்பட்டிருந்ததாகவும் பயங்கரவாதத்தின் தாக்கத்தை ஸ்பெயின் நன்கு புரிந்துள்ளது எனவும் ஜனாதிபதியிடம் கூறியுள்ளார்.

அதேவேளை போருக்கு பின்னர் வடக்கு, கிழக்கில் உடனடியாக மேற்கொள்ளப்பட்ட மிதிவெடி அகற்றல், மீள்குடியேற்றம், புனர்வாழ்வு மற்றும் புனரமைப்பு உட்பட அரசாங்கம் மேற்கொள்ளும் பல்வேறு நடவடிக்கைகளை ஜனாதிபதி மஹிந்த ஸ்பெயின் அமைச்சரிடம் விளக்கியுள்ளார். (இ

# பிரிவுத்துயர் பகிர்வு



### திருமதி கபிரியேல் மரியம்மா

தோலகட்டி வயாவிளானைப் பிறப்பிடமாகவும் கோப்பாய் தெற்கை வசிப்பிடமாகவும் கொண்ட கபிரியேல் மரியம்மா கடந்த 4 ஆம் திகதி வியாழக்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் திருப்பலி இன்று முற்பகல் 11 மணிக்கு கோப்பாய் தெற்கு புனித மரியன்னை ஆலயத்தில் ஒப்புக்கொடுக்கப்பட்டு பின்னர் பூதவுடல் புனித மரியன்னை சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

### திருமதி இராசரத்தினம் இரத்தினாவதி



அரியாலையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட இராசரத்தினம் இரத்தினாவதி நேற்று முன்தினம் சனிக்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை செவ்வாய்க்கிழமை பிற்பகல் 4 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பின்னர் பூதவுடல் அரியாலை சித்துப்பாத்தி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.



### திருமதி அந்தோனிப்பிள்ளை பெர்ணதேத்தம்மா

சில்லாலையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட அந்தோனிப்பிள்ளை பெர்ணதேத்தம்மா கடந்த 5 ஆம் திகதி வெள்ளிக்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் திருப்பலி இன்று பிற்பகல் 3 மணிக்கு புனித கதிரை அன்னை ஆலயத்தில் ஒப்புக்கொடுக்கப்பட்டு பின்னர் பூதவுடல் நல்லடக்கம் செய்யப்படும்.

### திருமதி வேலுப்பிள்ளை கனகமணி



கச்சேரியடியைப் பிறப்பிடமாகவும் இல. 40/1, நொத்தாரிஸ் லேன் அரியாலை மேற்கைப் வசிப்பிடமாகவும் கொண்ட வேலுப்பிள்ளை கனகமணி கடந்த 5 ஆம் திகதி வெள்ளிக்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை நேற்று ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்றது.



### இராசரத்தினம் கணேசலிங்கம்

கோண்டாவிலைப் பிறப்பிடமாகவும் கரந்தன் நீர்வேலியை வசிப்பிடமாகவும் கொண்ட இராசரத்தினம் கணேசலிங்கம் நேற்று முன்தினம் சனிக்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்றது.

### திருமதி பாலசுப்பிரமணியம் யோகம்மா



கரவெட்டி கல்லுவத்தைப் பிறப்பிடமாகவும் கனடா Brampton ஐ வசிப்பிடமாகவும் கொண்ட பாலசுப்பிரமணியம் யோகம்மா கடந்த 2 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் பூதவுடல் இன்று திங்கட்கிழமை St. John's Dixie Cemetery and Crematorium,737 Dundas Street East, Mississauga, ON L4Y 2B5, Canada என்னும் முகவரியில் தகனம் செய்யப்படும்.



### தில்லையம்பலம் பாலசிங்கம்

புங்குடுதீவு 5 ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் கனடா Toronto ஐ தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட தில்லையம்பலம் பாலசிங்கம் (இளைப்பாறிய கிராம சேவையாளர் – நயினாதீவு, புங்குடுதீவு) கடந்த 5 ஆம் திகதி வெள்ளிக்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு Ogden Funeral Homes,4164 Sheppard Avenue East, Scarborough, ON, Canada என்னும் முகவரியில் நடைபெற்று பின்னர் பூதவுடல் தகனம் செய்யப்படும்.

### திருமதி செல்லையா கனகம்மா



யார்க்கரு கரவெட்டி கிழக்கைப் பிறப்பிடமாகவும் அந்திரான் நெல்லியடியை வசிப்பிடமாகவும் கொண்ட செல்லையா கனகம்மா நேற்று முன்தினம் சனிக்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று ஞாயிற்றுக்கிழமை அவரது கரவெடி கிழக்கு யார்க்கரு இல்லத்தில் நடைபெற்றது.



### திருமதி சங்கரப்பிள்ளை கண்மணி

அனலை தீவைப் பிறப்பிடமாகவும் ஆனைப்பந்தியை வசிப்பிடமாகவும் கொண்ட சங்கரப்பிள்ளை கண்மணி நேற்று முன்தினம் சனிக்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று முற்பகல் 10 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பின்னர் பூதவுடல் கோம்பயன்மணல் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொடரும் தாக்குதல்



ஈராக்கிலுள்ள கிர்குக் நகரத்தை ஐ.எஸ்.ஐ.எஸ். தீவிரவாதிகள் கைப்பற்றியுள்ளனர். அப்பகுதியை மீட்கும் நடவடிக்கைகளில் அந் நாட்டு அரசு ஈடுபட்டுள்ளது.

அதன்படி நேற்றுமுன்தினம் கிர்குக் நகரத்தில் உள்ள வைத்திய சாலை ஒன்றின் மீது ஈராக் விமா னப்படை வான் வழி தாக்குதல் நடத்தியது.

இதில் 7 பேர் கொல்லப்பட்ட துடன், குழந்தைகள் உட்பட 22 பேர் காயமடைந்ததாக நேரில் பார்த்த ஒருவர் தெரிவித்தார்.

கிர்குக் நகரில் உள்ள ஹவிஜா பகுதியில் பல இடங்களில் வான் வழி தாக்குதல் நடத்தியபோது வைத்தியசாலையும் தாக்கப்பட்ட தாகவும் அவர் மேலும் கூறியுள் ளார். இத்தாக்குதல் குறித்து அரசு தரப்பு எவ்வித விளக்கத்தையும் இதுவரை தரவில்லை.

கடந்த ஜூன் மாதம் தங்கள் தாக்குதலை தொடங்கிய ஐ.எஸ். ஐ.எஸ். தீவிரவாதிகள் ஈராக்கின் மத்திய மற்றும் வடக்கு பகுதிகளை கைப்பற்றி "இஸ்லாமிய நாடு" என்று தனி நாடாக அறிவித்து செயற்பட்டு வருவது குறிப்பிடத் தக்கது. (இ)




## பாகிஸ்தானில் பூமி அதிர்ந்தது

பாகிஸ்தானில் சிந்து மாகாண த்தில் உள்ள நவாப்ஷா பகுதியில் நேற்றுமுன்தினம் கடும் நிலநடுக் கம் ஏற்பட்டது. காலை 6 மணி முதல் 10 மணி வரை அடிக்கடி இந்த நில நடுக்கம் உருவானது.

இதனால் வீடுகள் மற்றும் கட்ட டங்கள் குலுங்கியதால் மக்கள் பீதி அடைந்தனர். வீடுகளை விட்டு வெளியேறி ஓட்டம் பிடித்தனர். இந்த நில நடுக்கத்தால் வீடுகள் இடிந்தன. பல சுவர்களில் கீறல்கள் மற்றும் வெடிப்புகள் ஏற்பட்டன.

இடிபாடுகளில் சிக்கி 10 பேர் காயம் அடைந்தனர். அவர்கள் நபாப் ஷாலில் உள்ள மருத்துவ கல்லூரி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர். (இ)

## பாகிஸ்தானில் வெள்ளப்பெருக்கு

### 110 பேர் பலி, 148 பேர் படுகாயம்; 650 வீடுகள் சேதம்!

பாகிஸ்தானில் கடந்த சில தின ங்களாக தொடர்ந்து பருவமழை பெய்து வருகிறது. பஞ்சாப் மாகா ணம் மற்றும் பாகிஸ்தான் ஆக்கி ரமிப்பு காஷ்மீர் பகுதியில் கன மழை பெய்து வருவதால் பல கிரா மங்கள் வெள்ளத்தில் மூழ்கியுள் ளன.

பல ஆறுகளில் வெள்ளப்பெரு க்கு ஏற்பட்டுள்ளது. மழைவெள்ள த்தில் சிக்கி கடந்த வெள்ளிக்கிழமை வரை 55 பேர் உயிரிழந்ததாக தெரிவிக்கப்பட்டது.

மழை தொடர்ந்து நீடித்து வருவ தால் பலி எண்ணிக்கை உயர் ந்துள்ளது.

இதுகுறித்து தேசிய பேரிடர் மேலாண்மை ஆணைய தலைவர் முகம்மது செய்யது அலீம் கூறு கையில்,

மழை வெள்ளத்தில் சிக்கி இதுவரை 110 பேர் உயிரிழந்துள் ளனர். 148 பேர் படுகாயம் அடை ந்துள்ளனர். 650 இற்கும் மேற்பட்ட வீடுகள் முழுமையாக இடிந்து விழு ந்துள்ளன. மழை வெள்ளத்துக்கு பஞ்சாப், பாகிஸ்தான் ஆக்கிரமிப்பு காஷ்மீர் மற்றும் ஜில்ஜிட் பலு சிஸ்தான் பகுதிகள் அதிக அளவில் பாதிக்கப்பட்டுள்ளன.

செனாப் மற்றும் சீலம் நதிகளில் வெள்ளம் கரைபுரண்டு ஓடுகிறது



என்று தெரிவித்தார். இதற்கிடையே மழை வெள்ள சேதம் மற்றும் நிவாரணப்பணிகள் குறித்து பாகிஸ் தான் பிரதமர் நவாஸ ஷெரீப் நேற்று முன்தினம் அதிகாரிகளுடன அவசர ஆலோசனை நடத்தினார். (இ)

## முஸ்லிம் தீவிரவாத குழுக்களுக்கும் பழங்குடியினருக்குமிடையே மோதல்

### ஏமனில் 40 பேர் பலி



ஏமன் நாட்டில் ஷியா முஸ்லிம் தீவிரவாதிகள், பழங்குடியின முஸ் லிம் இனத்தவர்களிடையே கடந்த 2 நாட்களில் நடைபெற்ற மோத லில், 40 பேர் பலியாகினர்.

இதுகுறித்து ஏமன் அரச அதி காரிகள் கூறியதாவது, அல்-ஜாஃப் மாகாணத்தில் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை இரு தரப்பினர் இடையே நடைபெற்ற மோதலில், ஹாவ்தி ஷியா முஸ்லிம் தீவிர வாதிகள் 18 பேரும், பழங்குடியி னர் 22 பேரும் உயிரிழந்தனர்.

இதில், பழங்குடியினருக்கு ஏமன் இராணுவமும், முஸ்லிம் சகோத ரத்துவ கட்சியான இஸ்லா கட்சியும் ஆதரவு அளித்தன என்று ஏமன் அதிகாரிகள் தெரிவித்தனர். (இ)

## எபோலாவினைத்தடுக்க அமெரிக்காவில் பயிற்சி

'எபோலா' வைரஸ் என்ற தொற்று நோய் சர்வதேச நாடுகளை அதிர்ச் சியில் ஆழ்த்தியுள்ளது. இந்த நோய் மேற்கு ஆபிரிக்க நாடுகளான நைஜீ ரியா, லைபீரியா, கினியா, சியாரா லியோன் உள்ளிட்ட நாடுகளில் அதிகமாக பரவுகிறது. இங்கு இது வரை இந்த நோய்க்கு 2 ஆயிரத்து 200 பேர் பலியாகியுள்ளனர்.

எனவே, இந்த நோய் பரவாமல் தடுக்க அந்த நாடுகளில் இருந்து விமா னம் மூலம் வரும் பயணிகள் தீவிர மாக பரிசோதிக்கப்படுகின்றனர்.

இதற்காக சென்னை விமான நிலையத்தில் சைதாபேட்டை, காஞ்சிபுரம், திருவள்ளூர் அரச வைத்தியசாலைகளில் பணிபுரியும் 6 வைத்தியர்கள், 7 சுகாதார பரி சோதகர்கள் பணி நியமனம் செய் யப்பட்டுள்ளனர். இவர்கள் கடந்த 3 வாரமாக விமான நிலையத்தில் பணிபுரிந்து வருகின்றனர்.

'எபோலா' நோய் பாதித்த நைஜீ ரியா, லைபீரியா, கினியா, சியாரா லியோன் நாடுகளில் இருந்து வரு பவர்களை பரிசோதித்து வருகின் றனர்.

நைஜீரியாவில் எபோலா நோயாளி களுக்கு சிகிச்சை அளித்த இரண்டு வைத்தியர்கள் உயிரிழந்தனர். எனவே, எபோலா பரிசோதனை நடத்தும் வைத்தியர்கள் மற்றும் சுகாதார பரிசோதகர்களுக்கு பாது காப்பு முகமூடிகள், கையுறைகள், ஷூக்கள் போன்ற பாதுகாப்பு கவச உடை வழங்கப்பட்டுள்ளது.

மேலும் கடந்த மாதம் (ஓகஸ்ட்) முதல் வாரத்தில் இருந்து நைஜீ ரியா, லைபீரியா உள்ளிட்ட 4 நாடு களில் இருந்து சென்னை, திருச்சி, கோவை, மதுரை விமான நிலை யங்கள் வழியாக 300 பேர் வந்து ள்ளனர். அவர்கள் தீவிர கண்கா ணிப்பில் உள்ளனர்.

இதற்கிடையே தொற்று நோய் பரவாமல் தடுக்க இந்திய வைத் தியர்களுக்கு அமெரிக்காவில் சிற ப்பு பயிற்சி அளிக்கப்படுகிறது. இத ற்கான ஒப்பந்தம் கடந்த 2010 ஆம் ஆண்டு ஏற்பட்டது.

அமெரிக்காவின் நோய் தடுப்பு மற்றும் பாதுகாப்பு மையம் இந்த பயிற்சியை அளிக்கிறது. இந்த பயிற்சி 2 ஆண்டுகள் நடத்தப்படு கிறது. அதில் இந்தியாவை சேர்ந்த 7 வைத்தியர்கள் பயிற்சி முடிந்து அடுத்த மாதம் நாடு திரும்புகின் றனர்.

அவர்களில் சென்னையை சேர் ந்த வைத்தியர் மோகன் குமார் என்பவரும் உள்ளார். பயிற்சி பெற்றவர்களில் இவர் ஒருவர்தான் தென்னிந்தியாவை சேர்ந்தவர்.

நோயை கண்டறிதல், அவற்றை பரவாமல் தடுத்தல் போன்ற பயிற்சி அளிக்கப்பட்டதாக அவர் தெரிவித் துள்ளார்.

இதற்கிடையே 2 ஆவது குழு வைத்தியர்கள் 15 பேர் இப்பயிற்சி யில் உள்ளனர். அவர்களில் ஒரு வர கூட தமிழ்நாட்டை சேர்ந்தவர் இலலை. 3 ஆவது வைத்தியர் குழு பயிற்சிக்காக வருகிற ஒக்டோபர் மாதம் அமெரிக்கா செல்கிறது. அதில் பூந்தமல்லி பொது சுகாதார நிறுவனத்தின் மருத்துவ அதிகாரி வைத்தியர் கல்பனா இடம்பெற்றுள் ளார். (இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுவட்டத்தில் கூடி நின்று கூவிப் பிதற்றல் அன்றி
நாட்டத்தில் கொள்ளாரடி – கிளியே
நாளில் மறப்பாரடி

பாரதியார்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## இளைஞர்களை உசுப்பேத்தாமல் அறிவுபூர்வமாக நடவுங்கள்

தமிழரசுக் கட்சியின் 15 ஆவது தேசிய மாநாடு வவுனியாவில் நடைபெற்றது. அரசியல் கட்சிகளின் மாநாடுகள் கூட்டப்படுவது வழமையான விடயம். கட்சியைப் பலப்படுத்துதல், தலைமைத்துவத்தை தெரிவு செய்தல், கட்சித் தொண்டர்களை உசார் படுத்தல், கட்சிக் கொள்கைகளை பிரகடனப்படுத்தல் என்பவற்றின் செயற்பாட்டிற்காக அரசியல் கட்சிகளின் மாநாடுகள் நடத்தப்படும் வழமையுண்டு.

அதிலும் இந்திய தேசத்தில் அரசியல் கட்சிகளின் மாநாடு என்றால் மாநிலங்கள் பெரும் விழாக்கோலம் பூண்டுவிடும். வீதிகள் எங்கும் கட்சித் தலைவர்களின் கட்டவுட்டுகள் தாராளமாகக் காட்சிப் படுத்தப்பட்டிருக்கும்.

அந்தளவிற்கு எங்கள் நாட்டில் அரசியல் கட்சி மாநாடுகள் களைகட்டுவதில்லை. ஆயினும் தமிழரசுக்கட்சியின் 15 ஆவது தேசிய மாநாட்டை வவுனியாவில் நடத்தியதன் மூலம் தமிழரசுக்கட்சி தன்னை பலப்படுத்தும் முயற்சியில் ஈடுபட்டுள்ளதென்பதும்,

தமிழ்த்தேசியக்கூட்டமைப்பை அரசியல் கட்சியாகப் பதிவுசெய்ய வேண்டும் என்ற கூட்டுக் கட்சிகளின் கோரிக்கையை பின்தள்ளிப் போடுவதற்கும் வழி சமைத்துள்ளதெனலாம்.

அரசியல் கட்சிகளின் தேசிய மாநாடு கூட்டப்படும் போது உணர்ச்சி பூர்வமான உரைகள் இடம்பெறுவது வழமையாயினும், அத்தகையதொரு உரையை தமிழரசுக்கட்சி மாநாடு செய்யக்கூடாதென்பதும் இங்கு அறிவுபூர்வமான வியூகங்களே அமைக்கப்பட வேண்டும் என்பதும் கவனத்தில் கொள்ளவேண்டிய முக்கிய விடயமாகும்.

எனினும் தமிழரசுக்கட்சியின் தேசிய மாநாட்டில் கட்சித்தலைவர்கள் சிலர் உணர்ச்சி பூர்வமாகப் பேசினர் என்பதற்கப்பால், தமிழ் இளைஞர்களை உசுப்பேத்தும் வகையில் பேசினர் என்பதை இவ்விடத்தில் கூறித்தான் ஆகவேண்டும்.

பல்லாயிரக்கணக்கான இளைஞர்களைப் பறிகொடுத்து விட்டு தலையிலும் நெஞ்சிலும் அடித்து அடித்துக் கண்ணீர் விடுகின்ற தமிழ்த் தாய்மாரின் அவலம் இன்னமும் தீர்ந்தபாடில்லாமல் இருக்க,

மீண்டுமொரு உசுப்பேத்தல் நடவடிக்கையில் தமிழரசுக்கட்சித் தலைவர்கள் ஈடுபடுவது அபத்தமான செயலாகும்.

எங்கள் விடுதலைப்போராட்டம் வெற்றியடைய முடியாததன் காரண காரியங்களை ஒரு தடவை மீள்வாசிப்பிற்கு உட்படுத்தினால், செல்வாக்கு மிக்கவர்கள், பணபலம் படைத்தவர்கள்; இயக்கத்தில் இணைந்த தங்கள் பிள்ளைகளை ஏதோ ஒரு வகையில் வெளிநாடுகளிற்கு அனுப்பி வைத்தனர்.

இன்னுமொரு தரப்பினர் நிலைமைகளை முன் கூட்டியே உணர்ந்து கொண்டு தம் பிள்ளைகளை அகதிகளாக ஐரோப்பிய நாடுகளுக்குப் போகச் செய்தனர்.

ஏழைவீட்டுப் பிள்ளைகள் விசுவாசத்தோடு மண் மீட்புப் போரில் ஈடுபட, சுயநலம் மிக்க சிலர் போராட்டத்திற்கு ஆதரவு போல காட்டி தங்கள் அலுவல்களைக் கனகச்சிதமாக நிறைவேற்றினர். இது எங்கள் போராட்ட வரலாற்றில் நடந்தேறிய கருமைப் பகுதியாகும்.

நிலைமை இவ்வாறாக இருக்க, எங்கள் அரசியல் தலைவர்களில் ஒரு சிலரைத் தவிர ஏனையவர்கள் தங்கள் பிள்ளைகளை– குடும்பங்களை வெளிநாடுகளில் தங்க வைத்து உயர் கல்வி கற்பதற்கும் தம் செல்வாக்கைப் பயன்படுத்திக் கொண்டு, இங்கு நின்று தமிழ் இளைஞர்களை உசுப்பேத்துவது எந்த வகையிலும் நியாயமாகாது.

எங்கள் உரிமைக்காக அறவழிப்போராட்டம் அவசியம் என்றால், உங்கள் பிள்ளைகளையும் இங்கு கூப்பிடுங்கள். நாம் எல்லோரும் சேர்ந்து அகிம்சை வழியில் போராடுவோம்.

இதைவிடுத்து உங்கள் பொழுதுபோக்கிற்கும் மாநாட்டில் கிடைத்த சந்தர்ப்பத்திற்குமாக வொங்கியெழுந்து உசுப்பேத்தாதீர்கள்.

மாறாக அரசியல் இராஜதந்திரத்தினூடாக– சர்வதேசத்தின் உதவியைப் பெற்று எங்கள் உரிமையை அடைய வியூகம் அமையுங்கள். அதுவே இன்றைய அவசிய தேவையாகும்.

# மாணவியை கடத்துவதாக அச்சுறுத்தி தாயிடம் கப்பம் பெற்ற ஐவர் கைது

யாழ்ப்பாணம், குடத்தனை பகுதியைச் சேர்ந்த 18 வயது பாடசாலை மாணவியொருவரை கடத்தப் போவதாக, அம் மாணவியின் தாயாரை அச்சுறுத்தி கப்பம் பெற்ற ஐந்து பேரை நேற்று முன்தினம் சனிக்கிழமை கைது செய்ததாக பருத்தித்துறை பொலிஸார் தெரிவித்தனர்.

குடத்தனை பகுதியில் கணவனை இழந்த பெண்ணொருவர், கல்வி பொதுத் தராதர உயர்தரம் படிக்கும் தனது மகளுடன் வசித்து வருகின்றார்.

இந்நிலையில், அப்பெண்ணின் மகளை கடத்துவதாக அச்சுறுத்தியுள்ள ஐந்து சந்தேகநபர்கள், மகளை கடத்தாதிருக்க வேண்டுமாயின் பணம் வேண்டும் என்று கூறி, மூன்று தடைவைகளில் 75 ஆயிரம் ரூபாயை கப்பமாகப் பெற்றுள்ளனர்.

தொடர்ந்து அதேபாணியில், சனிக்கிழமையன்றும் அச் சந்தேகநபர்கள், மேற்படி பெண்ணிடம் கப்பம் பெற முயற்சித்த போது, இதையறிந்த அப்பகுதி ஆசிரியர் ஒருவர், இது குறித்து பருத்தித்துறை பொலிஸ் நிலையத்திற்கு தகவல் வழங்கியுள்ளார்.

இதனையடுத்து, கப்பம் வாங்குவதற்காக மேற்படி நபர்கள் வந்திருந்தவேளை, அப்பகுதியில் மறைந்திருந்த பொலிஸார் அந்த ஐவரையும் சுற்றிவளைத்து கைது செய்துள்ளனர்.

அத்துடன், அவர்கள் பயணித்த 3 மோட்டார் சைக்கிள்களையும் கைப்பற்றியுள்ளனர்.

கைது செய்யப்பட்ட நபர்கள் உடுப்பிட்டி, வதிரி, கலிகை ஆகிய பகுதிகளைச் சேர்ந்த 22, 24, 27, 29, மற்றும் 30 வயதுடையவர்கள் என பொலிஸார் கூறினர். இது தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (செ-6)

## 'முல்லை முத்து' இன நிலக்கடலை அறிமுகம்

முல்லைத்தீவு மாவட்ட விவசாயிகளின் நிலக்கடலை செய்கையை மேலும் விருத்தி செய்வதற்காக முல்லை முத்து எனும் புதிய நிலக்கடலை இன விதையை அறிமுகப் படுத்தியுள்ளதாக முல்லைத்தீவு மாவட்ட விவசாய திணைக்களத்தின் பிரதிப் பணிப்பாளர் தே.யோகேஸ்வரன் தெரிவித்தார்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் நிலக்கடலையை செய்வதற்கு விவசாயிகள் மிகவும் ஆர்வத்துடன் இருக்கிறார்கள். நிலக்கடலையை அறுவடை செய்யும் விவசாயிகள், அதன் மூலம உற்பத்தி செய்யப்படுகின்ற உணவு வகைகளையும் தயாரிக்க வேண்டும் என தொடர்ச்சியாக ஆலோசனைகளை வழங்கி வருகிறோம் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

## திருவெண்காட்டில் இன்று தீர்த்தோற்சவம்

மண்டைதீவு திருவெண்காட்டுச் சித்தி விநாயகர் ஆலயத் தீர்த்தோற்சவம் இன்று காலையும் கொடி இறக்கம் இரவும் இடம்பெறும்.

மாலை நிகழ்வாக சிவஸ்ரீ உமா ரமணக்குருக்கள் மற்றும் ப.சிவமைந்தன் ஆகியோரின் தெய்வீக இசையரங்கும் இடம்பெறும். தொடர்ந்து ஜாக்கிரத சைதன்ய சுவாமிகளின் தெய்வீகப் பேருரை நடைபெறும். (ந)

## அல்லைப்பிட்டி இனிச்சபுளியடி முருகனுக்கு இன்று பாலஸ்தாபனம்

அல்லைப்பிட்டி இனிச்சபுளியடி அருள்மிகு ஸ்ரீ முருகன் ஆலய பாலஸ்தாபன கும்பாபிஷேகம் இன்று திங்கட்கிழமை காலை 9.00 மணி முதல் 10.41 மணி வரையுள்ள சுபநேரத்தில் நடைபெறும்.

இதனைத் தொடர்ந்து ஆலயக் கட்டுமானப் பணிக்கான அடிக்கல் நாட்டும் வைபவமும் நடைபெறும்.

பாலஸ்தாபன கும்பாபிஷேகத்தை சிவஸ்ரீ சி.பாலகிருஷ்ணக் குருக்கள் நடத்தி வைப்பார். (ந)

## மருந்தகத்தில் கொள்ளையடிப்பு

யாழ்.வடமராட்சி, புலோலியில் அமைந்துள்ள மருந்தகம் ஒன்றிலிருந்த பல இலட்சம் ரூபாய் பெறுமதியான பொருட்கள், நேற்று ஞாயிற்றுக்கிழமை அதிகாலை கொள்ளையடிக்கப்பட்டுள்ளதாக பருத்தித்துறை பொலிஸார் தெரிவித்தனர்.

மருந்தகம் மற்றும் மருந்தகத்தின் களஞ்சியசாலை ஆகியவற்றில் இருந்த பொருட்களே இவ்வாறு கொள்ளையடிக்கப்பட்டுள்ளன என்று பொலிஸார் தெரிவித்தனர்.

கொள்ளையடிக்கப்பட்ட பொருட்களில் பெரும்பாலான பொருட்கள் பால்மா மற்றும் ஊட்டச்சத்து மா வகைகள் அடங்குகின்றன என பொலிஸார் கூறினர்.

மருந்தகம் மற்றும் அதன் களஞ்சியறை என்பன கள்ளத் திறப்பு போடப்பட்டு திறக்கப்பட்டு, பொருட்கள் கொள்ளையடிக்கப்பட்டு வாகனம் ஒன்றின் மூலம் பொருட்கள் ஏற்றிச்செல்லப்பட்டுள்ளதாக பொலிஸாரால் சந்தேகிக்கப்பட்டு விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.(செ-6)

## தலைமைத்துவ பயிற்சி இன்று ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

பல்கலைக்கழக அனுமதி பெற்ற 23 ஆயிரத்து 500 மாணவர்களுக்கான தலைமைத்துவ பயிற்சிகள் இன்று திங்கட்கிழமை ஆரம்பிக்கின்றன. கன்னொருவ சக்தி மற்றும் பொறியியல் பயிற்சி பாடசாலையில் இந்த பயிற்சிகள் வழங்கப்படவுள்ளன.

மேற்படி குழுவினர், மூன்று பகுதியினராக பிரிக்கப்பட்டு மூன்று கட்டங்களாக இந்த பயிற்சிகள் நடைபெறவுள்ளன. இதன்பிரகாரம், முதலாவது குழுவினருக்கான பயிற்சிகள் இன்று ஆரம்பித்து எதிர்வரும் 27ஆம் திகதி வரை நடைபெறவுள்ளன.

இரண்டாவது குழுவினருக்கான பயிற்சிகள் ஒக்டோபர் 4ஆம் திகதி முதல் 30ஆம் திகதி வரை இடம்பெறவுள்ளன. மூன்றாவது குழுவினருக்கான பயிற்சிகள், ஒக்டோபர் 30 ஆம் திகதி முதல் நவம்பர் 21 ஆம் திகதி வரை இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (செ-6)

## அதிபர் கூட்டம் பிற்போடப்பட்டுள்ளது

(யாழ்ப்பாணம்)

யாழ்.கல்வி வலய அதிபர்களிற்காக நாளை இடம்பெறவிருந்த முதலாவது கூட்டம் தவிர்க்க முடியாத காரணத்தினால் பிற்போடப்பட்டு எதிர்வரும் 11 ஆம் திகதி காலை 9 மணிக்கு யாழ்.கல்வி வலயத்தின் முகாமைத்துவ மண்டபத்தில் இடம்பெறவுள்ளதாக யாழ்.கல்வி வலயத்தின் கல்விப் பணிப்பாளர் எஸ்.உதயகுமார் தெரிவித்துள்ளார். (செ)

## உணவகத்தை மூட நீதிமன்றம் உத்தரவு


(யாழ்ப்பாணம்)

யாழ்.மாநகர சபையின் எல்லைக்குட்பட்ட பகுதியில் இயங்கி வந்த பிரபல உணவு விடுதி ஒன்றை குறைபாடுகளை நிவர்த்தி செய்யும் வரை மூடுமாறு யாழ்.நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

சுகாதாரத்திற்குக் கேடு விளைவிக்கும் வகையில் சமையலறையின் கழிவு நீரைப் பொது வாய்க்காலினுள் செலுத்தியமை, உரிமம் பெறாது உணவு உற்பத்தியில் ஈடுபட்டமை, உணவு உற்பத்தி செய்யும் பகுதி சுகாதாரமற்ற முறையில் காணப்பட்டமை, உடல் நலத்திற்கு ஒவ்வாத வகையில் உணவு உற்பத்தியில் ஈடுபட்டமை ஆகிய குற்றச்சாட்டுக்களே உணவகத்திற்கு எதிராக முன்வைக்கப்பட்டிருந்தன. (செ)

## வேதாத்திரி மகரிஷியின் நற்சிந்தனை

### வேதாந்தம்- சித்தாந்தம்



தத்துவ ஞானியின் வாய்மொழியாகவோ அல்லது நூல் வழியாகவோ ஞான விளக்கத்தைப் பெற்றுக்கொண்டால் மட்டும் போதாது. முறையான அறிவுப் பயிற்சியும் வேண்டும். அகநோக்குப் பயிற்சி என்னும் உள்ளொடுங்கு பயிற்சியின் மூலம் அறிவை உயிரில் ஒன்றச் செய்து உயிரே தனது அடக்கத்தில் தன் மூலமான மெய்ப்பொருளாக மாறி நிற்கும் தன்மையை அனுபோக பூர்வமாகப் பெற்றாக வேண்டும்.

தானே அவனாகவும் அவனே தானாகவும் சிவனே சீவனாகவும் சீவனே சிவனாகவும் இருக்கும் நிலையை உரைமூலம் கேட்டு அறிவதோடு மனதை பழக்கி அந்த மனதினுள்ளேயே செலுத்தும் தவத்தின் மூலமாகவும் உணர்ந்து பார்க்கும் போதுதான் தெளிவோடு திருப்தியும் வரும். இதை நமது மனவளக்கலை மூலம் சாதிக்க முடிகிறது.

தோற்றங்களெல்லாம் பஞ்சபூதக் கூட்டென்றும் பஞ்சபூதங்கள் அணுவின் திரட்சி வேறுபாடென்றும் அணு இறை நிலையின் இயக்க நிலையென்றும் விளக்கம் சொல்வது வேதாந்தமாகும். பிறப்புக்கும் இறப்புக்கும் இடையில் உயிர்கள் அனுபோகம் பெறுவது இன்பம் துன்பம் இரண்டும்தான் உண்டு.

அந்த இன்ப துன்பங்கள் உணரப்பெறுவது மனதிலே ஆராய்ச்சியில் உயிரே மனமாகவும் இறைவனே உயிராகவும் இருப்பதைக் கண்டு அந்த இறைவனே நானாகவும் எல்லாமாகவும் இருக்கின்றான் என்று சொல்வது சித்தாந்தமாகும். துன்பத்தின் காரணத்தை அறியாதாரும் துன்பத்தை தோற்றுவிக்காமல் இன்பம் மட்டுமே விளையத்தக்க வகையில் தங்கள் வாழ்வை அமைத்துக்கொள்ளும் விதமாக இன்ப துன்ப இயல்பறிந்தோர் வகுத்த வாழ்க்கை முறையே பக்தி மார்க்கம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முக் கோண தொடர்

# அவுஸ்திரேலியாவை வீழ்த்தி தென்னாபிரிக்கா சம்பியன்



சிம்பாவே தலைநகர் ஹராரேயில் நடைபெற்ற முத்தரப்பு ஒருநாள் தொடரில் தென் ஆபிரிக்க அணி சம்பியனாகியுள்ளது.

சிம்பாப்வேயில் முத்தரப்பு ஒரு நாள்தொடர் நடைபெற்றது. இதில் சிம்பாவே, அவுஸ்திரேலியா, தென் ஆபிரிக்கா அணிகள் கலந்து கொண்டன.

தொடரின் இறுதிப்போட்டி நேற்று முன்தினம் நடைபெற்றது. இதில் பலமிக்க அணிகளான தென் ஆபிரிக்கா மற்றும் அவுஸ்திரேலிய அணிகள் மோதின.

நாணய சுழற்சியில் வெற்றி பெற்ற தென் ஆபிரிக்க அணித் தலைவர் டிவிலியர்ஸ் முதலில் களத்தடுப்பை தெரிவு செய்தார்.

இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய அவுஸ்திரேலிய அணி 50 ஓவர்கள் நிறைவில் ஒன்பது விக்கெட்டுகளை இழந்து 217 ஓட்டங்களை எடுத்தது. அவ்வணி சார்பாக பின்ச் 54 ஓட்டங்களையும் ஜெம்ஸ் போல்க்னர் 39 ஓட்டங்களையும் மிச்சல் ஸ்டார்க் ஆட்டமிழக்காமல் 29 ஓட்டங்களையும் பெற்றனர்.

தென் ஆபிரிக்கா அணி சார்பாக ஸ்டைன் நான்கு விக்கெட்டுகளையும் லெயன் பார்னல் மோர்ன் மோகல் தலா 2 விக்கெட்டுக்களை கைப்பற்றினர்.

218 என்ற வெற்றி இலக்கை நோக்கி துடுப்பெடுத்தாடிய தென் ஆப்ரிக்க அணி 40.5 ஓவர்களில் நான்கு விக்கெட்டுகளை இழந்து வெற்றிலக்கை தாண்டியது. தென் ஆபிரிக்க அணி சார்பாக திறமையாக விளையாடிய டுபிளசி 96 ஓட்டங்களையும் டிவில்லியர்ஸ் ஆட்டமிழக்காமல் 57 ஓட்டங்களையும் ஹாசிம் அம்லா 51 ஓட்டங்களையும் பெற்றனர்.







இதன்மூலம் ஆறு விக்கெட் வித்தியாசத்தில் தென் ஆபிரிக்கா அணி வெற்றி பெற்று, தொடரை கைப்பற்றியது.

இப்போட்டியின் ஆட்டநாயகனாக தென்னாபிரிக்கா அணியின் டேல்ஸ்டைனும் தொடர்நாயகனாக தென்னாபிரிக்க அணியின் டுபிளசி தெரிவானார்.

இந்த தொடரில் தொடர்ந்து சதம் அடித்தவர் என்ற சாதனையை டுபிளசி 4 ஓட்டங்களால் தவறவிட்டமை குறிப்பிடத்தக்கது. (க)

## பட்டம் வென்ற சானியாவுக்கு பிரதமர் மோடி வாழ்த்து



அமெரிக்க பகிரங்க டெனிஸ் போட்டியில் பட்டம் வென்ற சானியா மிர்சா ஜோடிக்கு, இந்திய பிரதமர் நரேந்திர மோடி வாழ்த்து தெரிவித்துள்ளார்.

நியூயோர்கில் நடைபெற்று வரும் அமெரிக்க பகிரங்க டெனிஸ் போட்டியின் கலப்பு இரட்டையர் பிரிவில், இந்தியாவின் சானியா மிர்சா ஜோடி இறுதிப்போட்டியில் வெற்றி பெற்று பட்டத்தை கைப்பற்றியது.

இப் போட்டி கலப்பு இரட்டையர் இறுதிப்போட்டி நடைபெற்றது. இதில் இந்தியாவின் சானியா மிர்சா புருனோ சோரஸ் ஜோடி, அமெரிக்காவின் அபிகேல் ஸ்பியர்ஸ் (அமெரிக்கா) சான்டிகோ கோன்சிலஸ் (மெக்சிகோ) ஜோடியை 6:1, 2:6, 11:9 என்ற கணக்கில் வீழ்த்தி சம்பியன் பட்டத்தை வென்றது.

மூன்றாவது கிராண்ட்ஸ்லாம் பட்டத்தை வென்ற சானியாவை வாழ்த்துவதாக பிரதமர் மோடி தனது டுவிட்டர் பக்கத்தில் செய்தி வெளியிட்டுள்ளார். சானியாவின் சாதனை நம்மை பெருமைப்படுத்துவதாக அமைந்துள்ளது என அவர் குறிப்பிட்டுள்ளார். (க)

## பிறிமாக் கிண்ண கிரிக்கெட் மன்னாரை வென்றது கிளிநொச்சி


கீர்த்திகன் அரைச்சதம், மிதுசன் அதிரடிப் பந்துவீச்சு பிறிமாக்கிண்ண கிரிக்கெட் போட்டியில் மன்னார் அணியை வீழ்த்தி அபார வெற்றி பெற்றது கிளிநொச்சி அணி.

வடமாகாண 15 வயதுப் பிரிவினர் அணியை தெரிவு செய்வதற்கான பிறிமா வெற்றிக்கிண்ணப் போட்டி கடந்த வெள்ளிக்கிழமை கிளிநொச்சி மத்திய மகா வித்தியாலய மைதானத்தில் நடைபெற்றது.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்றகிளிநொச்சிமாவட்டதெரிவுஅணியின் தலைவர் மிதுசன் முதலில் துடுப்பாட்டத்தை தெரிவு செய்தார்.

முதலில் துடுப்பெடுத்தாடிய கிளிநொச்சி மாவட்ட அணி 50 பந்துப் பரிமாற்றங்களின் நிறைவில் 9 இலக்குகளை இழந்து 246 ஓட்டங்களை குவித்தது.





துடுப்பாட்டத்தில் கீர்த்திகன் 51 ஓட்டங்களையும் பிரதீசன் 46 ஓட்டங்களையும் துவாரகன் 26 ஓட்டங்களையும் மிதுசன் 22ஓட்டங்களையும் அனுஸ்கன் 19 ஓட்டங்களையும் சஜீவன் 12 ஓட்டங்களையும் அதிகபட்சமாகப் பெற்றனர். பந்துவீச்சில் மன்னார் மாவட்ட அணி சார்பாக சுயன் 3, சூரியகுமார் 2, உசார், முயாகித், திலக்ஸன் தலா ஒரு இலக்குகளை வீழ்த்தினர். பதிலுக்கு 247 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு ஆடிய மன்னார், அணி 30.2 பந்துப்பரிமாற்றங்களில் சகல இலக்குகளையும் இழந்து 114 ஓட்டங்களை மற்றும் பெற்று 132 ஓட்டங்களால் அபார வெற்றியீட்டியது. துடுப்பாட்டத்தில் மன்னார் அணி சார்பாக தனராஜ் 21ஓட்டங்களையும் பிலால் 18 ஓட்டங்களையும்திரொன் 10 ஓட்டங்களையும் அதிகபட்சமாகப் பெற்றனர். பந்துவீச்சில் கிளிநொச்சி அணி சார்பாக அணித்தலைவர் மிதுசன் 5, வினிதன் 2 , சுஜீவன் 2, கனிஸ்டன் ஒன்று என இலக்குகளை வீழ்த்தினர். (க)

## தேசியமட்ட சதுரங்கப் போட்டிகள் ஆரம்பம்

இலங்கை பாடசாலைகளுக்கான தேசிய மட்ட சதுரங்க சுற்றுப்போட்டியானது கண்டி நுவகெல மத்திய கல்லூரியில் கடந்த வெள்ளிக்கிழமை ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றது.

இதில் ஒவ்வொரு மாகாணத்திலும் வெற்றி பெற்ற மும்மூன்று அணிகள் பிரதிநிதித்துவப்படுத்துகின்றன.

இதில் வடமாகாணத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் அணிகளாக 19 வயதின் கீழ் ஆண்கள் அணிகளின் யாழ்.மாவட்ட ஹாட்லிக் அணியும், யாழ். இந்துக் கல்லூரி அணியும் 15 வயதின் கீழ் ஆண்கள் அணியில் யாழ் ஹாட்ரிக் அணியும் இந்துக் கல்லூரி அணியும் யாழ். நெல்லியடி மத்திய கல்லூரி அணியும் 19 வயதின்கீழ் பெண்கள் பிரிவில் பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப்பாடசாலை அணியும் வடமராட்சி இந்து மகளிர் கல்லூரி அணியும் பங்குபற்றுகின்றன.

15 வயதின் கீழ் பெண்கள் பிரிவில் வேம்படி பெண்கள் உயர்தரப் பாடசாலை அணியும் பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை அணியும் தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி அணியும் பங்குபற்றி வருகின்றன.

மாகாணமட்டப் போட்டியில் வெற்றியீட்டிய போதிலும் அருணோதய கல்லூரி அணிகள் பங்குபற்றவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

இப்போட்டிகளானது காலை 9 மணிக்கு பாராளுமன்ற உறுப்பினர் ஸ்ரீக்பிரசக்னா வீரவர்த்தனேவினால் உத்தியோக பூர்வமாக ஆரம்பித்து வைக்கப்பட்டது. (க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை...

போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில், ஒரே யொரு தீர்வு தான் உண்டு என்று அந்த இலக்கை நோக்கிச் செல்பவர்கள் அது கிடைக்காவிட்டால் என்ன செய்வது என்பதையும் மனதில் கொள்ள வேண்டும். இல்லையென்றால் மகாபாரதத்தில் அபிமன்யுவுக்கு நேர்ந்த கதிதான் நடக்க நேரிடும். வியூகத்தை உடைத்து உட்செல்ல அறிந்திருந்தவனுக்கு வெளியேவர வழி தெரியவில்லை. பலர் சேர்ந்து அவனைக் கொன்று விட்டனர். எனவே மாற்றுவழியொன்றை மனதில் நிறுத்தாமல் எம் இளைஞர்கள் நுழைந்த பாதை இப்பொழுது எங்கே எங்களைக் கொண்டு வந்து விட்டிருக்கின்றது என்பதை நாம் ஊன்றிக் கவனிக்க வேண்டும். அரசாங்கத்தின் போர் வெற்றி எப்பேர்ப்பட்ட ஒரு இயல்பை வடகிழக்கு மாகாணங்களில் ஏற்படுத்தியுள்ளது என்பதை நாங்கள் உணர்ந்து கொள்வோமாக. போரினால் பாதிக்கப்பட்ட மக்கள் வாழ்வாதாரங்கள் இன்றி வாடும் நிலை, போர் எம்மக்கள் மனதில் ஏற்றிய பயம், பீதி ஆகியவற்றினால் ஏற்பட்டுள்ள பாதிப்புநிலை, இராணுவ கட்டுப்பாட்டினுள் எம்மக்கள் இடரும் நிலை, எம்மக்களின் பாரம்பரிய வாழ்விடங்களில் பிறமாகாணத்தில் இருந்து கொண்டுவந்து வேற்று மக்களைக் குடியிருத்தும் நிலை, 13-வது திருத்தச் சட்டத்தின் வலுவற்ற நிர்வாக நிலை, எமது சிறிது அளவான நிர்வாக அதிகாரத்தினுள்ளும் திவிநெகும என்ற சட்டம் செய்துள்ள ஊடுருவல் நிலை போன்ற பலதையும் எதிர் நோக்கும் நிலையில் எம்மக்கள் உள்ளனர்.

இந்தச் சூழ்நிலையில் இலங்கைத் தமிழரசுக் கட்சி ஒரு கட்சி என்ற முறையில் மனதிற்கு எடுக்க வேண்டியபல விடயங்கள் உள்ளன என்பதை நாம் மறந்து விடக் கூடாது. இதனை அரசியலில் இதுவரைகாலம் உள் நுழையாது நின்று அரசியலில் ஈடுபட்டுள்ள ஒருவராகக் கூற விரும்புகின்றேன். ஒரு புத்தி ஜீவியின் கருத்தாக அதை எடுத்துக் கொள்ள வேண்டுமேயொழிய ஒரு அரசியல்வாதியாக என் கூற்றுக்களை எடைபோடாதீர்கள் என்று தாழ்மையுடன் உங்களிடம் கேட்டுக் கொண்டு எனது கருத்துக்களை முன்வைக்கின்றேன்.

முதலாவது இலங்கைத் தமிழரசுக் கட்சி முதிய தலைவர்களுக்குக் கொடுக்கும் முக்கியத்துவத்தை இளைய மக்கட் தலைவர்களுடன பகிராதிருப்பது எனக்கு ஒரு தளர்வு நிலையாகத் தோன்றுகின்றது. எவ்வாறு ஆயுதம் ஏந்தியவர்கள் தாம் இல்லாது போனால் பொது மக்களுக்கு என்ன நடக்கும் என்று சிந்திக்காது போர் நடத்தினார்களோ அதேபோல் எமது சிரேஷ்ட தலைவர்கள் தாங்கள் சடுதியாகப் போய்விட்டால் என்ன நடக்கும் என்று சிந்தித்துச் செயலாற்றுகின்றார்களா என்ற கேள்வி என் மனதில் பூதாகாரமாக இருந்து வருகின்றது.

தற்போது இராணுவத்தினர் எமது குடும்பங்கள் அனைவரையும் பற்றி சகல விபரங்களையும் கணணியில் உள்ளடக்கி வருகின்றார்கள். எம்முள் பலருக்கு இதுபற்றி எதுவுமே தெரியாது. எமது உடல் கூறும் மொழி சம்பந்தமாக இராணுவம் ஆராய்ந்து வருவதைப் பற்றி ஒரு வெளிநாட்டுப் பிரதிநிதியுடன் பேசிக்கொண்டிருந்தேன். ஒருவர் இருக்கும் விதம், சிரிக்கும் விதம், முறைக்கும் விதம், கைகால்களை அசைக்கும் விதம் எல்லாவற்றையும் படம் பிடித்து எடுத்து அவற்றில் இருந்து அந்த மனிதரை எடைபோடக் கூடியதாக விஞ்ஞானம் வளர்ந்துள்ளது. இந்தக் கலையில் ,ஸ்ரேல் நாடுதான் முன்னணியில் நிற்கின்றது. எமது அரசாங்கம் அந்நாட்டுடன் சுமுகமான உறவினைப் பேணிப் பாதுகாத்து வருகின்றது. ஆகவே இராணுவம் வடமாகாணத்தில் இருந்து புல்லுத்தின்று கொண்டிருக்கவில்லை என்பதை எம்மக்கள் உணர வேண்டும்.

எமது இளந்தலைவர்கள் தலைமையின் கீழ் எமது இளைஞர்கள் இராணுவம் பற்றிய சகல விபரங்களையும் சேகரிக்க வேண்டிய அவசியம் தற்போது எழுந்துள்ளது. எங்கெங்கே, எத்தனைபேர், எவ்வளவு ஏக்கர் நிலத்தில் இருக்கின்றார்கள், என்னென்ன வேலைகளில் ஈடுபட்டிருக்கின்றார்கள் போன்ற பல தரவுகளையும் பெற்றுக் கொடுக்க எமது மக்கள் குறிப்பாக இளைஞர் யுவதிகள் ஆற்றுப்படுத்தப்பட வேண்டும். எமது கட்சி முன்னர் போல் மேடைப் பேச்சுக்கள் பேசுவதுடன் இருந்து விட முடியாது என அவர் தெரிவித்தார். (செ-6)

# ஜப்பான்...

பேச்சுவார்த்தைகளை அடுத்து இருநாடுகளும் வெளியிட்டுள்ள கூட்டறிக்கையில், கடல்வழி வர்த்தகத்தில் இலங்கை ஜப்பானுக்கும் இடையிலான ஒத்துழைப்பு வலுப்படுத்தப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஜப்பானின் சர்வதேச நிதி உதவிகள் மூலம் இலங்கையில் சமூகப் பொருளாதார வளர்ச்சிப் பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருவது தொடர்பில் இலங்கை ஜனாதிபதி ஜப்பானியப் பிரதமருக்கு இக்கூட்டறிக்கையில் நன்றி தெரிவித்துள்ளார்.

இலங்கையில் தொழில்துறையிலும், உள்நாட்டுக் கட்டமைப்பிலும் தொழில்நுட்ப வளர்ச்சியிலும் கூடுதலான முதலீடுகளை செய்ய ஜப்பான் சம்மதம் தெரிவித்துள்ளது.

யுத்தத்துக்கு பின்னரான சமூக நல்லிணக்கத்தில் இலங்கை கண்டுவரும் முன்னேற்றங்களை ஜப்பானியப் பிரதமர் பாராட்டியுள்ளதாகவும்,

இலங்கை அரசாங்கம் ஐ.நாவின் புதிய மனித உரிமை ஆணையாளருடன் பேச்சு வார்த்தையில் ஈடுபட ஜனாதிபதி ராஜபக்ஷ விருப்பம் தெரிவித்துள்ளதாகவும் இந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஐ.நாவின் புதிய மனித உரிமை ஆணையாளர் இளவரசர் சயிட் அல் ஹுசைன் 2014ஆம் ஆண்டில் இலங்கை வந்து நிலைமைகளை பார்வையிட இலங்கை அரசு அழைப்பு விடுக்கும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மனித உரிமைகள் விவகாரத்தில் இலங்கை கண்டுள்ள முன்னேற்றங்களை இந்தக் கூட்டறிக்கையில் பாராட்டியுள்ள ஜப்பானியப் பிரதமர், எல் எல் ஆர் சி பரிந்துரைகள் அமுலாக்கப்பட வேண்டும் என்றும், சர்வதேச சமூகத்துடன் இலங்கை தொடர்ந்து ஒத்துழைக்க வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டுள்ளார். இருபத்து நான்கு வருட இடை வெளிக்குப் பின்னர் ஜப்பானியப் பிரதமர் ஒருவர் இலங்கை வந்துள்ளார் என்பது இங்கே குறிப்பிடத்தக்கது. (செ-6)

# சட்டச்...

தகவலை வெளியிட்டார்.

இதுதொடர்பில் அவர் மேலும் கருத்து வெளியிடுகையில், ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ மூன்றாவது தடவையாக தேர்தலில் போட்டியிடுவது சட்ட ரீதியானதா என்பது குறித்து ஆராய்வதற்காக இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் நிபுண்ர் குழுவொன்றை நியமிக்கவுள்ளது.

முன்னாள் பிரதம நீதியரசர் சரத் என் சில்வா, ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ மூன்றாவது தடவையாக தேர்தலில் போட்டியிட முடியாது என அண்மையில் கருத்து வெளியிட்டிருந்தார்.

இதைத் தொடர்ந்தே அவர் வெளியிட்ட சட்ட சர்ச்சை குறித்து ஆராய நிபுணர் குழுவை நியமிக்க அரசாங்கம் எண்ணியுள்ளது.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ மூன்றாவது தடவையாக தேர்தலில் போட்டியிடுவாரா யின நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் அரசியலமைப்பில் இன்னொரு மாற்றத்தை கொண்டு வரவேண்டும்.

ஜனாதிபதிக்கு இரண்டு தடவைக்கான ஆணையையே நாட்டு மக்கள் வழங்கியுள்ளதால், அவர் சர்வஜன வாக்கெடுப்பைக்கூட நடத்த வேண்டிய நில்லை ஏற்படலாம். இது மிகவும் குழப்பகரமான விடயம் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (செ-6)

# சர்வதேச...

தீர்க்கமாய் பொருத்தமாய் இருக்கிறது.

சர்வதேச இராஜதந்திர சந்தர்ப்பமும், குறிப்பாக இந்தியாவின் புதிய அரசின் சந்தர்ப்பமும் புலம்பெயர்ந்து வாழும் எமது உறவுகளின் பயனுள்ள உழைப்பும் கைகூடியுள்ள இச்சந்தர்ப்பத்தைப் பற்றி நின்று இம்மாநாட்டில் பொருத்தமான இலக்கை எய்துவதற்கான இலட்சியம் நிறைந்த தீர்மானங்களை எடுப்போம் என அழைப்பு விடுக்கின்றேன்.

தந்தை செல்வநாயகத்தின் சுவட்டிலிருந்து அமிர் அண்ணன், தளபதி அமிர்தலிங்கம், யாழ்ப்பாணத்தில் மல்லாகத்திலே 12 ஆவது தமிழரசு மாநாட்டிலே இத்தாலியின் கரிபால்டி அழைத்ததுபோல் இளைஞர் சமுதாயத்தை போராட்டத்துக்கு அழைக்கிறேன என்ற தலைவனின் பாசறையிலிருந்தும் தமிழர் நிலம் எங்கணும் சிங்களச் சிறைகள் பலவும், என் வியர்வையும் இரத்தமும் சிந்தி உயிரே போய்விட்டதென்று தூக்கி வீசப்பட்டு உயிர் மீண்ட சந்தர்ப்பங்களினதும் அனுபவங்களினதும் ஒரு தொண்டனாக பக்குவம் பெற்றவன் நான்.

என்னை இன்று எம் தேசத்தின் தலைவராக விளங்கும் சம்பந்தன் அவர்களும் வடக்கு மா்நிலத்தின் முதல்வரும் முன்னாள் நீதியரசரும் எம் கட்சிக் குழாத்தினரும் தமிழரசுக் கட்சியின் 15ஆவது தேசிய மாநாட்டில் எட்டாவது தலை மைப் பொறுப்புக்கு தொண்டனாக விளங்கும் என்னைத் தெரிவு செய்தமைக்காக எமது கட்சியின் தலைமைக்கும் உறுப்பினர்களுக்கும் என் இதயம் நிறைந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன் என கூறி மாவை எம்.பி தனது நீண்ட உரையை ஆற்றியிருந்தார். (செ-6)

# மகிந்தரின்...

இன்னும் இன்னும் வலங்குவேன், நீங்கள் முன்னேர் வேண்டும், உங்கள் பிரதேசம் முன்னேர் வேண்டும் என்று ஜனாதிபதி தான் படித்த தமிழில் கூறியிருக்கமாட்டார் என வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரன் பொது மேடையில் வைத்து ஜனாதிபதியை கிண்டலடித்துள்ளார்.

வவுனியா நகர கலாசார மண்டபத்தில் இலங்கை தமிழரசு கட்சி மாநாடு கடந்த மூன்று நாட்களாக இடம்பெற்றது . இதில் கலந்து கொண்ட முதலமைச்சர் அங்கு விசேட உரையாற்றியிருந்தார். இந்த உரையின் போது ஜனாதிபதியையும், அரச தரப்பினரையும் கடுமையாக விமர்சித்த அதேவேளை ஜனாதிபதியின் தமிழ் உச்சரிப்பையும் கிண்டலடித்திருந்தார். முதலமைச்சர் அங்கு மேலும் உரையாற்றுகையில்,

வடமாகாண முதலமைச்சரைப் பக்கத்தில வைத்துத் தனிமையில் பேச வேண்டும் என்று சகோதரர்கள் இருவரும் காரணமில்லாமல் வெவ்வேறாகக் கருத்து வெளியிட்டிருக்க மாட்டார்கள்.


காரணமில்லாமல் நல்லூர் முருகனின் திருவிழாக்காலத்தில் "இன்னும் இன்னும் வலங்குவேன்" "நீங்கள் முன்னேர் வேண்டும்" "உங்கள் பிரதேசம் முன்னேர் வேண்டும்" என்று ஜனாதிபதி தான் படித்த தமிழில் கூறியிருக்கமாட்டார். இது அரசாங்கத்தின் குழப்ப நிலை.

எமக்குள்ளும் ஒரு குழப்பநிலை. எம்மைப பொறுத்த வரையில் மூன்று விதமான எமது தமிழ் மக்கள் உலகெங்கணும் இருந்து ஒருவரை ஒருவர் சாடி நிற்கின்றார்கள். "இன்று தந்ததை எடு" "தருவதை ஏற்றுக்கொள்" "தலையெழுத்தை மாற்ற முடியாது" "கிடைப்பதைச் சுருட்டிக்கொள்" என்று ஒருசாரார் கூறுகின்றார்கள். அவர்கள் கிடைப்பதைச் சுருட்டிக் கொண்டவர்களாகக் காலம்.கடத்துகின்றார்கள். தீர்வோ கிடைத்தபாடில்லை.

எனவே வடமாகாணசபை வந்தமை பெரும்பான்மையினரை மட்டும் அன்றி எம்மையும் சில குழப்பங்களில் மாட்டிவிட்டுள்ளது என அவர் மேலும் தெரிவித்தார். (செ-6)

# மரண அறிவித்தல்

## வீரகத்தி தம்பையா



நெடுங்கேணி, கரவெட்டி கிழக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட வீரகத்தி தம்பையா 07.09.2014 அன்று காலமானார்.

அன்னார் அன்னப்பிள்ளையின் அன்புக் கணவரும், மகேஸ்வரி, இராசையா, செல்லத்துரை ஆகியோரின் சகோதரரும் கலையரசன் (சுவீடன்), அம்பிகாதேவி, கலைச்செல்வன் (ஆசிரியர் ஹாட்லிக் கல்லூரி), கலைவாணன் (சுவீடன்), கலைவாணி (சுவீடன்), மதிவதனி (சுவீடன்) ஆகியோரின் அன்புத் தந்தையும் சாந்தி (சுவீடன்), சற்குணேஸ்வரன், ஜெயந்தி (ஆசிரியை-யா/செம்பியன்பற்று றோ.க.த.க பாடசாலை), கவிதா (சுவீடன்), இந்திரகுமார் (சுவீடன்), சுந்தரமூர்த்தி (சுவீடன்) ஆகியோரின் மாமனாரும், அமரர் சின்னத்துரை மற்றும் தங்கத்துரை (ஓய்வுபெற்ற கிராம அலுவலர்), செல்லம்மா ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரது ஈமக்கிரியைகள் இன்று (08.09.2014) திங்கட்கிழமை காலை 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக சோனப்பு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

நெடுங்கேணி,
கரவெட்டி கிழக்கு, கரவெட்டி.

(சி-8449)

தகவல்:-குடும்பத்தினர்
021 2262034


# கண்ணீர் அஞ்சலி



## திருமதி சிவயோகநாயகி வேலாயுதபிள்ளை

எமது நிறுவனத்தின் முன்னாள் கணக்காளர்
திரு.சு.வேலாயுதபிள்ளை அவர்களின்
அன்பு மனைவி
திருமதி சிவயோகநாயகி வேலாயுதபிள்ளை
அவர்களின்
மறைவுச் செய்தி அறிந்து ஆழ்ந்த துயரமடைகின்றோம்.
அவரின் மறைவுக்கு எமது கண்ணீர் அஞ்சலியைக்
காணிக்கையாக்கி அவரின் குடும்பத்தினருக்கு
எமது ஆழ்ந்த அனுதாபங்களைத்
தெரிவித்துக் கொள்கின்றோம்

(கு)

வலம்புரிக் குடும்பம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digital விஷேட கட்டண சலுகைகள்

# இண்டர்நஷனல் எக்ஸ்பிரஸ் பொதி விநியோக சேவை



- 200க்கும் மேற்பட்ட நாடுகளுக்கான உலகின் முதற்தர கூரியர் நிறுவனம் மூலம் தபால் மற்றும் பொதி விநியோக சேவையினை தரமாகவும் பாதுகாப்பாகவும் அனுபப்பிட நாடுங்கள்
- நிர்ணயிக்கப்பட்ட குறைந்த கட்டணம்
- மிகச்சிறந்த வாடிக்கையாளர் சேவை
- அனுப்பும் பொதிகளுக்கான உத்தரவாதம்

WESTERN UNION MONEY TRANSFER

மிக விரைவான பணப்பரிமாற்ற சேவையினை நம்பிக்கையாகவும் பாதுகாப்பாகவும் பெற்றுக்கொள்ள முடியும்

62/16 ஸ்ரான்லி வீதி (சம்பத்வங்கி முன்பாக) யாழ்ப்பாணம்
தொடர்புகளுக்கு - 021 753 8330, 0777 151 101
(C-8440)



# STUDY IN UK , LATVIA

(AUSTRALIA, CANADA, NEW ZEALAND, USA,HUNGARY ) EUROPE

- G.C.E O/L , A/L சித்தியடைந்திருந்தலே போதும்.
- அரச கல்லூரிகளில் பட்டப்படிப்பு.
- வேலை செய்து படிக்கக்கூடிய அரிய வாய்ப்பு.
- 5 வருடகால அனுபவம்மிக்க வீசா சட்டஆலோசகரால் வீசா சட்டஆலோசனை.
- இலவசமாக நேரில்வந்து சட்டஆலோசனைகளை அறிந்துகொள்ளக்கூடிய அரிய சந்தர்ப்பம்.
- 150 இற்கும் அதிகமான வீசாக்களை பெற்றுக்கொடுத்த சாதனை.
- IELTS & A1,B1 Special வகுப்பு ஒழுங்குகள்

AFTER A/L

City & Guilds Approved Centre-UK

Gity & Guilds பரீட்சையில் சித்தியெய்து LONDON சென்றவர்கள் விபரம்.

1. Puvanenthiran mayoora
2. Thavarathinam kapila
3. Piragash malini
4. Murukaiya sarmila
5. Subramanium thayavathi

கடந்த 9 மாதங்களில் மட்டும் எமது நிறுவனத்தினூடாக 60 மாணவர்களிற்குமேல் City&Guilds English Diploma (UK) A1,B1 பரீட்சையில் சிறந்த,அதிசிறந்த பெறுபேறுகளை தட்டிச்சென்றுள்ளனர்.

மாணவர்களே! பெற்றோர்களே!! வள்மான சந்தர்ப்பம் பயன்பெற்றுக்கொள்ளுங்கள்.

City&Guilds நிறுவனத்தில் ஆசிரிய பயிற்சிபெற்ற மேல்மாகாண ஆசிரியரின் வழிகாட்டலில் IELTS வகுப்புக்களும் நடைபெறுகின்றது.

WORLD EDUCATION CONSULTANCY
No:377, Sangaththanai, Chavakachcheri.
021 7200 989; 0779265447

Branch:
No.04, Kesavil Road, Kokkuvil, Jaffna.
(சி-8446)



தமிழ்ப் பாடத்தில் உயர்ந்த பெறுபேற்றிற்கு ஒரே வழி விசேட வகுப்புக்கள்
(7722)
அழையுங்கள்:-
0767198101, 0766988126


## ஐ.நா ஆணையாளருக்கு...

டார் என்று இலங்கை அரசு நம்புவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இதேவேளை, ஐக்கிய நாடுகள் சபையின மனித உரிமைகள் ஆணையாளர் சயிட் அல் ஹுசனை இவ்வருடத்துக்குள் இலங்கைக்கு விஜயம் செய்யுமாறு அழைப்பு விடுக்கவும் என ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ இலங்கைக்கு விஜயம் செய்துள்ள ஜப்பான் பிரதமர் ஷின்சோ அபேவிடம் கோரிக்கை விடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (செ-6)


சந்நிதியின் அருளால் ஆரோக்கியம் தழைக்கட்டும்

# மாபெரும் அறிமுக விற்பனை

Sylo ICE CREAM



பால், வெண்ணை, தேன், பாதாம், பிஸ்தா, முந்திரி, திராட்சை, அத்திப்பழம் போன்ற இயற்கையான ஊட்டச்சத்துக்கள் நிறைந்த புதிய தலைமுறை அம்சங்களுடன், TCT, Preser Vative இராசாயனங்கள் சேர்க்காமல் அதிஉயர் தொழில் நுட்ப முறையில் உங்கள் ஆரோக்கியத்தின் மீது அக்கறையுடன் தயாரிக்கப்படும் ஐஸ்கிறீம் வகைகள் அறிமுகவிலையில்!


Hot Line:-0777710785
Phone:-021 221-2003

சந்நிதியின் கோவில் முன்புறம் எமது விற்பனை நிலையத்தில் பெற்றுக் கொள்ளலாம்
(வாடிக்கையாளர் அனைவருக்கும் கந்தசஸ்டி கவசம் இலவசமாக வழங்கப்படும்)




Factory
இல.76 அம்மன் கோவில் வீதி
கொக்குவில் கிழக்கு.யாழ்ப்பாணம்
(7548)


# 5-ம் ஆண்டு நினைவஞ்சலிகள்



## அருள்நங்கை சண்முகநாதன் அவர்களின் சிரேஷ்ட புத்திரன்

## சிரஞ்சீவி சந்துதன்

தெய்வத்திருமகனே தெய்வமணம் கமழ் சந்துதனே!
நிதம் நிதம் நினைத்துத் தேம்பும்
சிந்தனை மறவாத் திருமுகம்!
பெற்றோர் மட்டுமன்றி மற்றோர்களையும்
உறையச் செய்யுமே!



(7786)

என்றும் உன்னை மறவாது வாழும்: மோமையா மாமா குடும்பத்தினர்கள்
சிவஸ்ரீ. தியாக.சோமாஸ் கந்தராஜாக் குருக்கள் புவனேஸ்வரியம்மா
நெல்லண்டைப் பத்திரகாளியம்மன் கோவில் தும்பளை, பருத்தித்துறை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 08.09.2014 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.